padippakam

மக்கள்
# களம்

5

## அமைப்பின்றி ஓரணுவும்...

"விதிகள் வேண்டாம்
வட்டங்கள் வேண்டாம்.
சட்டங்கள் வேண்டாம்
வேலிகள் வேண்டாம்
அமைப்புகள் வேண்டாம்."
இந்த வேண்டாம்கள் எல்லாம்
நின்றன, ஒரே மைதானத்தில்
ஒலித்தன ஒரே அலை வரிசையில்.
பேசின ஒரே குரலில்
ஒத்த குரல்கள் கைகளை குலுக்கின.
குலுக்கிய கைகள் கோர்த்தன.
கோர்த்துக் கோர்த்து
சங்கிலிகளாய் இறுகி.....இறுகி....
ஓர் அமைப்பாய்
அடடா!
மீண்டும் ஓர் அமைப்பாய்

- புதிய ஜீவா

கலை • இலக்கியம் • அரசியல்

படிப்பகம்

padippakam

"நூறு பூக்கள் மலரட்டும் நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்"

மக்கள் தளம்

5

மே - ஜூன் 1995

இரு மாத இதழ்

ஆசிரியர் குழு:
உமா சந்திரன்
பாண்டியன்
மதன்
நாகரத்தினம்

ஆண்டுச் சந்தா ரூ 50-00
தனி இதழ் ரூ 10-00

வெளியிடுபவர்:
எஸ். உமாசந்திரன்
B 24 முருகேச நாயக்கர் மேன்சன்,
279, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை
சென்னை-600 005.

அச்சாக்கம்:
அலைகள் அச்சகம்,
தெற்குசிவன் கோவில் தெரு
கோடம்பாக்கம், சென்னை - 24.

படைப்புகள்/சந்தா அனுப்பிட
மக்கள் தளம்
C\O சரவண பாலு பதிப்பகம்
4/117-அ. இந்திரா நகர்
கீழ்பெரும்பாக்கம்
விழுப்புரம் - 600 005.

உள்ளே_

❑ சிறுகதை :
ரத்தக் கடன்

❑ உலகவிடுதலைப் போராளிகள் தொடர்
இல்மஸ் குனே

❑ கட்டுரை:
1. தடா அகற்றப்பட வேண்டிய அரசு பயங்கரவாத சட்டம்
2. சனநாயகப்புரட்சியும், குட்டி முதலாளித்துவ தேசிய வாதமும்.
3. நீலி, கண்ணகி இலக்கியங்கள் காட்டும் மாதிரிப்பெண்கள்
4. கோபன் ஹேகன்:
புதிய காலனியச் சுரண்டலுக்குத் தலைமையேற்கும் ஐக்கிய நாடுகள் சபை.
5. ஊழல் அம்பலமும் தொடர்பு சாதனங்களும் பார்வையாளர்களாக மக்கள்.
6. இறால் மனிதனுக்கு உணவு
இறால் பண்ணைகளுக்கு மனிதனே உணவு.

❑ கவிதை:
1. இருளின் முகத்தை மாற்றி அமைக்கிறோம்.
2. இது தாண்டா எம்.எல்.ஏ.
3. நாங்களும் மனிதர்கள்தான்
4. கிழக்கு மாதத்தின் சிவப்புப் பழங்கள்.

❑ விவாத மேடை
1. சாதி ஒழிப்பும் தலித் விடுதலையும்
2. தலித் ஒற்றுமை

❑ நூல் அறிமுகம்:
சமூக விடுதலையும்
தாழ்த்தப்பட்டோரும்

**அன்பார்ந்த வாசகர்களக்கு, மேதினி போற்றிடும் மே தின வாழ்த்துக்கள்.**

**மக்கள் தளம்** வாசகர் தளத்தில் பெரிதும் வரவேற்பைப் பெற்றதுகண்டு எங்களுக்கு புதிய ஊக்கம் பிறந்துள்ளது.

இந்த இதழில் பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. விவாதத்துக்குரியவை. எங்களுக்கு எழுதுங்கள். விமர்சியுங்கள். உர மூட்டுங்கள் எங்களை படைப்புகள்/ சந்தா அனுப்புவதன் மூலம்.

✻ ✻ ✻

கம்யூனிசம் வீழ்ந்து விட்டது எனக் கொக்கரித்த அய்ரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் இன்றைக்கு முதலாளியத்தின் நெருக்கடிகள் கூர்மையாகிவிட்டது. முன்னாள் சோசலிச நாடுகளில் நடந்த மே தின ஊர்வலங்கள், பேரணிகள் நமக்கு

padippakam

# இல்மஸ் குணே

—யமுனா ராஜேந்திரன்

குர்திஸ் மக்களைப் போன்றே இல்மஸ் குணே சிறையில் அடைபட்டிருக்கும் ஒரு துருக்கிய மனிதன் ஒரு மனிதன் சிறைபட்டிருக்கும்போது அதை உடைத்துக் கொண்டு வெளிவர அவன் பல்வேறு வழிகளில் முயல்வான். சன்னல்களை உடைத்துக் கொண்டு, அறை முகட்டை உடைத்துக் கொண்டு, கதவுகளை உடைத்துக் கொண்டு வெளியேற முயல்வான். ஆகவே இல்மஸ் குணே பொதுவுடைமை மூலம் முயற்சித்தார். அவர் முயற்சிப்பார். பிறிதொரு நாளில் அவர் விடுதலைக்கான சரியான வழியைக் கண்டடைவார். இல்மஸை நான் இவ்வாறுதான் கருதுகிறேன்.

அவரது நிலைப்பாடு சரியானது, அறிவுப் பூர்வமானது, உண்மையான உணர்ச்சி சார்ந்தது. அவரது மக்களையும் அவரைத் தன்னளவிலும் விடுவித்துக் கொள்வதற்கான தேவையினின்றும் எழுந்தது.

—கோஸ்டா கார்வஸ்

பிரெஞ்சு திரைப்பட இயக்குநர்

குர்திஸ் மக்கள் முக்கியமாக ஈரான், ஈராக், துருக்கி, சிரியா போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள். முன்னாள் சோவியத் யூனியன் எல்லைக்குள்ளும் அவர்கள் வாழ்கின்றனர். எல்லா நாடுகளிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வாழும் அம்மக்கள் தமக்கென்று ஒரு சொந்த நிலம் வேண்டி போராடிக் கொண்டு இருக்கின்றனர். குறிப்பிட்ட வெவ்வேறு நாடுகளில் பல்வேறு குழுக்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்தாலும், ஐக்கியப் பட்ட ஒரு போராட்டத் தலைமைக்கான முயற்சியை மேற் கொண்டிருக்கிறார்கள்.

படிப்பகம்

padippakam



இச்சூழலில் இருந்துதான் இல்மஸ் குணே துருக்கியையும் உலகத்தையும் தரிசிக்கிறார்.

இல்மஸ் குணே துருக்கிய சமூகத்தின் மிக மிக ஒடுக்கப் பட்ட சமூகத்தினரான குர்திஸ் மக்களிடையே இருந்து வந்தவர். அவரது பெற்றோர் நிலமற்ற குர்திஸ் கூலி விவசாயிகள்.

இல்மஸ் குணேவின் படைப்புலகம் அடிப்படையில் அடக்கு முறைக்கு எதிரான மனிதர்களின் உலகம். அவரின் கலாச்சார வாழ்க்கையானது துருக்கி மக்களின், அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் விளைவால் கட்டமைக்கப்பட்ட ஒன்று. விரிந்த அளவில் உலகக் கட்டமைப்பையும் அதிகார உறவுகளையும் மாபெரும் சிறைகளாகவே அவர் காண்கிறார்.

குணே துருக்கி வெகுசன சினிமாவின் வெகுசன கதா நாயகன். 24 ஆண்டுகள் துருக்கியின் தேசிய சினிமா நட்சத்திர மாகக் குணே திகழ்ந்தவர். இந்த ஆண்டுகள் துருக்கியின் அரசிய லோடு இரண்டறக் கலந்தது. இதில் 12 ஆண்டுகளைச் சிறையில் கழித்தார் குணே.

எகிப்து, துருக்கி, இந்திய, தமிழ்ப்படங்களின் இயல்புக்கும் வளர்ச்சிக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. உலகச் சினிமா தயாரிப்பில் ஹாலிவூட்டுக்கு அடுத்து இந்தியா இரண்டாம் இடத்தை வகித்தபோது, துருக்கி நான்காவது இடத்தை வகித்தது.

துருக்கி சினிமாவின் வெகுசன கதாநாயகனான குணேவை ஒரு இடதுசாரி அரசியல்காரனாக அனுபவம் கொள்ளும் போது வெகுசன சினிமாவின் மாபெரும் பாதிப்புக்குள்ளான கலாச்சார அரசியலுக்கிடையில் தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்ன னாகத் திகழ்ந்த எம்.ஜி.ஆரின் படங்கள் பற்றிய எதிர்மறை சிந்தனை தோன்றுவது இயல்பே. குணேவின் மரபும் துருக்கிய சினிமாவின் மரபும் நடிகனாக அவர் வளர்ச்சியும் அவர் இறுதி யில் வந்தடைந்த உன்னதங்களும் எம்.ஜி. ஆரின் மரபார்ந்த வளர்ச்சிக்கு எதிர் திசையிலானது.

குணேவின் மூன்றாவது சிறைவாசம் 1974 இலிருந்து அவர் சிறையிலிருந்து தப்பித்து நாட்டைவிட்டு வெளியேறும் காலமான 1981 வரை 7 ஆண்டுகள் நீண்டது. 1978—1979 ஆம் ஆண்டுகளில் சிறைக்குள் இருந்தவாறுதான் The Herd (ஆட்டிடையன்), The Enemy (பகைவன்) போன்ற படங்களுக்கான கதை வசனமும் Yol (பாதை) படத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் குணேவி

படிப்பகம்

padippakam



னால் மேற்கொள்ளப்பட்டன. 1980 ஆம் ஆண்டு, Yol படத்திற்கான படப்பிடிப்பை முடித்துக்கொண்டு அதன் முதல் பூர்வாங்கப் பிரதி துருக்கி நாட்டிலிருந்து ரகசியமாக கடத்தப்பட்ட பின்பு, பிரான்ஸிற்குவெளியேறினார் சுவிட்சர்லாந்தில் அந்தப் படத்தின் 'எடிட்டிங்' வேலைகள் முடித்து, 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கேன் (Cannes) உலகத் திரைப்பட விழாவில் தங்க விருதைப் பெற்றது அப்படம். குணேவின் இறுதிப்படமான The Wall (சுவர் அல்லது மதில்) 1982 ஆம் ஆண்டு பிரான்ஸில் படமாக்கப் பட்டது. குணேவின் பாஷையில் அப்படம் பாஸிஸ்ட் சர்வாதிகாரத்தின் முகத்தில் ஓர் அறை போன்றது.

குணேவின் அரசியல் அகராதியில் துருக்கியின் ஜனநாயக விரோத அரசியல் 1923 ஆம் ஆண்டு தொடங்குகிறது. அந்த ஆண்டுதான் ஓட்டோமான் பேரரசிலிருந்து துருக்கியை விடுவித்து குடியரசை நிறுவினார் முஸ்தாபா கமால்பாட்சா ஆதாதுர்க். இன்றளவும் துருக்கியின் தேசத் தந்தை ஆதாதுர்க்தான். துருக்கியின் வரலாறு ராணுவ அடக்கு முறையின் வரலாறு. இன்றளவும் துருக்கியில் கொம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டுதான் இருக்கிறது. மார்க்ஸீய புத்தகங்களுக்கும் தடை தொடர்ந்து நீடிக்கிறது. ஆதாதுர்க்கை சர்வாதிகாரி என்று வரையறை செய்கிறார் குணே. குணேவின் படங்களிலிருந்து பெறப்படும் துருக்கி இன்றைய யதார்த்தம் கூடத்தான். தொடர்ந்து மேற்கத்திய மதிப்பீடுகளுக்குள் தன்னை இருத்திக் கொள்ள விரும்பும் நாடு. ஐரோப்பிய சமூக கட்டமைப்பின் (European Community) அங்கத்தவராக விண்ணப்பித்திருக்கும் நாடு.

குணேவின் படங்களைப் பற்றி அறிமுகமோ விமர்சனமோ கூட அரசியல் சார்புகளுக்கு ஏற்பவே வெளிப்படும்.

நிஜத்தில் மேற்கத்திய அழகியல், சினிமா அரசியல் வரையறைகளுக்கும் ரசனைகளுக்கும் எதிராக மூன்றாம் உலக யதார்த்தத்துடன் தமது சொந்த அழகியல், அரசியல் ரசனைகளை உருவாக்கிக் கொள்வது முக்கியம். குணேவைப் பற்றிய மேற்கத்திய விமர்சகர்களின் விமர்சனமானது அவர் படங்களில் வரும் மனிதர்கள் தவிர்ந்த புல்வெளிகள், பனித்தரைகள், அகண்ட வானத்தின் கீழ் விரியும் பாதைகள், ரயில் பிரயாணத்தின் அழகு போன்றவை குறித்ததாகும் ஆனால் குணேவின் இயற்கை, மனிதர்களின் சந்தோஷத்துடனும் துயரத்துடனும் தொடர்புடையது. குணேவை வெறுமனே சினிமாக்காரராகப் புரிந்து கொள்வது இயலாதது. குணேவின் சினிமா அவரின் விடுதலை சார்ந்த அக்கறைக்கான சாதனம்.

படிப்பகம்

padippakam



குணே பற்றின அறிமுகம் என்பது இரண்டு தளங்களி லேயே நிகழ முடியும். ஒன்று மனிதனாக அவருக்குள் உருவான மானுட விடுதலைத் தத்துவக் கண்ணோட்டம். இரண்டாவதாக, இந்த விடுதலைக் கண்ணோட்டத்தை முயற்சித்துப் பார்த்த சினிமா சாதனம். கட்டுரையும் இந்நோக்கில் இரண்டு கட்டங்க ளாகவே விரியும். முதலாவதாக அவரது படைப்புலகின் ஆதாரங்களுக்கான வாழ்வனுபவங்கள் பற்றியது. இறுதியில் அவர் படைப்புகள் பற்றியது.

துருக்கிய சினிமாவில் இரண்டு வகையான போக்குகளைக் காண்கிறார் குணே. இந்தப் போக்குகள் எந்த நாட்டிலும் அரசிய லிலும் சினிமாவிலும் பொதுவானதுதான். ஒன்று மேற்கத்திய ஹொலிவூட் கனவுலக சினிமா. அரசியல் அதிகாரத்தை மைய மாகக் கொண்ட சினிமா மற்றையது தேசிய மரபுகளை உட் கொண்டு தனித் தன்மையுடன் வளர எத்தனிப்பது. இந்த இரண் டாவது தனித் தன்மையை சினிமாவில் எவ்வாறு கையாளுகிறார் என்பதுவே முக்கியம் ''சினிமா பார்வையாளர்களின் எதிர்பார்ப் புகளுக்கும் புத்திக்கும் நான் என்னை வெளிக்காட்டுகிறேன். அதே சமயத்தில் பார்வையாளர்களுக்கு தங்கள் சொந்த யதார்த் தம் பற்றிய புரிதலை தொடர்பு கொள்ளவும் முயல்கிறேன்'' என்கிறார் குணே.

தேசிய அளவில் மக்களுடன் சினிமா மூலம் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்ற பின்பு குணே அடுத்த கட்டத்துக்குப் போகின்றார்.

விவசாயிகள் திரைக்குள் நுழைகிறார்கள், நிலப்பசி கொண்ட விவசாயிகள் அணிதிரண்டு போகிறார்கள். வேலை தேடி நகரம் வந்து குவிகிறார்கள். எல்லைகளில் விவசாயிகள் கடத்தல்காரர்களாகிறார்கள். கொலை செய்கிறார்கள். இம் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ அவ்வாறே என் சினிமாவுக் குள் நுழைந்தார்கள் என்கிறார். நண்பரொருவர் குணேவிடம் கேட்கிறார்: ''உங்கள் கதாநாயகர்கள் எவ்வாறு வித்தியாச மானவர்கள் என்று சொல்வீர்களா?'' குணே சொல்கிறார்: ''மரபு ரீதியான கதாநாயகனை நான் நிராகரிக்கிறேன். எனது புதிய கதாநாயகன் அநீதியை எதிர்ப்பவன், அடக்கப்பட்டவன் அடக்குமுறைக்கு எதிரானவன் எனும் அர்த்தத்தில் சுதந்திரத்தின் குறியீடாகிறான். இந்த மாதிரியை (model) ஒரு தொடக்கமாக தான் தேர்ந்தேன். ஆனால் இந்தப் புதிய மாதிரிகள் தோற்றுப்

படிப்பகம்

padippakam



போகிறார்கள். அவர்கள் ஏன் தோற்றுப் போகிறார்கள் என்றால் அவர்கள் தனிமைப்பட்டிருப்பதால், எனது படங்களின் கதாநாயகர்கள் ஒரு போதும் வெற்றி பெறுவதில்லை. இந்தக் கதாநாயகன் தண்டிக்கப்பட்டு அழிக்கப்படுகிறான். ஏனென்றால் அவன் இயக்க பூர்வமாகத் தன்னைத் திரட்டிக் கொள்ளவில்லை. இவன் தன் சொந்தத் தீர்வுகளைத் தேடிப்போனான். மக்களோடு தொடர்பில்லாது போனான். இதைத்தான் நான் முதன்மையாகக் கொண்டிருந்தேன். தனிநபர் கிளர்ச்சியை/தீர்வை கடுமையாக மறுதலித்தேன். ஒரு கோசத்தின் மூலம் இதை நான் சொல்வானால் இவ்வாறு சொல்லலாம்: ''**தனிநபர் தீர்வு என்பது இல்லை. தனிநபர் விடுதலையின் பாதை என்பது சவக்குழிதான்.**''

## 1. கலையும் அரசியலும்

கலைக்கும் அரசியலுக்குமான உறவை குனே மிகத் தெளிவாக வரையறை செய்து கொண்டிருந்தார் கலை மக்களோடு உரையாடுவதற்கான ஒரு ஊடகம். அரசியல் நம்பிக்கையின் மீதெழும் நடவடிக்கை. கலை தன்து பங்களிப்பை வெளியிடும் எல்லையில் தொடங்குகிறது. அரசியல் நடவடிக்கை என்பதில் அவர் தெளிவாக இருந்தார்.

அவரின் இறுதிப் படங்களான **ஆட்டிடையன்** (Herd), **பாதை** (Yol) மற்றும் **மதில்** (Wall) பற்றி அவரின் விமர்சகர்கள் சொல்லும்போது, அவர் படங்கள் நிலப் பிரபுத்துவத்திற்கும் முதலாளித்துவ சமூகத்திற்கும் உள்ள உறவில் நிகழ்பவை என்கின்றனர். குறிப்பாகச் சொல்வதானால் கிராமிய விவசாய சமூகத்தின் கலாச்சார மதிப்பீடுகளும் மாறிவரும் நகரமயமான தொழில்மயமான சமூகத்தின் கலாச்சார மதிப்பீடுகளும் கொள்ளும் மோதலில் விளைகின்றன அவர் படங்கள். நிலப்பிரபுத்துவ சமூகம் நிர்மூலமுறுவதால் நகரம் நோக்கிச் செல்லும் மனிதர்களின் பிரச்சினைகளை வெளியிடுகிறது அவரது 'ஆட்டிடையன்' மற்றும் 'பாதை' படங்கள். சிறையமைப்பின் குரூரத்தை வெளியிடுகிறது 'மதில்' படம். இராணுவ அடக்குமுறையின் குரூரம் எவ்வாறாய் துருக்கியமக்களின் அன்றாட வாழ்வில் புரையோடிப் போயிருக்கிறது என்பதை இம்மூன்று படங்களிலும் அவதானிக்கலாம்.

இந்த வாழ்வியல் யதார்த்தத்தை துருக்கியின் யதார்த்தம் என்பதை விடவும் மூன்றாம் உலக யதார்த்தம் என்று சொல்வதே பொருத்தமானது என்கிறார்கள் விமர்சகர்கள்.

படிப்பகம்

padippakam

## 6

கிராமிய வாழ்விலிருந்து வெளியேறும் மக்கள் மிகப் பெரிய சிறைச்சாலைகளான நகர வாழ்வுக்குள் சிறைப்படுகிறார்கள் என்கிறது இப்படங்கள் திரும்பத் திருப்ப இம்மூன்று படங்களும் அக்கறையுடன் பரிசீலிக்கும் விசயங்கள் இவைதான்: நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பெண்களின் நிலை, ஆண் பெண் பாலுறவின் தன்மை, இவர்களுக்கிடையில் ஏற்படும் வன்முறை உணர்ச்சி. மனித உறவுகள் முற்றிலும் வன்முறை சார்ந்து இயங்கும் அவலம், நிறுவன அமைப்புகள் வன்முறை அமைப்புகளாக மாறிப்போன குரூரம். நகரம் சார்ந்த மதிப்பீடுகள் இம்மக்களை அசுத்தப் படுத்தும் கொடுமை, இவைகளினூடே சிறிய நம்பிக்கையாய் வெளிப்படும் மக்களின் எதிர்ப்புணர்வு. உண்மையில் இவைகளை இரத்தமும் சதையுமாய்ச் சித்தரிப்பதன் மூலம் குணேவின் இந்த மூன்று படங்களும் நாடு, மொழி, எல்லைகளைக் கடந்து உலகு தழுவிய தன்மையை அடைந்து விடுகிறது. கலாச்சார அடையாளத்துடன் சொல்வதானால் மூன்றாம் உலக யதார்த்தத்தை தொட்டு நிற்கிறது.

1. 'ஆட்டிடையன்' (1979): இது துருக்கியின் தென்கிழக்கு அனதொலியாவைச் சார்ந்த நாடோடிகளின் nomads) சோகக் கதையைச் சொல்கிறது. இது மூன்று பகுதிகளாக நிகழ்கிறது.

முதல் பகுதி அந்த நாடோடி மக்களுக்குள் உள்ள இரண்டு இனக்குழுக்களுக்குள் இருக்கும் பகைமையைச் சொல்கிறது இந்தக் குழுக்களுக்குள்ளான பகைமையை முடிவுக்குக் கொண்டு வர ஒரு குழுவைச் சார்ந்தவர் தனது மகளை இன்னொரு குழுவைச் சார்ந்த ஒருவருக்கு மணமுடித்து வைக்கிறார்.

அவர்களுக்கிடையில் காதல் மலர்கிறது, அவர்களின் குழந்தையொன்று செத்துப் பிறக்கிறது. நிரந்தரமாக உடல் நோய்க்கு ஆளாகிறார் அந்த இளம் மனைவி. அவளைக் காப்பாற்றுவதற்கு தொடர்ந்து முயல்கிறான் கணவன். அவளுக்கு வைத்தியம் செய்வதற்காக நகரம் போகவும் யோசிக்கிறான். ஆரம்பத்திலிருந்தே மணமகனின் தந்தை மிகமிக மூர்க்ககுணம் கொண்ட விவசாயியாகவே சித்தரிக்கப்படுகிறார். அந்தப் பெண் ஒரு தீயசக்தி என்று சபிக்கிறார். அவளைக் கைவிடுமாறு மகனை நிர்ப்பந்திக்கிறார்.

இந்தச் சூழல், கால்நடை மற்றும் விவசாயம் சார்ந்த அவர்கள் வாழ்வு வறட்சி, தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற

படிப்பகம்

padippakam



வற்றால் நிர்மூலமாகிறது. அடிப்படை வாழ்வே பிரச்சினை யாகிப் போகிறது.

நிலங்களைக் கொத்திக்களைத்து குரூரமாகப் புரட்டிப் போடும் டிராக்டரின் காதடைக்கும் சத்தம் மூலம், அந்தக் குறியீட்டின் மூலம் நம்மை உலுப்புகிறார் குணே. கால்நடைகளை விற்பதற்காக துருக்கியின் தலைநகரான அங்காரா (ANKARA) நோக்கிக் கிளம்புகிறது அக்குடும்பம்.

இரண்டாவது பகுதி அக்குடும்பத்தின் அங்காரா நோக்கிய ரெயில் பிரயாணம். அமைதியும் அழகும், பூச்சும் அற்ற கிராமங்கள் விலகிப் போகிறது. ஆர்ப்பாட்டமும், எங்கு நோக்கினும் இராணுவ நடமாட்டமும், அழுக்கும், நெருக்கடியும், விபச்சாரமும் மலிந்த நகரத்தின் காட்சிகளை உள்வாங்கிக் கொண்டு போகிறது ரெயில். பயணத்தில் அக்குடும்பத்தின் இளைய மகன் ரயில் பெட்டியிலேயே காசு கொடுத்து ஒரு ஊனமுற்ற பெண்ணை ஆடுகளுக்கிடையில் அவசரமாகப் புணர்கிறான். பயணத்தின் நெருக்கடி தாங்காமல் ஆடுகள் மரணமுறுகின்றன. வறுமை, அசிங்கம், நம்பிக்கையின்மை, கைவிடப்பட்ட அவலம் போன்றவை ரெயில் பயணத்துக்குள் வருகிறது. ரெயில் பெட்டியிலிருந்து கைவிலங்கிடப்பட்ட நிலையில் ஒரு கவிஞன் பாடலைப் பாடியதற்காக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறான். நகரமே சிறையின் மிகப் பெரிய குறியீடாக விரிகிறது.

மூன்றாவது பகுதி அங்காராவில் அவர்கள் எதிர்கொள்ளும் நகரத்தின் பொய் முகம் பற்றியது. கால்நடைகளை நினைத்தபடி விற்க முடியாது போகிறது. இளம் மனைவி கவனிப்பாரற்று மௌனமாக மரணமுறுகிறாள் அவள் கணவன் இராணுவத்தால் சிறை பிடிக்கப்படுகிறான். இளைய மகன் காணாமல் போகிறான்.

மூர்க்கமான அந்த விவசாயக் குடும்பத் தலைவன் தனது மருமகளின் அனாதைப் பிணத்தை ஏற்க மறுக்கிறான். அப்போதும் மற்ற குழுவின் மீது துவேஷத்தோடேயே நிற்கிறான். அந்தப் பிணம் தரையில் தரதரவென்று இழுத்துக் கொண்டு போகப்படுகிறது. வெளியில் ஊர்வலம் போன தொழிலாளி வர்க்க இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். தொலைந்து விட்ட மகனுக்காக அந்த நகரத்தின் ஜனக் கும்பலுக்குள் நின்று

படிப்பகம்

padippakam



கத்திக் கொண்டிருக்கிறான் அந்த விவசாயக் குடும்பத்தின் மூர்க்கமான தலைவன். படம் முடிவடைகிறது.

2. 'பாதை'(1952): இப்படம் துருக்கியின் மேற்கு அனதோலியாவின் சிறைக் கைதிகள் பற்றிச் சொல்வது. அச்சிறையிலிருந்து ஐந்து கைதிகள் விடுமுறைக்காக தங்கள் குடும்பங்களைப் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். குடும்பங்களை நோக்கிப் போகும் பயணத்தையும், அவர்கள் திரும்பவும் சிறை நோக்கி வருவதற்கான பயணத்தையும் விவரிக்கிறது இப்படம். இந்தப் படத்திலும் ரெயில் பிரதானக் குறியீடாக வருகிறது. பாதையெங்கும் இராணுவ வாகனங்கள் நிற்கின்றன. பயணிகள் சோதனை இடப்படுகிறார்கள் இந்த ஐந்து கைதிகளின் கதைகளில் இரண்டு கைதிகளின் கதைகள் துணைக் கதைகளாகப் போக, மூன்று கைதிகளின் கதைகள் படத்தின் பிரதான மையமாக வருகிறது.

ஸைத்யத் அலி, விபச்சார விடுதிக்கு ஓடிப்போன தனது மனைவியைப் பார்ப்பதற்காகப் போகிறான். அவள் ஸைத்யத் அலியின் சகோதரனால் பிடிக்கப்பட்டு, இவனால் கொல்லப்பட வேண்டும் என்று தண்டிக்கப்பட்டிருக்கிறாள்.

அவர்களுக்கு ஒரு மகனும் உண்டு. அவன் மனைவியை நேசிக்கிறான். அவன் அவளைக் கொல்ல விரும்பவும் இல்லை. ஆயினும் அவன் வாழும் சமூக மதிப்பீடுகள், அவளை அவன் வெறுப்பதற்கான நியாயங்களாகின்றன. அதன்படி அவளை வெறுக்கவும் செய்கிறான். அவளை பனிப் புயலுக்கிடையில் கைவிட்டுவிட்டு வருகிறான். திரும்பவும் அவளை மீட்டு வர பின் போகிறான். ஆனால் காலம் கடந்து விட்டது. அவள் விறைத்துப் பிணமாகி விடுகிறாள். அவன் தன் மகனுக்கு முத்தமிட்டு விட்டு திரும்பவும் சிறை நோக்கிப் பயணமாகிறான். ஸைத்யத் அலி, அவளைத் தேடிப் போகும் சந்தர்ப்பத்தில் அவனின் பயணத்தில் அவனைச் சுமந்து போகும் குதிரை பனிப் புயலில் ஒரு கட்டத்தில் நடக்க முடியாமல் பனியில் உடல் புதைகிறது இவன் மிக முயன்றும் குதிரையை எழுப்ப முடியவில்லை. இறுதியில் குதிரையைச் சுட்டுக் கொல்கிறான். சிவப்பு இரத்தம் வெள்ளைப் பனியில் மெல்லப் பரவி உறைகிறது! அன்பும், குரூரமும், பாதுகாப்பும், கைவிடுதலும் ஆன வாழ்வின் இரட்டைத் தன்மையின் குறியீடாக குதிரையின் மரணம் மனைவி பிணமாகிறாள். அகண்ட வானத்தின் கீழ் பனிவெளி. வெள்ளைப் பனிவெளி. மகனோடு முன்னோக்கி நடக்கும் ஸைத்யத் அலி. இரத்தம் பரவி

படிப்பகம்

padippakam



உறைந்த மரணமுற்ற குதிரை. மனைவியின் சில்லிட்ட புதைந்த உடல். ஒரே காட்சிக்குள், ஒரு பிரேமுக்குள் இதைக் கொண்டு வருகிறார் குனே. அச்சமூக அமைப்பின் குரூரத்தை, பெண்கள் மீதான வன்முறையை இவ்வாறாய் காட்சி ரூபப்படுத்துவதன் மூலம் நம்மை உலுக்கி விடுகிறார்.

இன்னொருவன் முஹமத் பொய்யன். திருடன். திருடப் போன இடத்தில் தன் மனைவியின் சகோதரனை காட்டிக் கொடுத்து கைவிட்டு அவன் சாவுக்கு காரணமானவன். உண்மையை ஒப்புக் கொள்கிறான் தான் பொய்யன் என்பதை ஒப்புக் கொள்கிறான். முஹமத் தன் மனைவி, குழந்தைகளைப் பார்க்கப் போகிறான். அவன் மாமனாரும், மனைவியின் சகோதரர்களும் அதை மறுக்கிறார்கள். அவர்களை மீறி மனைவி குழந்தைகளுடன் அவனோடு வந்து விடுகிறாள். ரெயில் பயணம் தொடர்கிறது. ரெயில் பெட்டிக்குள் ஆண்களுக்கான கழிப்பறையில் மனைவியோடு உடலுறவு கொள்ள முற்படுகிறான். முஹமத் பிடிபட்டு அவன் குழந்தைகளுக்கு முன்பாகவே கேவலப்படுத்தப் பட்டு, அவள் தன் மனைவிதான் என்று அடையாளம் மூலம் திருபிக்கிறான்.

மூன்றாமவன் உமர், குர்திஸ் கிராமத்தைச் சேர்ந்தவன். அவன் தன் கிராமத்தை நோக்கிப் போகின்றான், குர்திஸ் கொரில்லாப் போராளிகளுக்கும், அரசின் ஒடுக்குமுறையின் தாக்குதலுக்கும் இடையில் வாழத் தலைப்படுகிறான். முதியவர்கள் சுடுபட்டுச் சாவதும், குழந்தைகளின் மரணமும் அவன் கண்ணெதிரில் நிகழ்கிறது. ஒரு இரவு முழுக்கவும் துப்பாக்கிச் சத்தம் அந்த கிராமத்தைச் சுற்றிலும் கேட்கிறது. அதிகாலையில் ஒரு இராணுவ வாகனம் நிறைய குர்திஸ் போராளிகளின் பிணங்களோடு வருகிறது இராணுவம். அடையாளம் காட்டச் சொல்கிறார்கள் கணவனை அடையாளம் காட்ட முடியாது தவிக்கிறாள் மனைவி. தங்கள் சொந்தங்களை அடையாளம் காட்ட முடியாது நிற்கிறது அம்முழுக் கிராமமும். சாவு அவர்கள் வாழ்வின் அன்றாட நிகழ்வாகிவிட்டது. இவற்றுக்கிடையிலும் அன்பும் காதலும் வாழ்கிறது. இவன் நடவடிக்கைகளை தொடர்ந்து கவனிக்கும் காதலுள்ள பெண்ணின் விழிகளை அடிக்கடி எதிர்கொள்கிறான் உமர். அவன் திரும்ப வேண்டிய நாள் வருகிறது. அவன் குதிரையின் மீதேறி மலையொன்றின் மறுபுறம் மறைகிறான்.

3. **மதில் அல்லது சிறைச் சுவர்:** இப்படம் அங்காரா நகரத்தின் சிறையொன்றின் அடக்குமுறைக் கட்டமைப்பைச்

படிப்பகம்

padippakam



சொல்கிறது. இப்படைப்புக்கான அடிப்படைகள் குணேவின் வாழ்க்கை அனுபவம்தான். இந்தப் படத்திற்காக பாரிஸ் நகரின் புறநகரிலிருந்த ஒரு பழைய பண்டக சாலை சிறைச்சாலையாக மாற்றப்பட்டு படப்பிடிப்பு நடைபெற்றது. இப்படத்தில் மூன்று வகையான கைதிகளின் வாழ்க்கை பற்றி விவரிக்கப்படுகிறது. பெண்களின் சிறை பற்றி, அரசியல் கைதிகளான ஆண்களின் சிறை பற்றி, சிறுவர்களின் சிறை பற்றி இப்படம் பேசுகிறது. படத்தின் மையமாக சிறுவர்களின் சிறை அனுபவம் பற்றியே சொல்லப்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்வதாகச் சொல்லி இருவரையும் ஒன்றாகத் தூக்குக் கயிற்றுக்கு கொண்டு போகிறது அரசு. சிறையிலிருந்து முதல்முறையாக பள்ளிக் கூடம் போகும் பிஞ்சுக் குழந்தைக்கு சிறைக் கூடமே சந்தோசத்தின் குறியீடாகி வழியனுப்புகிறது. சிறையதிகாரியொருவன் ஒரு சின்னஞ் சிறுவனின் மூலம் தனது காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்கிறான். வாய்வழி மூலம் தன்னினச் சேர்க்கைக்கு சிறுவனைத் தினமும் நிர்ப்பந்திக்கிறான் அதிகாரி. தப்பிச் செல்ல முயற்சிக்கும் சிறுவன் சுட்டுக் கொல்லப்படுகிறான். அந்தச் சிறையிலிருந்து வேறு சிறைக்கு மாற்று எனக் கோரி சிறுவர்கள் நடத்தும் போராட்டமும் எதிர்ப்புணர்வும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகிறது துப்பாக்கிச் சத்தத்தில் அமுக்கப்படுகிறது. கைதிகள் கடிதங்களுக்காக காத்திருக்கிறார்கள். சிறையில் இருப்பவனின் மனைவி அடுத்தொரு ஆணோடு உறவு கொள்வதை அங்கீகரிக்க முனைகிறான் சிறையிலுள்ள ஒருவன். அடக்குமுறையின் குரூரத்தை அதன் மொத்தத் தன்மையோடு காண்பிக்கிறது 'மதில்' படம். நம்பிக்கை, நம்பிக்கையின்மை இவைகள்தான் இப்படம் மொழி. அடக்குமுறை பற்றிய பிரக்ஞை என்ன என்பதுதான் இப்படத்தின் செய்தி.

இப்படம் வெளிவந்த போது துருக்கிய சமூகம் பற்றிய ஒரு புதிய சித்திரம் மேற்கத்தியர்களுக்கு திறந்து வைக்கப்பட்டது. துருக்கிய யதார்த்தத்தையும் தாண்டிய மூன்றாம் உலக அடக்குமுறை அமைப்பின் தரிசனம்தான் இது.

இம்மூன்று படங்களைப் பற்றியும் பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் வெளிவந்தன. ''துருக்கிய சமூகத்தை மிக மோசமாக குணே சித்தரிக்கிறார். அது அவ்வளவு மோசமானது இல்லை''—துருக்கிய அரசை ஜனநாயக அரசாகப் பார்க்கும், பாதுகாக்கும் மேற்கத்திய அழகியல் விமர்சகர்களிடம் இருந்து வந்த விமர்சனம் இது. அதிதீவிர இடதுசாரிகள் குணே அரசியல் தீர்வை தெளிவாக முன்வைக்வில்லை என்ற விமர்சனத்தை முன்வைத்தார்கள். குணே இவர்களின் விமர்சனத்துக்கெல்லாம் பதிலிறுத்தார். சினிமா பற்றி, அரசியல் பற்றி, கலைஞனுக்கும் சமூகத்துக்கும் இருக்கும் தொடர்பு. அரசியலுக்கும் கலைஞனுக்கும் இருக்கும் தொடர்புகள் பற்றிய தெளிவான பதில்களை முன்வைத்தார்.

தொடரும்.

படிப்பகம்

padippakam

# இருளின் முகத்தை மாற்றி அமைக்கிறோம்.

—ஒட்டோ ரோனே காஸ்டிலோ

பார்வை இழந்தவர்கள்
எங்களை குருடரென்று அழைக்கின்றனர்!
ஆனால்
வரப்போகும் காலத்தின்
வண்ணத்தைக் கண்டுவர
நீ எங்களுக்குக் கற்றுத் தந்தாய்!

கேட்கும் திறம் இழந்தவர்கள்
எங்களைச் செவிடரென்று அழைக்கின்றனர்!
ஆனால்
சுற்றுப் புறமெல்லாம்
மனித நேயத்தின் நேர்த்தியான
மன ஓசையைச் செவிமடுக்க
நீ எங்களுக்குக் கற்றுத் தந்தாய்!

பேடிகள் எங்களைப்
பேடிகள் என்று அழைக்கின்றனர்!
ஆனால்,
உன்னோடு நாங்கள்
இருளை எதிர் கொள்கிறோம்!
அதன் முகத்தை மாற்றியமைக்கிறோம்!

குற்றவாளிகள் எங்களைக்
குற்றவாளிகள் என்று அழைக்கின்றனர்!
ஆனால்,
உன்னோடு நாங்கள்
நன் முயற்சிகளை மேற்கொள்கிறோம்!
நன்னம்பிக்கைகளையே மீட்டெடுக்கிறோம்!

குற்றங்களுக்கு, பரத்தமைக்கு, பசிக்கு...
நாங்கள் முடிவு கட்டுகிறோம்!

படிப்பகம்

padippakam



மனிதரின் நெஞ்சங்களுக்குக்
கண்களும் காதுகளும் ஓசையும்
உயிரும் வழங்குகிறோம்!
மக்களைப் பிளவாக்கும் வகுப்பு வெறியர்கள்
எங்களை மக்கட் பகைவரென்கின்றனர்!
ஆனால்,
உன்னோடு நாங்கள்
உறவுகளின் குடியிருப்பில்
வெறுப்புணர்விற்கே கல்லறைக் கட்டுகிறோம்!

எங்களை அவர்கள்
பலபடக் கூறுவர்:
அவர்கள் மூடர்கள்!

ஒன்றை அவர்கள் மறந்துவிடுகின்றனர்!
நாளை அவர்களின் பேரப்பிள்ளைகள்
விண் மீன்கள் போல் ஓங்கி உயர்ந்து
நிலைபெற்றிருக்கும்
உனது பெயரின் எழுத்துகளை
உளமார நேசிப்பர் என்பதை!
உனது பெயர்தான்
'புரட்சி' என்பது

—தமிழில்: இரணியன

○ புரட்சியைத் தலைமை வகித்து நடத்தும் அபேதவாதி எனக்கு சாதியில் நம்பிக்கையில்லையென்று மட்டும் கூறினால் போதாது. புரட்சியில் ஈடுபடுவோர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சமத்துவ சகோதர உணர்ச்சி தோன்ற வேண்டும் நிலை பெற்றிருக்க வேண்டும்.

○ அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையை எதிர்த்துப்போராடும் சமூகச்சீர்திருத்தவாதியே அரசியல் வாதியைவிட அதிக தைரிய சாலி.

—டாக்டர் அம்பேத்கர்

படிப்பகம்

padippakam



# தடா
# அகற்றப்பட வேண்டிய அரசு பயங்கரவாதச் சட்டம்

—செந்தூரன்

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தடா) 1985இல் பாசிச ராஜீவ் காந்தி அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. பஞ்சாப் காச்மீரம் ஆகிய மாநிலங்களில் பெருகிவரும் "பயங்கரவாத" நடவடிக்கைகளை அடக்குவதற்காகவும் இரண்டாண்டுகளுக்கு மட்டுமே செயல் படுத்துவதெனவும் அன்றைக்குச் சொல்லப்பட்டது. அதன்பின் இந்தியப் பகுதிகள் அனைத்துக்கும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீட்டிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது.

பாசிச ராஜீவ் காந்திக்குப் பின் வந்த தேசிய முன்னணி (வி பி. சிங் தலைமையிலானது) அரசாங்கத்திலும் அதன் பின் வந்த சமாஜ்வாதக் கட்சி (ராஜீவ் காந்தியின் பினாமியான சந்திரசேகர் தலைமையிலும்) அரசாங்கத்திலும் இப்பொழுதைய நரசிம்மராவ் ஆட்சியிலும் இச்சட்டம் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீட்டிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. தேசிய முன்னணி அரசாங்கத்தில் தி.மு க., தெலுங்கு தேசம் ஆகியவை பங்கேற்றன என்பதோடு ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை பாரதிய ஜனதா கட்சியாலும் இறுதி வரை இடது, வலது பொதுவுடைமைக் கட்சிகளாலும் ஆதரிக்கப்பட்டன. தங்களின் அரசாங்கப் பங்கேற்புக்கோ, ஆதரவுக்கோ தடா சட்டத்தை நீக்கவேண்டும் என்பதை இவை முன் நிபந்தனைகளாக வைக்கவில்லை என்பது இங்கு கருதத்தக்கது. தடா சட்டத்தை அரசாங்கத்தோடு மட்டுமல்ல. இந்திய அரசுக் கட்டமைப்போடும் இணைத்து எண்ண வேண்டியுள்ளது.

இந்த பாசிச சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை எவ்வித விசாரணையின்றி ஓராண்டு காலம் வரையில் சிறையில் வைக்கலாம்; குற்றம் சாட்டப்பட்டவரே, தான் குற்றமற்றவர் என நிரூபித்தாக வேண்டும். இதன் கீழ் கைது செய்யப்பட்ட

படிப்பகம்

padippakam



வர்களை தனி நீதிமன்றமே விசாரணை செய்யும். இந்த விசாரணை ரகசிய விசாரணை; தனி நீதிமன்றம் விரும்பினால்—அல்லது விரும்பும் வரை—இந்த செய்திகள் வெளியிடப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் முறையீடு செய்ய விரும்பினால் உயர் நீதிமன்றத்தம் போகவியலாது; டில்லி உச்சநீதி மன்றத்திற்கே போக வேண்டும். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய ஓராண்டு கால அவகாசம் உண்டு. போலிசின் வாக்குமூலமோ அல்லது போலிசுக்கு எவரொருவர் கொடுக்கும் வாக்குமூலமோ சாட்சிய மாக எடுத்துக்கொள்ளப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் சொத்துக்களை அரசு — விரும்பினால் — உடனே பறிமுதல் செய்யலாம். குற்றம் நிருபிக்கப்பட்டால் — அதாவது குற்றம் சாட்டப்பட்டவர், தான் குற்றவாளி இல்லையென நிருபிக்க முடியவில்லையெனில் — குறைந்த அளவு, ஐந்து ஆண்டுகள் முதல் அதிக அளவு ஆயுள் தண்டனை வரை கருணையுடன் வழங்கலாம்.

இந்தச் சட்டத்தை இயற்றும் அதிகாரமும் இதில் திருத்தங்கள் கொண்டு வரவும் திரும்பப் பெறவும் ஆன அதிகாரமும் மத்திய அரசுக்கு உண்டு; இதை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு.

இந்தச் சட்டத்தில் பயங்கரவாதம், சீர்குலைவு என்பன வற்றுக்குத் தெளிவான விளக்கம் இல்லை. பயங்கரவாதம், சீர்குலைவு எனக் கருதத்தக்க அளவிலான எந்தவொரு செயலும் அல்லது பேச்சும் அல்லது எந்தவொரு வழிமுறையும் பயங்கரவாத மாகவும், சீர்குலைவாகவும் கருதப்படும். இதன் மூலம் பயங்கர வாதம், சீர்குலைவு என கருதத்தக்க அளவிலான செயல்களையோ கருத்துக்களையோ எழுத்து / பேச்சு / சைகை என இவற்றின் மூலமும் வெளிப்படுத்துவதை இது ஆயுள் தண்டனைக்குரிய தாக்குகிறது.

இந்தச் சட்டம் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கும் பொழுதெல்லாம் மிகக் குறைவான அளவிலேயே பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு மிகக் குறுகிய நேரத்திலேயே இதற்கான நீட்டிப்பை வழங்கிவிடுகின்றனர். பாராளுமன்றத்தில் எதிர்த்துப் பேசுகிற எதிர்க்கட்சி உறுப்பினர் களின் சொந்தக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தடா சட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருப்பதற்கு ஊடாகவே இந்த எதிர்ப்பும் உள்ளது. இப்போது காங்கிரசு உறுப்பினர்களே பலர்

படிப்பகம்

padippakam



இதைப் பாராளுமன்றத்தில் எதிர்த்துள்ளனர். மத்திய இணை அமைச்சர் ராஜேஷ் பைலட், இரயில்வே அமைச்சர் ஜாபர் ஷெரீப் ஆகியோர் தடாசட்டம் நீட்டிக்கப்படக்கூடாது என்று சொல்லும் வேளையில், உள்துறை அமைச்சர் சவான் தடா சட்டம் சில திருத்தங்களுடன் நீட்டிக்கப்படும் என்று குறிப்பிடுகின்றார்.

இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக இப்பொழுது பல அமைப்புகளும் பத்திரிகைகளும் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கி வருகின்றன. ஆனால் உண்மை என்ன வெனில் இந்தச் சட்டம் அதன் கருவிலேயே தவறானதாகும். மத்திய உள்துறை இணை அமைச்சரே இதுகுறித்துக் கருத்து களை ஆசியாவுக்கான மனித உரிமைக் கண்காணிப்புக் கழகம் (Human Rights/Watch Asia) தடா சட்டத்தைத் தவறாகப் பயன் படுத்துவதைக் கண்டு நொந்து போய் கண்டித்துள்ளது. இங்கு சிக்கல் என்னவெனில், தடா சட்டமே தவறா? இல்லை தடா சட்டம் மாநில/மத்திய அரசாங்கங்களால் தவறாகப் பயன்படுத் தப்படுகிறா என்பதுதான்.

''1985 முதல் 1994 முடிய 67 ஆயிரம் பேர்கள் இச்சட் டத்தின் மூலம் கைதாகியுள்ளனர். இவர்களுள் 735 பேர்கள் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர்'' என்று குறிப்பிட்டு, இச்சட் டத்தை மாநில அரசுகள் தவறாகப் பயன்படுத்துகின்றன என ராஜேஷ் பைலட் கூறுகிறார். இது, சட்டத்துக்குப் பரவலான எதிர்ப்பு வந்தபின் பழியை மாநில அரசுகள் மீது போடும் காங் கிரசின் தந்திரம். அதுமட்டுமல்ல, 10 ஆண்டுகள் பயன்படுத்திய பின் இதே போன்ற இன்னொரு கொடுமையான சட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒத்திகையே இது ஆகும். மாநிலங்களை ஆளும் கட்சிகளும் தத்தம் மாநிலங்களில் தடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் குறித்து மறுபரிசீலனை செய்வதாகக் குறிப்பிடுகின்றனவே தவிர, தடா சட்டத்தின் பாசிச அடிப்படை களைக் கண்டு கொள்ளவில்லை. தடா சட்டம் சரியானது எனக் குறிப்பிடும் தறுதலைகளைப் பொறுத்த அளவில் இவர்கள் பரவா யில்லையெனினும் தடா சட்டத்தின் மனித விரோத, சனநாயக விரோத அம்சங்களைக் கண்டு கொள்ளவில்லை.

அசாமைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் பயங் கரவாதி என முத்திரை குத்தப்பட்டுள்ளான். பரோடா சிறுவன் குண்டு வெடித்த பொழுது ஒரு மசூதியில் இருந்தான் என்பதால் சீர்குலைவுவாதி; 50 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட ஒரு

படிப்பகம்

padippakam



கட்டுரைக்காக அசாமிய எழுத்தாளர் மீது தடா சட்டம் பாய்ந்தது; தடா குற்றம் சுமத்தப்பட்ட பின்னரே அவர் சில ஆண்டுகளுக்கு முன்னால் இறந்தார் என அரசின் புலனாய்வுத் துறை கண்டறிந்தது. (கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். பாரதிதாசனும் தடா சட்டத்தில் குற்றம் சுமத்தப்படலாம்) குசராத்தில் இறைச்சி விற்பனையாளர் உரிமம் இன்றி கசாப்புக் கத்தி வைத்திருந்ததாக தடா கைதியானார். (நம்ம ஊர் தாய்மார்கள் கவனிக்க. அரிவாள்மனையைப் பெரியதாக வாங்க வேண்டாம்) பஞ்சாப் பொற்கோயிலில் இராணுவம் நுழைந்த பொழுது அங்கு வழிபாடு செய்து 'சீர்குலைவு, நடவடிக்கைகளில் ஈடுபட்ட 172 பேர்கள் தடா கைதிகள் ஆயினர்; போலிசாரால் தேடப்பட்ட தம் மகன்களை 'வீட்டில் வைத்துச் சோறு போட்ட' குற்றத்துக்காக பஞ்சாப் பெண்கள் தடா கைதிகள் ஆயினர். பீகாரில் நிலப்பிரபுத்துவ உயர்சாதி குண்டர்களுக்கு எதிராகத் தற்காப்புப் படைக் கருவிகள் ஏந்த வேண்டும் என்று அச்சிட்ட சிறு வெளியீட்டை வினியோகித்த தாழ்த்தப்பட்ட இளைஞர் தடாவில் உள்ளார்; குசராத்தில் தொழிற்சங்கத் தகராறுகளில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மீது தடா சட்டம் ஏவப் பட்டது; கேரளா கருணாகரன் ஆட்சியில் இடது பொது வுடைமைத் தொழிற்சங்கத்தினர் மீதும் தடா சட்டம் ஏவி விடப் பட்டது. பம்பாயில் கட்டிட வெடிப்புகளுக்குப் பின்னர் கணிச மான அளவில் இசுலாமிய இளைஞர்கள் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். ஆந்திராவில் மார்க்சீய லெனினிய மக்கள் போர்ப் பிரிவைச் சார்ந்தவரும், ஜமாத் இசுலாமிய அமைப்பைச் சேர்ந்தவரும் இச்சட்டத்தின் கீழ் கைதாயினர். 1991இல் தமிழகத்தில் அமலுக்கு வந்த இந்தச் சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர், முன்னாள் உள்துறைச் செயலர் மட்டு மின்றி தேசிய இன அரசியலர்கள், எழுத்தாளர்கள், தாழ்த்தப் பட்டோர் அமைப்பைச் சார்ந்தோர் கைதாயினர். பத்திரிகை களில் கட்டுரைகள் எழுதியமைக்காக பாவலரேறு பெருஞ் சித்திரனார், 'பசித்து வருகிற ஒரு தோழருக்கு சோறிடுக' எனக் கேட்டுக் கொண்டதால் தலித் பேந்தர் அமைப்புத் தோழர் பெரியசாமி; தமிழக விடுதலைக்குத் தன் பேச்சால் இளைஞர் களைத் தூண்டி விட்டதாகப் போலிசாரால் குற்றம் சாட்டப் பட்ட பேராசிரியர் நெடுஞ்செழியன், ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான சிந்தனையாளர் வெங்காலூர் அறிஞர் குணா மற்றும் பல இசுலாமிய தோழர்கள் மீது தமிழகத்தில் தடா சட்டம் பாய்ந்துள்ளது. அண்மையில் கோவாவில் சுற்றுச்சூழலை பாதிக்கும் இரசாயன உரத் தொழிற்சாலை அமைப்பதை

படிப்பகம்

padippakam



எதிர்த்த ஒரு பத்திரிகையாளர் மீது தடா பாய்ந்துள்ளது. இராசஸ்தானில் பதிவான வழக்குகளில் 101 வழக்குகள் இசுலாமியத் தோழர்கள் மீதும் 96 வழக்குகள் சீக்கியத் தோழர்கள் மீதும் உள்ளன.

இந்திய நாட்டின் குறுக்கும் நெடுக்கும் ஏவிவிடப்பட்ட 67 ஆயிரம் வழக்குகள். தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தினர் ஒடுக்கப்பட்ட சாதியினர்,சிறுபான்மை மதத்தினர் ஆகியோர் மீதும் அவர்களின் சனநாயக உரிமைக் குரலை ஒலிக்கும் பத்திரிகையாளர்,வழக்கறிஞர்கள், கலைஞர்கள், அரசியலர்கள் ஆகியோர் மீதும் தடா பாய்ந்துள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

இது சட்டவிரோதமான சட்டம் அல்ல. நமக்கு நாமே உருவாக்கிக் கொண்டதாக நம் தலையில் கட்டப்பட்ட அரசியல் சட்டத்திலேயே இதற்கு அனுமதி இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் அட்டவணை 7 இன்படி தடுப்புக்காவல் என்பது சட்டமாக்கப் படக்கூடியதாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அடிப்படை உரிமைகள் குறித்த பகுதிகளும் கூட சாதாரண நிலைகளில் தடுப்புக் காவல் செய்வதை 22ஆம் விதியில் ஏற்றுக் கொண்டுளளது. அவசர நிலை எதையும் அறிவிக்காமலேயே ஒரு பாசிச அடக்குமுறையை சட்ட ரீதியிலேயே கொண்டு வர இந்திய அரசியல் சட்டத்தில் தடைகள் இல்லை. தற்காப்பு, வெளிநாட்டு உறவு, இந்திய நாட்டின் பாதுகாப்பு ஆகிய மூன்று அம்சங்களின் அடிப்படையில் தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டுவர நாடாளுமன்ற ஜமீன்தாரர்களுக்கு, சட்ட அதிகாரம் உள்ளது. இதே போல ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு, இன்றியமையாத பொருள்கள் வழங்கல் ஆகியவை காரணங்களாக தடுப்பு க்காவல் சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்ற பாளையக்காரர்களுக்கு உண்டு.

இத்தகைய சட்டங்கள் இயற்றப்பட்டதுண்டு. ஏகாதிபத்தியத்தோடு இந்தியத் தரகு முதலாளிகள் அரசியல் பொருளாதார பேரங்கள் நடத்திக் கொண்டு இருக்கும் நேரத்தில் தெலுங்கானாவிலும் ஏனைய பகுதிகளிலும் இந்தியப் பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் நடத்திய ஆயுதப் போராட்டக் காலத்தில் தடுப்புக் காவல் சட்டம் (Preventive Detention Act1950) இயற்றப்பட்டது. உள்நாட்டில் நக்சல்பாரி பகுதியிலிருந்து இன்னுமொரு ஆயுதப் புரட்சி அரசியல் கருத்துகள் உதயமான காலத்தில் உள்



படிப்பகம்

padippakam



நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (Internal Security Act 1971) கொண்டு வரப்பட்டது. இதன்பின் அவசர நெருக்கடி நிலை Maintenance of Internal Security Act 1975) கொண்டு வரப்பட்டு, பீகாரிலும், குசராத்திலும் இந்திரா காங்கிரசுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் தீர்க்கப்பட்டு, ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் கூட எவ்விதக் காரணமும் இன்றி சிறையில் அடைத்து வைக்கப் பட்டனர். 1980களுக்குப் பின் இத்தகைய சட்டங்கள் அதிக மாயின. தேசியப் பாதுகாப்புச் சட்டம் (டிசம்பர் 1980), இன்றி

---

## ஏது பயங்கர வாதம்?
## யார் பயங்கர வாதி?

பிரிட்டிசு இந்திய அரசு 1937இல் கொடுத்த விளக்கம்.

> பிரிட்டிசு இந்திய அதிகாரிகள் நெஞ்சில் பயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் புரட்சிகர வன் செயல்களில தொடர்ந்து ஈடுபவதன் மூலம் இந்தியாவிலிருந்து அவர்களை விரட்டி இந்திய விடுதலையைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை உடையவரே பங்கரவாதி ஆவர்.
>
> —Terrorism in India, Home Dept, Govt of India, 1937

இதன்படி ஏகாதிபத்திய எதிர்ப்பாளரே / இந்திய தேச பக்தரே பயங்கரவாதி. எல்லா விதங்களிலும் ஏகாதிபத் தியத்தைப் பின்பற்றும் இந்திய அரசுக் கட்டமைப்பு இதிலும் பின்பற்றுமா?

---

யமையாத சேவைப் பொருள்கள் பராமரிப்புச் சட்டம் (ESMA 1981), தொழில் தகராறுகள் (திருத்த) சட்டம், 1982; தொழிற்சங் சங்கங்கள் (திருத்த) சட்டம் 1982; இப்போதைய தடா (1985)... என இப்படி... ஒரு மனித விரோத சட்ட வரலாறு இந்தியாவில் உண்டு. இந்திய அரச அதன் பிறவியிலேயே மக்கள் விரோத

படிப்பகம்

padippakam



கட்டமைப்பு கொண்டது. அது ஏகாதிபத்திய சட்டங்களின் தொடர்ச்சியை செயல்படுத்தக் கூடியது. அது இன்னமும் ரௌலட் சட்டத்தின் (1918) விளிம்பைத் தாண்டவில்லை; 1908 இல் இயற்றப்பட்ட அரசுத் துரோக சட்டம் 124A இன்னமும் அப்படியே உள்ளது. ஏன், சென்னை மாநகரத்தில் ஊர்வலங் களைத் தடை செய்யும் 1888 ஆம் ஆண்டின் சென்னை காவல் சட்டம் (41 ஆம் பிரிவு) இன்னமும் உள்ளது. நாடு இருபத் தோறாம் நூற்றாண்டுக்குள் நுழையலாம். ஆனால் பத்தொன்ப தாம் நூற்றாண்டு ஏகாதிபத்திய சட்டங்கள் இன்னமும் பிசாசாக அழுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய சட்டங்களை ஒரு கட்சி அரசாங்கத்தோடு மட்டும் தொடர்புபடுத்திக் காணக்கூடாது; அவை இந்த அரசு இயந்திரத்துக்கான சட்டங்களாகும். எக்கட்சி அரசாங்கமானாலும் இவை போன்ற சட்டங்கள் உண்டு. கேரளாவில் சி.பி.எம். தொண்டர்கள் மீது தடா பாய்ந்தாலும் மேற்கு வங்கத்தில் ஜோதிபாசு அரசாங்கம் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறது. தி.மு.க. இன்றைக்கு இதை எதிர்த்தாலும் முரசொலிமாறன் அங்கம் வகித்த தேசிய முன்னணி அரசாங்கம் இதைப் பயன்படுத்தியது ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் கூட இந்தச் சட்டத்தின் மீது கைது செய்யப்பட்டாலும் இந்த சட்டம் இல்லையேல் இந்தியா இனிமேல் சுவாசிக்க முடியாது என அத்வானி அலறுகின்றார். எனவே இந்தக் கட்சிகள் எதிரும் புதிருமாக இருப்பது போல பாவ்லா காட்டினாலும் அவை பிரசவகால வைராக்கியங்கள். இந்தச் சட்டத்தைப் போல இன்னுமொரு கொடுமையான சட்டத்தைப் பயன்படுத்துவதற் கான ஒத்திகைகளாகக் கூட முடிந்து போகலாம்.

தடுப்புக் காவல் சட்டத்திலிருந்து இன்றைய தடா சட்டம் வரையிலான சட்டங்கள் போராடுகிற தொழிலாளர்கள், விவசா யிகள், ஒடுக்கப்படும் சாதியினர், ஒடுக்கப்படும் சிறுபான்மை சமயத்தினர், ஒடுக்கப்படும் தேசிய இனத்தினர் ஆகியோரின் நியாயமான சனநாயகக் குரலை நெறிக்கும் நோக்கம் கொண்ட வையாகும். இதுதான் பயங்கரவாதம். அது அரசின் முன் முயற்சி யால் உருவாவதால் அரசு பயங்கரவாதம் ஆகும். 1980 களுக்குப் பின் இந்த அரசு பயங்கரவாதம் பல சட்டங்களை இயற்றி தன் பற்களை மிகவும் கூர்மையாக்கிக் கொண்டுள்ளது. நாட்டை முற்றாக அடகுவைத்த புதிய பொருளாதாரக் கொள்கை நெருக் கடிகளை உருவாக்கும் என்பதால் அவற்றுக்கான எதிர்ப்புகளை சமாளிக்கவே இத்தகைய பாசிச சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

படிப்பகம்

padippakam



1980 களுக்குப்பின் இந்துப் பெருமதவாதக் கருத்து உருவத்தை ஆளும்வர்க்கப் பிரிவொன்று திட்டமிட்டு ஆதரித்து அதை அரசியல் திரட்டலுக்கு உரிய வலிமையான கருவியாக்கிக் கொண்டு உள்ளது. சிறுபான்மை மொழியினர், சமயத்தினர் உரிமைகள் நசுக்கப்படுகின்றன. இவற்றை எதிர்க்கும் நியாய மான, சனநாயக நோக்கிலான செயற்பாடுகள் அடக்கி ஒடுக்கப் படுகின்றன. தேசிய இனங்களின் விருப்பார்ந்த உரிமைகள் புறக் கணிக்கப் பட்டு இந்திய அரசின் மையத்துவப் போக்கு மேலும் இறுகி, அதிகார மயமாகியது.

1980 களுக்குப்பின் அமைப்பு ரீதியிலான தொழிற்சங்கப் போராட்டங்கள் மிகவும் குறைவு; அவை தேய் பரிணாமத்தில் இருந்துள்ளன என்பது அரசியல் யதார்த்தம். பொருளாதார வாதம், அரசியலற்ற திரட்டல் ஆகியனவற்றின் விளைவுக்களே இவை என்பதைத் தொழிற் சங்கத் தலைமை பிழைப்புவாத நோக்கில் மறுத்தாலும் அரசியல் உண்மைகளாகும். விவசாயி களின் போராட்டங்களைக் கண்டால் பீகாரிலும் ஆந்திராவிலும் மார்க்சிய லெனினியப் புரட்சியாளர் முன் கையெடுப்பிலும் தமிழகம், கர்நாடகம், மகாராட்டிரத்திலும், அரியானாவிலும் அந்தந்தப் பகுதிகளின் தன்மைகளுக்கு ஏற்ற அளவில் எழும்பு வதும் பேரலையாய் விரிவடைவதும் அடங்குதலும் பின் எழும்பு தலும் என்ற நிலைகளில் கண்டு கொண்டு இருக்கிறோம். வடகிழக்கு மாநிலங்களிலும் காச்மீரம், பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் தேசியத்தன்னுரிமை சிக்கல் அந்தந்தப் பகுதிகளின் தன்மைக்கு ஏற்ற விதத்தில் எழும்பிக் கொண்டு இருக் கிறது. அரை நிலவுடைமை உறவுகள் மேனிலையில் உள்ள பகுதி களில் சாதிய மோதல்கள் உச்சத்துக்கு வந்து, தாழ்த்தப்பட்டோர் உயர் சாதிய ஆதிக்கக் கலாச்சாரத்திலிருந்து விடுபடப் போராடிக் கொண்டு இருக்கின்றனர். ஆளும் வர்க்கத்தின் வலதுசாரிப் பிரிவால் கட்டவிழ்த்து விடப்பட்ட இந்து பெரு மதவாதக் கருத்து ருவால் வாழ்வுரிமையையும் சனநாயக உரிமையையும் இழந்து தவிக்கும் நிலையில் உள்ள சிறுபான்மை சமயத்தினர் (குறிப்பாக இசுலாமியர்கள்) போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையில் இந்திய அரசுக் கட்டமைப்புக்கான எதிர்ப் பின் குவிமையப்புள்ளிகள் இன்றைக்குப் பெருகியிருக்கின்றன. ஒடுக்கப்பட்ட சக்திகள் என்ற குவிமையத்தில் தொழிலாளர், விவசாயிகள் என்பவர்களோடு ஏதேச்சதிகாரத்தை எதிர்க்கும் தேசிய இன ஆர்வலர், ஒடுக்கப்பட்ட சாதியினர், சிறுபான்மை சமயத்தினர் ஆகியோரும் புள்ளிகளாக புறநிலை அளவில்

படிப்பகம்

padippakam



இணைந்துள்ளனர் என்பதை இந்திய வரலாறு இன்றைக்கு உணர்த்துகிறது.

தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டவரின் பட்டியலைப் பகுத்தாய்ந்தால் இது உறுதிப்படும். இத்தகைய ஒடுக்கப்பட்ட சக்திகளின் ஆளும் அரசு, அரசாங்க எதிர்ப்பின் அழுத்தங்கள் பாரதூரமான வேறுபாடுகளோடு கூட இருக்கலாம். எனினும் இந்திய அரசின் சனநாயக விரோத, பாசிசக் கட்டமைப்பு இவர்களைப் புறவய நிலையில் ஒன்றுபடு தளங்களில் கண்டறிய வாய்ப்பைக் கொடுத்துள்ளது. இது ஒரு புறத்தில் வரலாற்றுச் சாதகமே. ஒரு தடா போய் இன்னொரு தடா கூட வந்துவிடலாம். கத்தி போய் வால் வந்தது டும்டும் என்பது போல. தடாவை, மனிதாயப்படுத்த வேண்டும் என்று கூட சிலர் கூறுகின்றனர். இது புலிகளில் சைவப் புலியைத் தேர்ந்தெடுப்பதைப் போல உள்ளது. தடா முற்று முழுதாகப் பிடுங்கி எறியப்பட வேண்டிய அரசு பயங்கரவாத சட்டம். அது கருணை நோக்கோடு அகற்றப்படுமானால் இதைவிட கொடுமையான இன்னுமொரு தடா இயற்றப்படும் சாத்தியத்தை நிராகரிக்க இயலாது. ஆனால் ஒடுக்கப்பட்ட சக்திகள் தமது ஒன்றுபடு தளங்களைக் கண்டறிந்து இணைந்து எதிர்ப்பதன் மூலம் அரசு பயங்கரவாதத்தை அகற்ற இயலும்.

---

## தாலாட்டு

அம்மா...
அத்தை மகளையும்
மாமன் மகளையும்
ஆசை காட்டாதே...
இந்த தேச அவலங்களை
உன்
வாழ்க்கை சிரமங்களைப் பாடு
பச்சை மனசு
பற்றிக் கொள்ளும்
நாளை நான்...

## நிஜம்

ஒழிக பெண்ணடிமை
வெல்க......
கோஷத்தோடு ஊர்வலம்
ஜவுளிக்கடை வாசலில்
விரித்து தொங்கவிட்டு
புது டிசைன் சேலைகள்
ஊர்வலம் எப்போ முடியும்
மனசு......!

படிப்பகம்

padippakam

# சனநாயகப்புரட்சியும், குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்

—நாகம்

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, தேசிய இனப் பிரச்சனை சம்மந்தமான பட்டாளிவர்க்க அணுகுமுறைக்கு மாறாக குட்டிமுதலாளித்துவ அணுகுமுறை இன்று பிரதான போக்காக வளர்ச்சியடைந்து வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் இப்போக்கு இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

1930 களில் 'தனித்தமிழ்நாடு' என்ற கோரிக்கையை அப்போதிருந்த திராவிட இயக்கம் முன்வைத்தது. ஆரிய திராவிட முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, பார்ப்பனீய ஆதிக்கத்தை ஒழித்து பிற ஆதிக்க சாதியினரின் தலைமையில் தனித் தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் அவர்களது நோக்கமாக இருந்தது இக்கருத்தை முன்வைத்தவர்கள் பார்ப்பனரல்லாத ஆதிக்க சாதிகளால் உருவான சிறு முதலாளித்துவ சக்திகளாவர். பிறகு அரசியல் லாபத்திற்காக அந்தக் கோரிக்கையும் கைவிடப் பட்டது. இருந்தாலும் இன்னும் இக்கருத்து தமிழகத்தில் வேரூன்றி இருக்கிறது.

தமிழகத்தை சேர்ந்த மார்க்சிய லெனினிய குழுக்கள் சுய நிர்ணய உரிமை என்ற கொள்கையை பெயரளவில் உச்சரித்து வந்ததனாலும், தமிழகத்தின் குறிப்பான நிலைமைகளுக்கு ஏற்ப தமிழ்தேசிய இனத்தின் விடுதலைக்கு சரியான கொள்கையை வரையறுக்கத் தவறியதனாலும் திராவிட இயக்கத்தின் சிறு முதலாளித்துவ அடிப்படையை முற்றிலும் தகர்த்துவிட முடியவில்லை இதன் விளைவாகத்தான் தமிழ்நாடு மா-லெ கட்சியினர் தமிழ் நாடுபிரிவினை என்ற நிலைபாட்டை முன்வைத்து பழைய போக்கை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.

இந்திய துணைக்கண்டத்தில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லை. எனவே ஒவ்வொரு தேசிய இனமும் தனித்தனி தேசிய அரசை அமைத்துக் கொள்வதுதான் சாத்தியம் என்ற கொள்கையைக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கொள்கை அடிப்படையில் தவறான போக்கிற்கு இட்டுச்செல்லும். தேசிய

படிப்பகம்

padippakam



இனப்பிரச்சனை சம்பந்தமாக சரியான அணுகுமுறையை முன்வைப்பதுதான் நாம் இன்று ஆற்றவேண்டிய கடமை, இக்கடமை தவறினால் தமிழக பாட்டாளிகளுடன் ஒன்றிணை தலையும் செய்ய முடியாமல் சிறு முதலாளித்துவப் போக்கு மேலோங்கிவிடும்.

எனவே தேசிய இனப்பிரச்சனையில் நாம் எதிர்கொண்டி ருக்கும் பிரச்சனை யாதெனில் தமிழக பிரிவினையா அல்லது அனைத்து தேசிய இனங்களின் பாட்டாளிவர்க்க ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட பல்தேசிய இன விடுதலையா என்பதுதான்.

தமிழக விடுதலையை முன்வைக்கும் தமிழ்நாடு மா-லெ கட்சியின்ர் எந்த அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார் கள் என்று முதலில் பார்ப்போம்.

ரசியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இருந்தது. அதன் தலைமையில் பிற தேசிய இனங்களின் விடுதலை சாத்திய மாயிருந்தது ஆனால் இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லை. இங்கு ஒரு தேசிய இனத்தின் விடுதலை பிற தேசிய இனங்களின் விடுதலைக்கு உத்தரவாதமாக அமையாது என்ற காரணத்தால் இங்கு பிரிவினைதான் ஒரே தீர்வு. இதுதான் அவர்களது கருத்தின் சாரம்.

தமிழ் தேசிய இனம் பிரிந்து போவது சாத்தியமா இல்லையா என்பது அடிப்படையான விசயமல்ல. பிரிவினை என்ற கொள்கை முடிவு எந்த அடிப்படையில் உருவாக்கப் படுகிறது என்பதில் முக்கியததுவம் அடங்கியிருக்கிறது. ஒரு தேசிய இனத்திற்கு ஒரு அரசு என்ற கொள்கை இன்றைய சூழலில் எந்த வர்க்கத்திற்கு சேவை செய்யும் என்று பார்க்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளில், முதலாளித்துவ உற்பத்தி முறை யோடு உருவான தேசிய இயக்கங்கள் தங்களுக்கென்று தனித்தனி தேசிய அரசுகளை உருவாக்கிக் கொண்டன. அங்கே தேசிய இன உருவாக்கத்திற்கான அனைத்து அம்சங்களும் ஏற்கெனவே வளர்ந்து விட்டிருந்த நிலையில் அவர்களுக்கு அரசு அமைப்பது மட்டுமே இறுதிக் கடமையாக இருந்தது.

ஆனால், இன்றைய ஏகாதிபத்திய காலகட்டத்தில் நிலை மைகள் வேறு. முந்தைய காலகட்டத்தில் தேசிய வளர்ச்சியை

படிப்பகம்

padippakam



ஊக்குவித்த முதலாளிவர்க்கம், ஏகாதிபத்திய நிலைக்கு எட்டிய பிறகு பிற தேசிய இனங்களை ஒடுக்கியது. அதன் விளைவாக ஒடுக்கப்பட்ட பகுதிகளில் தேசிய இன உருவாக்கம் தெளிவாக நடந்தேறவில்லை. இதன் விளைவாக தேசிய இன விடுதலை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை என்ற உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளது. ஆக ஒற்றுமை சாத்தியமா இல்லையா என்கிற பிரச்சனையை, ஒடுக்கும் தேசிய இனம் இருக்கிறதா இல்லையா என்பதை வைத்து முடிவெடுக்க முடியாது. ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுதலை என்கிற முழக்கம் அனைத்து தேச பாட்டாளி களின் ஒற்றுமையை கோருகிறது.

இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லை என்பதால் தேசிய இனங்களுக்குள் ஒற்றுமை சாத்தியமில்லை; பிரிவினைதான் ஒரே தீர்வு என்று சொல்வது மேற்சொன்ன நோக்கத்தை அடைய பயன்படாது.

இப்பிரச்சனைக்கு தீர்வை நோக்கிச் செல்வதற்கு முன்னால் இந்திய துணைக்கண்டத்தில் எவ்வாறு தேசிய இன உருவாக்கம் நடந்தேறியுள்ளது என்பதும் அவற்றின் ஸ்தூலமான அம்சங்கள் என்ன என்பதையும் ஆராய வேண்டும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய துணைக் கண்டத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையை புகுத்திய பிறகுதான் தேசிய இனக்கூறுகள் தோன்ற ஆரம்பித்தன. ஏகாதிபத்தியத்தின் கொடூர சுரண்டலினாலும் அது தேசிய இன வளர்ச்சிக்கு தடையாக விளங்கியதாலும் 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேசிய இனக்கருத்துக்களும்,எழுச்சிகளும் தோன்ற ஆரம்பித்தன. அதற்கு முன் தேசிய இன உருவாக்கத்தைப் பொறுத்தவரை மொழி மற்றும் பிரதேச ஒற்றுமை ஆகியவற்றைத் தவிர அதற் கான பொருளியல் அடிப்படையோ பொதுவான உளவியல் ஒற்றுமையோ பெற்றிருக்கவில்லை.

இதற்கான காரணத்தை நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நுழைவதற்கு முன் நிலவிய இந்திய சமூகத்தில்தான் தேட வேண்டும். சமூகம் சாதியாக பிளவுண்டு இருந்தது. மக்கள் மத்தி யில் ஒரே மொழியை அடிப்படையாகக் கொண்ட பிரதேச ஒற்றுமையுணர்வு என்பது வளர தடையாக இருந்தது. ஒரு பொது மொழி பேசுகின்ற தேசிய இனம் என்கிற உணர்வைவிட ஒரு சாதியின் பிரதிநிதி என்ற குறுகிய சிந்தனை முறைதான் மேலோங்கியிருந்தது. இந்தச் சூழ்நிலையில் ஒரு தேசிய இன எழுச்சி தோன்றுவதற்கான அடிப்படையே இருந்திருக்கவில்லை.

படிப்பகம்

padippakam



காலனியாக்கப்பட்ட பிறகு மேலிருந்து திணிக்கப்பட்ட முதலாளித்துவம் மேல் கட்டுமானத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியதே தவிர சமூகத்தின் அடிப்படையை முற்றிலும் தகர்த்தெறியவில்லை. சாதியம் போன்ற பிற்போக்கு அம்சங்களுடன் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் சமரசம் செய்து கொண்டு தனது சுரண்டலை நிலை நிறுத்தியது.

இன்று தேசியம், சனநாயகம் போன்ற கருத்துக்கள் ஒரு சிறு பிரிவினரிடம் மட்டுமே நிலவுகிறது. மக்கள் மத்தியில் சனநாயக உணர்வு ஒரு இயக்கமாக உருவாக முடியாமல் சாதியம் போன்ற வட்டாரக் கருத்துருவங்கள் தடை படுத்துகிறபடியால் தேசிய இனங்களின் வளர்ச்சி, குன்றிய நிலையிலேயே உள்ளது.

எனவே தேசிய இனங்கள் அடிப்படையில் சனநாயகப் படுத்தலை கோருகிறது. இதன் மூலம் மட்டுமே ஒவ்வொரு தேசிய இனத்துக்குள்ளும் பாட்டாளிவர்க்க ஒருங்கமைவை பெற முடியும்.

தேசிய இன உருவாக்கம் என்பது ஐரோப்பிய நாடுகளைப் போலன்றி இந்திய துணைக்கண்டத்தின் குறிப்பான இயல்பு களைப் பொறுத்து சமூகத்தை முழுமையாக சனநாயகப்படுத்துவ தோடு இணைந்த செயலாகும். இக்கடமை பாட்டாளி வர்க்கத் தால் மட்டுமே நிறைவேற்றக் கூடியதாகும். முற்றூடான நிலச் சீர்திருத்தம், ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை, சாதி ஒழிப்பு, தேசிய அரசுரிமை, சோசலிசத்தை நோக்கிய நகர்வு போன்ற கடமைகள் பாட்டாளிவர்க்கப் புரட்சி மூலம் தீர்க்கப்படவேண்டியுள்ளது.

தேசிய அரசுரிமை என்கிற ஒற்றை கோஷம் மட்டும் இங்கு மக்களை பொதுவான எதிரியை நோக்கி ஐக்கியப்படுத்துவதற்கு பயன்படாது தமிழ்நாடு மா.லெ. கட்சி, தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சி போன்றவைகள் தேசிய இனவிடுதலைக்கு சாதியத்தை முதலில் கணக்கிலெடுக்கக் கூடாதென்றும், அதை முன்னெடுத்தால் தேசிய ஒற்றுமை சாத்தியமற்றுப் போகும் என்றும் கருத்தை முன்வைக்கின்றனர். இவ்வாறு பழைய பிற்போக்குக் கருத்துக்களுடன் சமரசம் செய்து கொண்டு தேசிய இனத்திற்குள் ஒற்றுமை பற்றி பேசுவது இவர்களை இன்று பழைய நிலவுடமை பாரம்பரியத்தின் பிரதிநிதிகளாக அடையாளம் காட்டுகிறது. திராவிட இயக்கங்களும் இதே நடைமுறையைத்தான் மேற்

படிப்பகம்

padippakam



கொண்டன. அதன் தொடர்ச்சியாகத்தான் இவர்களும் இன்று செயல்படுகின்றனர். சமுதாயத்தை சனநாயகப்படுத்துதல் என்ற கடைமையை பின்னுக்குத் தள்ளி தேசிய அரசு என்கிற முழக்கத்தை பிரதானப்படுத்துவதன் மூலம் இந்த குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் சாராம்சத்தில் பழைய சுரண்டல் அமைப்பையே தக்கவைக்க முயற்சிக்கின்றன.

ஒவ்வொரு தேசிய இனமும் தங்களை சனநாயகப்படுத்திக் கொள்வதற்காக சாதி ஒழிப்பு, நிலச்சீர்திருத்தம் போன்ற கடமைகளைக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் ஏகாதிபத்தியத் திடமிருந்து விடுதலை மற்றும் சோசலிச கட்டுமானம் என்ற கடமையையும் இணைத்தே செயல்படுத்த வேண்டியுள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோசலிச கட்டுமானம் ஆகிய கடமைகள் அடிப்படையில் பல்தேசிய ஒற்றுமையைக் கோருகிறது மேலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு அனைத்து தேசிய இனங்களின் ஐக்கியத்தை அவசியப்படுத்துகிற அதே சமயம், அனைத்து தேசிய இனங்களையும் ஒடுக்குகிற மைய அரசிடமிருந்து ஒவ்வொரு தேசிய இனமும் விடுதலை பெறுவதற்காகவும் ஒன்றுபட்டு போராடவேண்டியுள்ளது. ஒரு ஒடுக்கும் தேசிய இனம் இருக்கும் பல்தேசிய இன நாட்டில் அந்த ஒடுக்கல் தேசிய இன பாட்டாளி வர்க்கத்தின் விடுதலை அனைத்து தேசிய இனத்தின் விடுதலையாக அமைகிறது. ஆனால், ஒரு ஒடுக்கும் தேசிய இனம் இல்லாத பல்தேசிய இன நாட்டில் மைய அரசை வீழ்த்துவது என்பது ஒவ்வொரு தேசிய இனத்தின் கடமையாகவும் இருக்கிற படியால் இந்த அம்சமும் பல்தேசிய இனங்களின் ஒற்றுமைக்கான அடிப்படையாக அமைகிறது.

எனவே, அனைத்து தேசிய இனங்களின் பாட்டாளிவர்க்க இயக்கம் ஒற்றுமையை பாதுகாத்துக்கொண்டு சனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் தேசிய இன விடுதலையைப் பெற இயலும்.

காஷ்மீர் போன்ற தனித்தன்மை வாய்ந்த தேசிய இனங்களைப் பொறுத்தவரை அவை என்றுமே இந்தியாவின் பகுதியாக இருந்ததில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்திய பெருமுதலாளிகளிடம் அதிகாரம் கைமாறியது தங்களை சுதந்திரமாக ஆட்சியமைக்க அனுமதிக்குமாறும் புதிய இந்திய அரசுக் கட்டமைப்பிற்குள் அடைக்கப்படக் கூடாது என்றும் அந்த தேசிய இனங்கள் விரும்பின. ஆனால் அவற்றின் விருப்பத்திற்கு மாறாக அத்தேசிய இனங்களின் உணர்வுகள் நசுக்கப்பட்டன.

படிப்பகம்

padippakam



ஆனால் இன்றைய இந்திய அரசு என்பது காஷ்மீர் மற்றும் வடகிழக்கு தேசிய இனங்களை தவிர்த்த பிற தேசிய இன தரகு முதலாளிவர்க்கத்தின் ஒற்றுமையில்தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவேதான் இப்பகுதிகளின் அனைத்து தேசிய இனமக்களின் குறைந்தபட்ச ஒற்றுமையாவது கட்டியமைக்க முடிந்தது. தமிழ்நாடு போன்ற பிராந்திய முதலாளிகளின் நலன்கள் மைய அரசை சார்ந்திருப்பதன் மூலம் பாதுகாக்கப்படுகின்றன. தமிழ் தேசியம் பேசிய கட்சிகள் இந்த தரகு முதலாளி வர்க்கத்தின் நலனை பாதுகாப்பவர்களாக மாறிவிட்டபடியால் அவர்களது அரசியலும் இந்திய தேசியம் என்ற கருத்தாக்கத்தால் சரணாகதி அடைந்தது. ஆனால், காஷ்மீர் மற்றும் வடகிழக்குப் பகுதிகள் இந்தியாவிற்குள் இணைக்கப்பட்டது என்பது இந்த பகுதிகளின் சிறு முதலாளித்துவ பிரிவினர்களின் ஒப்புதல் கூட பெற முடியாமல் முழுவதும் இராணுவ நடவடிக்கையின் மூலம் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டதாகும். அப்பகுதிகளில் தேசிய இன முரண்பாடு பிற முரண்பாடுகளை விட முதன்மையானதாக மாறியுள்ளபடியால் அந்த தேசிய இனங்கள் தங்களுக்கான தனி அரசை அமைத்துக் கொண்ட பிறகுதான் பிற தேசிய இனங்களுடன் ஒற்றுமை என்ற கேள்வியே எழமுடியும்.

ஆனால், பிற பகுதிகளைப் பொறுத்தவரை பாட்டாளி வர்க்கம் ஆற்றவேண்டியுள்ள பல்வேறு கடமைகளில் ஒன்றாக மட்டுமே தேசிய அரசுரிமை என்ற தேவை இணைந்துள்ளது பிற சனநாயகக் கடமையிலிருந்து தேசிய அரசுரிமை என்பதைமட்டும் பிரித்து பிரதானப்படுத்துவது பழைய சுரண்டல் அமைப்பையும் சாதிய கட்டமைப்பையும் அப்படியே தக்கவைத்துக்கொள்ள விரும்புகின்ற சிறு முதலாளித்துவ நலனை பாதுகாப்பதாகும். இங்கேபட்டாளிவர்க்க நலன் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. பாட்டாளி வர்க்க நலனை பிரதானப்படுத்தாத தேசிய அரசு என்பது இன்று எரித்ரியா (Eriturea) மாறியுள்ளதைப் போன்று ஏகாதிபத்திய நலனை பாதுகாப்பதாக மாறிவிடும்.

---

இந்திய சமூக அமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டுமானால் அரசியல் சீர்திருத்தத்திற்கு முன் சமூக சீர்திருத்தம் ஏற்படவேண்டும். அரசியல் அமைப்பு சமூக அமைப்பைப் பொறுத்திருக்க வேண்டும்.

—டாக்டர் அம்பேத்கர்

படிப்பகம்

padippakam

# நீலி
# கண்ணகி
# இலக்கியங்கள் காட்டும் மாதிரிப் பெண்கள்

—கோ. கேசவன்

**கண்ணகி**, சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு பெண் பாத்திரம். கற்புக்கடம் பூண்ட இப்பொற்புடைத் தெய்வம் அல்லது வேறு தெய்வம் இல்லை எனக் கவுந்தி அடிகளால் பாராட்டப்பட்டு பின் சேர அரசனால் கோயில் கட்டி வழிபடப்பட்டவள் என சிலப்பதிகாரமே குறிப்பிடுகிறது. இன்றைக்கும் கண்ணகி என்ற பெயர் ஒழுக்கத்துக்கும் கற்புக்கும் உரியதாகச் சித்தரிக்கப்பட்டு பெண்களுக்குச் சூட்டப்படுகின்ற ஒரு மதிப்பு மிக்கப் பெயராக உள்ளது. கண்ணகி கோயிலில் சென்று வழிபாடு நடத்தவேண்டும், அது தமிழகத்துக்கே சொந்தம் என்றெல்லாம் தேசிய இன ஆர்வ அரசியலர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலக்கியப் புனைகதைப் பாத்திரமான கண்ணகி வரலாற்றுப் பாத்திரமாகக் கருதப்பட்டு பிந்தைய பெயரிடல்களில் ஒன்றாகி வழிபடு தெய்வமாகவே பரிணமித்துள்ளது.

**நீலி**, நீலகேசியில் வரும் ஒரு பெண் பாத்திரம். இவளைப் பற்றி நீலகேசி, பெரிய புராணம் ஆகியனவற்றில் மட்டுமின்றி **பழையனூர் நீலி** என்ற நாட்டுப்புறக் கதைப் பாடலும் உண்டு. நீலி ஒரு பார்ப்பனனின் மனைவி. பார்ப்பனன் பரத்தையர் உறவு கொண்டு நீலியிடமிருந்து பிரிந்து சென்று விட்டான். பின்னர், பெற்றோரிடமிருந்த நீலியிடம், அவளின் நகைகளைக் கைப் பற்றும் எண்ணத்துடன் பார்ப்பனன் மீண்டும் வருகிறான். அவளோடு வாழ்க்கை நடத்தப் போவதாகக் கூறி அவளை அழைத்துச் செல்கிறான். வழியில் அவளையும், குழந்தையையும் கொன்றுவிடுகிறான். அடுத்தப் பிறவியில் இந்தப் பார்ப்பனன் வணிகனாகப் பிறந்து இதே இடத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வருகிறான். அப்பொழுது பேயான நீலி தன் குழந்தையுடன் அதே வடிவத்தில் வந்து தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறாள். பார்ப்பனன் மறுக்க, பஞ்சாயத்து கூட, நீலி கண்ணீர்

படிப்பகம்

padippakam



வடிக்க, அதை உண்மையென பஞ்சாயத்தார் நம்பிட அவளோடும் குழந்தையோடும் வாழுமாறு பஞ்சாயத்தார் பார்ப்பனனுக்குக் கட்டளையிட, அன்றிரவே நீலிப்பேய் வணிகனைக் கொல்கிறது. பஞ்சாயத்தாரும் அடுத்தநாள் காலையில் பிராயச்சித்தமாக உயிர்விடுகின்றனர். இது கதை.

இப்பொழுது கூட "நீலிக்கண்ணீர் வடிக்காதே" என்பார்கள் "நீலி முண்டமே" என்பது பெண்களை நோக்கிய சர்வ சாதாரண திட்டு ஆகும். எவ்வளவுதான் நாகரிகச் சூழலாக இருப்பினும் எந்தப் பெண்ணுக்கும் நீலி என இன்றைக்கும் பெயர் இல்லை.

சிலப்பதிகாரம் பெருங்காப்பியம்; நீலகேசி சிறு காப்பியம். இரண்டின் கதைகளும் ஒரு குறிப்பிட்ட அளவு வரை ஒன்றுபடுகின்றன. ஒரு கணவன் தன் மனைவியை விட்டுப் பரத்தையோடு இருத்தல், மனைவியின் அணிகலன்களைக் கணவன் கேட்டல், வெளியூருக்கு வாழச் செல்வதாக இருவரும் புறப்படல் என்பனவரை இரண்டுமே ஒன்றுதான். அதன்பின் மாறுபடுகின்றன. கோவலன் காற்சிலம்பைக் கொண்டு போன இடத்தில் கள்வன் எனத் தவறாகக் குற்றம் சுமத்தப்பட்டுக் கொலை செய்யப்படுகிறான். கண்ணகி நீதி கேட்கிறாள். மதுரையை எரிக்கிறாள். ஆனால் நீலியின் பார்ப்பனக் கணவன் நகைக்காக குழந்தையோடு மனைவியையும் கொலை செய்ய, அடுத்தப் பிறவியில் பேயாக வந்து தன் முற்பிறப்புக் கணவனைக் கொலை செய்கிறாள் நீலகேசி.

இங்கு இரண்டு பெண்கள் முன் மாதிரிகளாக்கப் பட்டுள்ளனர். ஒருத்தி கண்ணகி. தன் கணவன் கோவலன் பரத்தையிடம் சென்ற பொழுதும் அவளது தனிமைத் துயரைக் கண்டு கோவலனின் பெற்றோர் வருந்திய பொழுதும் தன் கணவன் மீது எவ்வித விமரிசனமும் இன்றி வாழ்ந்தவள். கோவலனை 'போற்றா ஒழுக்கம் புரிந்தவன்' எனப்பின்னர்மனம் குறிப்பிட்டாலும் அது அவன் பெற்றோர் மனம் நோகச் செய்த செயலுக்கே வருந்து கிறாள். ஆனால் கணவன் மீது பழிவந்தபின் சீறுகிறாள். அதற்குப்பின்னர்தான் பேசுகிறாள். நீதி கேட்கிறாள். அரசனையே எதிர்க்கிறாள். கண்ணகியின் எதிர்ப்புக் குரல் வரலாற்று ரீதியில்/ இலக்கிய ரீதியில் முக்கியத்துவம் பெறினும் அவள் இல்லற வாழ்வில் கணவனோடு கொண்ட சமூக உறவில் கணவனின் செயல்கட்கு எதிர்ப்பின்றி மௌன சாட்சியாய் இருக்கிறாள்; ஆனால வெளியில் கணவனுக்காக உக்கிரமாகப் போராடுகிறாள். கணவன்களாகவும் இருக்கும் ஆண்களின் உலகம் அவளுக்கு கற்புக்கரசி, என்ற தகுதியை வழங்கி தெய்வத் தகுதியையும் சேர்த்துக் கொடுக்கிறது.

இன்னொருத்தி நீலி. அவள் அப்படி இல்லை. தன் கணவன் பரத்தையோடு கொண்ட உறவில் அவளது மன நிறைவு குறித்துக் குறிப்புகள் இல்லை. ஆனால் தன்னை வஞ்சித்துக் கொலை செய்த

படிப்பகம்

padippakam



கணவனை அடுத்த பிறவியில் பேயாக வந்து கொல்கிறாள். தன்னை விட்டுப் பரத்தையரிடம் சென்ற கணவன் வீட்டுக்கு வந்தபொழுது **இம்மை மாறி மறுமை ஆயினும் நீயாகியர் எம் கணவன்** எனச் சொன்ன **குறுந்தொகைப்** பாடல் மனைவியைப் போல அவள் இருக்க விரும்பவில்லை. ஆண்களின் உலகு அவளுக்கு ஒரு கொடூரமான படிமத்தை வழங்கியது.

**கண்ணகி** கதையிலும் **நீலி** கதையிலும் ஆரம்ப ஒன்றுபடுதளங்களுக்குப் பின் முடிவுகள் வேறுவிதமாக அமைக்கப் பட்டுள்ளன. இரண்டும் ஏறத்தாழ சமகாலத்திய கதையாக்கங் களாகக்கூட இருக்கலாம். சிலம்பின் ஆசிரியர் இளங்கோ. தமிழின் தலையாய காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம்; குடிமக்கள் காப்பியம்; தேசியக் காப்பியம் என இன்னும் பல பெருமைகள் சிலப்பதிகாரத்துக்கு உண்டு.

நீலகேசியின் ஆசிரியர் பெயர் தெரியாது. எக்ஸ்ட்ரா பெருமைகள் எதுவும் இதற்குக் கிடையாது. இரண்டுமே ஆண் களின் பார்வையில் சொல்லப்பட்ட இலக்கியங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஒன்று கணவன் தவறுகளுக்கு மௌன சாட்சி யாய் இருந்து கணவனுக்காகப் போராடும் பெண்மையை வலியுறுத்துகிறது. இன்னொன்று கணவனின் தவறுகளுக்குரிய தண்டனையை அடுத்த பிறவியில் (இந்தப் பிறவியல் கிடையாது) கொடுத்துப் பேயாய் அலைந்து திரியும் பெண்மையை வலியுறுத்து கிறது. இரண்டுமே ஆண்களின் பார்வைகளாக இருப்பினும் நம் சமூக அமைப்பு வரலாற்று ரீதியில் ஆண்களுக்கான பத்தரை மாற்றுப் பார்வை மட்டுமே ஏற்றுக் கொண்டது. பெண்களின் சமூக உளவியலும் இந்த ஆணின் பார்வையையே உள்வாங்கிச் செரித்து ரத்தமாக்கிக் கொண்டது. ஆனால் நாம் நமக்கான சமூக மதிப்புகளை உருவாக்கிக் கொள்ள வேணடும். இதற்கு பழைய மரபுகளின் கலகத் தொடர்ச்சி நம்மால் கையாளத் தக்கதே. அந்த விதத்தில் கண்ணகியும் பயன்படுகிறாள். கண்ணகியின் கலகக் குரல் கணவனுக்கானதாக இருந்திருப்பினும் செய்யாத குற்றத்துக்காக தன் கணவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டனத எதிர்த்து. மன்னனுக்கும், அவன் மனைவிக்கும் இயற்கையே மரணதண்டனை கொடுக்கும் அளவிற்கு செயல் பட்டவள் என்று புனையப்பட்டுள்ளது.

ஆனால் நீலியின் கலகச் செயல் தவறு செய்த கணவனுக்கே தண்டனை கொடுத்தலாகும். நீலியின் மாதிரி (Model) புறக் கணிக்கத் தக்கதோ அருவறுக்கத் தக்கதோ அல்ல அவள் 'கல்லா னாலும் கணவன்' என்ற சமூக மதிப்பை ஏற்பவள் அல்லள். தவறு செய்பவன் கணவனேயாயினும்—தண்டிக்கப்பட வேண்டி யவனே என்ற சமூக மதிப்பைக் கொண்டவள். அதனால்தான் நீலியின் படிமம் வெட்டிச் சிதைத்துக் கோணலாக்கப்பட்டது நீலியின் படிமத்தை நேராக்குவதோடு மட்டுமின்றி நிலைப்படுத்த வும் வேண்டும்.

படிப்பகம்

padippakam

# நாங்களும் மனிதர்கள் தான்...

—கலைநேசப்பிரபு

உனக்கு ஒரு தெரு
எனக்கு ஒரு தெரு.

உனக்கு ஒரு சாமி
எனக்கு ஒரு சாமி.

உனக்கு ஒரு சுடுகாடு
எனக்கு ஒரு சுடுகாடு

உனக்கு ஒரு நீதி
எனக்கு ஒரு நீதி

விளைவித்த தானியங்களை
உன்வீட்டு வாசலில் தந்துவிட்டு
புழக்கடை தொழுவத்தில்
பழையதை வாங்கிக் கொள்வதோடு
என் உழைப்பு முடிந்து விடுகிறது.

டீக்கடையின்
கண்ணாடி தம்ளருக்கும்
தகர டபராவிற்குமான தூரம்
உனக்கும் எனக்குமான
இடைவெளி.

பெயருக்குப் பின்னால்
எத்தனைப் பட்டங்கள் வாங்கினாலும்
முன்னால் நிற்கிற
'தலித்' என்பதே முக்கியமாய்...

எல்லோருக்கும்
நீ குடியானவன்
நான் பறையன்

ஆனால் தெரியுமா?
உன்னைப் போலவே
நாங்களும் மனிதர்கள்

—நன்றி- தோழமை-ஜூன் ஜூலை 94.

படிப்பகம்

padippakam

விவாத மேடை

# 1. சாதி ஒழிப்பும் தலித் விடுதலையும்

—மோகன்

தலித் விடுதலை எனும் கருத்தியல் அதிக முக்கியத்துவம் பெற்றுவரும் இன்றைய சூழலில் சாதி ஒழிப்புக்கும், தலித் விடுதலைக்குமான தொடர்பு பற்றியும், தலித் விடுதலை எனும் கருத்தியல் சாதி ஒழிப்புக்கும் இட்டுச் செல்லுமா என்பது பற்றியும் நாம் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

சாதியம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து முரண்பாடு இல்லை. எனினும் அதற்கான வழிமுறைகள் பற்றிய பிரச்சனைகளில் ஆழமான கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இல்லாத அளவுக்கு இன்று இக்கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இக்கருத்து முரண்பாடுகளை பிரதானமாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று சமூகப்புரட்சிக்குப் பிறகுதான் சாதியை ஒழிக்க முடியும் என்பது; இன்னொன்று சாதியை ஒழித்த பிறகுதான் சமூகப் புரட்சி சாத்தியம் என்று கூறுவது.

முதலாவது வகையைச் சார்ந்தவர்கள் சி.பி.ஐ சி.பி.ஐ.எம் மற்றும் ஒருசில மா.லெ குழுக்களாகும். இவர்கள் சாதியத்தை ஒரு சமூக யதார்த்தமாக அங்கீகரிக்கிறார்கள். என்றாலும் சாதி ஒழிப்புக்கான நடவடிக்கைகள் புரட்சிக்குப் பின்தான் நடைமுறைப்படுத்த முடியும் என்று வாதிடுகிறார்கள். இந்த நிலைப்பாடு இவர்கள் இன்று சார்ந்திருக்கும் ஓட்டு அரசியலுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது. இன்னும் ஒருபடி மேலே சென்று சாதிகளுக்கிடையில் நல்லிணக்கத்தைக் கூட முன்வைக்கின்றனர். இந்தா பாரம்பரிய கம்யூனிஸ்டுகள் இந்திய துணைக்கண்டத்தின் குறிப்பான பிரச்சினைகளில் கவனம் செலுத்தியதே இல்லை. வர்க்கப் போராட்டத்தை மேற்கத்திய பாணியிலேயே புரிந்து கொண்டுள்ளனர். தொழிற்சங்கங்கள் பிரதானமாக கூலி உயர்வுப் போராட்டங்களிலேயே மூழ்கி இருந்தன. தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தாலும் அவைகள் சாதி ஒழிப்பை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை. தாழ்த்தப்

படிப்பகம்

padippakam



பட்டவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான போராட்டங்கள் மட்டும் நடத்தப்பட்டன. சாதி தானாக ஒழிந்துவிடும் என்ற பார்வையைக் கொண்டவர்களாக இருந்தனர். அதனால் தான் தஞ்சை போன்ற பகுதிகளில் விவசாய கூலிகளான தாழ்த்தப்பட்டவர்களை பிரதானமாக அணிதிரட்டியிருந்தும் (கம்யூனிஸ்டு கட்சி பறையன் கட்சி என்று அழைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது) அவ்வப்போது தீண்டாமைக் கொடுமைகள் எழுகின்ற போது அதை எதிர்த்து நின்றார்களே ஒழிய சாதி ஒழிப்பின் அவசியத்தை புரிந்து கொண்டு செயல்படவிலலை.

இரண்டாவது கருத்தை ஆதரிப்பவர்கள் தங்களுக்கென்று சாதி ஒழிப்புக்கான வழிமுறைகள் பற்றி ஒரு கருத்தியலை உருவாக்கிக்கொள்ளவில்லை என்றே கூறலாம். இவர்கள் பெரும்பாலும் மேற்கத்திய அறிஞர்களின் கருத்துக்களை தழுவியே தங்களது கருத்துக்களை வகுத்துக் கொண்டுள்ளனர். தலித் விடுதலை, தலித் தலைமை, தலித்-பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை என்று பல்வேறு நடைமுறைகளை கருத்துக்களாக முன்வைத்தாலும் இவைகள் அனைத்தும் தெரிந்தோ தெரியாமலோ மேற்கத்திய அறிஞர்களான லூயிஸ் டுமண்ட், மாரிஸ் கோல்டியர், கெயில் ஓம்வெட் ஆகியோரின் கருத்துக்களைத்தான் பிரதிபலிக்கின்றன. அக்கருத்துக்களைக்கொண்டு அதை ஒட்டிய முடிவுகளை திட்டவட்டமாக முன்வைப்பவராக தமிழகத்தைப் பொறுத்தவரை அ. மார்க்சை குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட மேற்கத்திய அறிஞர்களை பொறுத்தவரை டுமண்டிற்கும், கோல்டியருக்கும் இடையில் ஆய்வு முறையில் வேறுபாடு இருப்பினும் இறுதியாக அவர்கள் முன்வைக்கின்ற தீர்வு ஒன்றுதான். அதைத்தான் கெயில் ஓம்வெத்தும் தமிழகத்தில் அ.மா-வும் பின்பற்றுகின்றனர். டுமண்ட் கூறுகிறார்: 'சாதியம் என்பது ஒரு மனோநிலையே. பல்வேறு நிலைமைகளில் பல்வேறு குழுக்களால் உருவாக்கப்பட்ட ஒரு மனோநிலையே பொதுவாக சாதியம்'.[1]

டுமண்டை பொறுத்தவரை சாதியம் இனக்குழு சமூகத்திலேயே உருவாக்கப்பட்டதாகும். அது பிராமணர்களால் சிந்தனையில் உருவாக்கப்பட்டு தீண்டாமை மற்றும் சடங்கு சம்பிரதாயங்களால் நிலை நிறுத்தப்பட்டது. சடங்காசாரங்களையும், அரசியலையும் இரண்டாகப் பிரித்து முன்னதை பின்னதுக்கு அடிப்படையாகக் கொள்கின்றார். மேலும் சாதியம் வர்க்க சமுதாயத்திற்கு

1. Louis Dumont; Home Hierarchicus



படிப்பகம்

padippakam



முந்தைய வகையினம் ஆகையால் சாதியத்தை ஒழிப்பதே முதல் பணியாகிறது. அரசியல், பொருளாதார பிரச்சனைகள் எல்லாம் இரண்டாம் பட்சமானது. சாதியை ஒழிப்பதற்கு சாதியப் போராட்டத்தை (Caste action) வழிமுறையாக முன்வைக்கிறார்.

**கோல்டியரைப்** பொறுத்தவரை மார்க்சியத்தில் உள்ள பொருளாதார வாதத்தை உடைப்பதை நோக்கமாகக் கொள்கிறார். அதற்கு அவர் கையாளும் வழிமுறை அடிப்படை, மேல் கட்டுமானம் இரண்டையும் ஒன்றாக இணைப்பது. அரசியல், மதம், சாதி, இரத்த உறவுமுறை அனைத்தும் உற்பத்தி உறவுகளைப் போல முதன்மையானவைகளாகும். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான இயக்க விதிகள் உண்டு. ஆகையால் அவைகள் சுயேட்சையாக இருக்கின்றன. கடைசியில் டுமண்ட் வந்த முடிவிற்கே இவரும் வந்தடைகிறார். டுமண்டைப் பொறுத்தவரை சாதியம் இருக்கும்வரை பொருளாதார நலனடிப்படையிலான வர்க்கங்கள் (Economic Classes) உருவாக முடியாது. கோல்டியரைப் பொறுத்தவரை சாதியம் இருக்கும்வரை உற்பத்தியில் பொருளாதார உறவுகள் (Economic relations of production) சாத்தியமில்லை. கெயில் ஓம்வெத் முன்வைக்கிற வாதமும் இது தான்.

தமிழகத்தைப் பொறுத்தவரை நேரடியாக அல்ல என்றாலும் பல்வேறு வடிவங்களில் தலித் விடுதலையையும் தலித் தலைமையையும் முன் வைக்கின்ற இயக்கங்களானாலும் சரி தனி நபர்களானாலும் சரி, மேற்சொன்ன கருத்துக்களின் பிரதிநிதிகளாகத்தான் இருக்கிறார்கள்.

முதலில் டுமண்ட் கூறுவது போல 3000 ஆண்டுகளாக எந்தவித மாற்றமுமில்லாமல் சாதியம் நிலைத்திருக்கவில்லை. கி.மு. ஐந்து ஆறு நூற்றாண்டுகளில் தான் சாதியத்தின் ஆரம்பக் கூறுகள் உருவாக ஆரம்பித்தது. எனினும் கி.பி. 6-ம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் அது முழுவளர்ச்சியடைந்த கிராம சமூகங்களாக மாறுகின்றன. இந்த காலகட்டமானது ஆசியபாணி நிலவுடமையின் உருவாக்கத்துடன் தொடர்புடைய காலகட்டமாகும். கி.பி. 16-ம் நூற்றாண்டிற்குப் பிறகு இன்றுவரைக்குமான கால கட்டத்தை எடுத்துக்கொண்டோமென்றால் சாதியம் தனது பழைய இயல்பை தொடர்ச்சியாக இழந்துவந்துள்ளதைப் பார்க்க முடியும்.

சாதிய உழைப்பு பிரிவினை திட்டவட்டமாக தன்னை நிலை நிறுத்திக்கொண்ட காலம் ஆசிய நிலவுடமை காலகட்டம்

படிப்பகம்

padippakam



மட்டுமேயாகும். ஆக சாதியம் மாறா நிலை கொண்டு என்றைக்கும் நிலைத்திருந்ததேயில்லை. அப்படி ஒரு கருத்தை முன்வைப்பதே பொருள் முதல்வாத அணுகுமுறையல்ல. மேலும் இன்று தமிழகத்தைப் பொறுத்தவரை சாதி ஒழிப்பு சமூகப் புரட்சிக்கு முன் தேவை என்கிற கருத்தைக்கொண்டவர்கள் சாதியத்தை விளக்க முற்படும்போது அது இன்றும் நீடிப்பதற்கான பொருளியல் அடிப்படைகளை விளக்குவதேயில்லை. அதன் வெளிப்பாடுகளைத்தான் பிரதானப் படுத்துகின்றனர்,

இங்கே இன்னொரு கேள்வி எழுகிறது, புதிய வடிவில் என்றாலும் இன்றளவும் சாதியம் நீடிப்பதற்கான காரணங்கள் என்ன என்பதாகும் முதலாவதாக புவியியல் அமைப்பு; இரண்டாவதாக தட்பவெட்ப நிலை. நிலத்திற்கான போட்டி மிகுதியாக இருந்த இடங்களில் நிலப்பற்றாக்குறையானது தனியுடைமை உறவுகளும், சுரண்டல் முறைகளும் மிகத்தெளிவாக உருவாக ஏதுவாக இருந்தது. நிலப்பற்றாக்குறை பகுதிகள் சிறு சிறு தீவுகளாக அமைந்தது (மத்திய தரைக்கடல் பகுதி) போக்குவரத்து வசதிகளை பெருக்கவும் உற்பத்தி சக்திகள் வேகமாக வளர்ச்சியடையவும் வாய்ப்பாக அமைந்தது. அது தன் பங்கிற்கு அரசியல், மதம், பண்பாடு என்று அனைத்து வடிவங்களையும் இடைவிடாமல் மாற்றியமைத்தது. ஆனால், நிலம், அளவுக்கு அதிகமாக கிடைக்கப்பெற்ற இந்திய துணைக்கண்டம் போன்ற பகுதிகளில் ஒருபுறம் பரந்த நிலப்பரப்பு போக்குவரத்தைக் கடினமாக்கியது. இன்னொருபுறம் சாகுபடிக்குட்படுத்தப்பட்ட நிலங்கள், விவசாய நடவடிக்கைகளுக்குப் பெரும்பாலும் இயற்கையை சார்ந்தே இருந்தது. இது ஒரு புறம் உற்பத்தி சக்திகள் வேகமாக வளருவதற்கு தடையாகவும் இன்னொருபுறம் சுரண்டல் முறைகள் தெளிவாக உருப்பெற தடையாகவும் இருந்தது. மக்கள் இயற்கையை அதிகமாக சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த பின்னணியில்தான் நீண்டகாலமாக பழைய மரபுகளையும் சடங்காசாரங்களையும் பெரியமாறுதல் ஏதுமின்றி பாதுகாக்க முடிந்தது. இயற்கையின் மீதான அதிக சார்பு, மனிதர்களுக்கிடையிலான உறவுகள் அனைத்தையும் இயற்கையானதாகவும், மீற முடியாததாகவும் மாற்றி விடுகிறது. அப்படி விதி, மறுபிறவி போன்ற கருத்தாக்கங்கள் உருவாக ஏதுவாயின. இந்த இயற்கைச்சார்பு, உற்பத்தியில் பெரிய மாற்றம் நிகழாமையால், மதம், சடங்காச்சாரங்கள், சாதியம் அனைத்தையும் சுயேட்சையான இயக்க முடையதாக தோன்றச் செய்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல... மிக மெதுவாக மட்டுமே மாற்றத்

படிப்பகம்

padippakam



திற்கு உட்பட்டுக் கொண்டிருந்த பொருளியல் அடிப்படைதான், பிற உறவுகள் அனைத்தும் இறுகியதன்மை பெற்றதற்கான அடிப்படை.

இன்று இருநூறு ஆண்டுகால காலனிய ஆட்சிக்குப்பிறகு நிலைமைகள் வேறுமாதிரியாக மாறியுள்ளன; இருப்பினும் சாதிய உறவுகள் புதிய வடிவில் நீடிக்கிறது. இயற்கைச் சார்பு நிலையிலிருந்து இயற்கையைக் கட்டுப்படுத்தும் நிலைக்கு வளர்ச்சியடைந்திருந்தும் தனியுடமைக்கான இயங்கு சக்தி மிகக்குறைவாக இருப்பதும், இந்தச் சிறிய வளர்ச்சியைக்கூட ஏகாதிபத்திய கட்டுப்பாடுகள் தடைப்படுத்துவதும் இந்த உறவுகள் இன்னும் நீடிப்பதற்கான காரணங்களாகும். இந்தியா போன்ற சமூகங்களில் சுயசார்பான முதலாளித்துவம் உருவாகும் என்று எதிர்பார்ப்பதே தவறான பார்வையாகும். இன்று முதலாளித்துவம் சர்வதேச உழைப்புப்பிரிவினையாக வளர்ச்சியடைந்துள்ளபடியால் சுயேச்சையான முதலாளித்துவ வளர்ச்சி என்பது சாத்தியமில்லை. இங்கு வளருகின்ற முதலாளித்துவம் ஐரோப்பிய மையங்களைச் சார்ந்தே எப்போதும் இயங்க முடியும். நமக்குத் தேவை சாதியம் இல்லாதொழிவதற்கான அடிப்படைகள் தோன்றியுள்ளனவா என்பதுதான். சமுதாயம் பல்வேறு சாதிகளாகப் பிரிந்திருந்த நிலைமாறி இன்று ஒவ்வொரு சாதியும் வர்க்கங்களாகப் பிளவுண்டுள்ளது. சாதியத்தை ஒழிப்பதற்குத் தேவையானதும் சாத்தியமானதுமான வடிவம் இதுதான்.

சாதி ஒழிப்புக்கான நடவடிக்கைகள் ஒரு புதிய சமுதாயத்திற்கான போராட்டத்துடன் இணைக்கப்படும்போது மட்டுமே முழுமையடைய முடியும். மாறாக, தலித் விடுதலை, தலித் தலைமை என்றெல்லாம் கூறுவது இன்று சாதியம் என்ன நோக்கங்களைப் பாதுகாக்கிறதோ அவைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான கருத்தியலாக மட்டுமே அமையும். மேலும் பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கைமுறை, கலாச்சாரம், மொழி ஆகிய அனைத்து தளங்களிலும் சாதியத்தை கட்டிக்காக்க முற்படுகிறார்கள் என்றாலும் அது பார்ப்பனர்களிடம் மட்டுமே நின்றுவிடவில்லை. பிற மக்களிடத்திலும் (பிற்படுத்தப்பட்டவராயினும் தாழ்த்தப்பட்டவராயினும் அனைத்துப் பிரிவினரிடையிலும்) ஒரு தத்துவமாக வேரூன்றி உள்ளது. அப்படி இருக்கும் போது பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை; தாழ்த்தப்பட்டோர்களுக்கு இடையே ஒற்றுமை போன்ற கருத்துகள் சாதிகளுக்குள் நிலவும் உள் முரண்பாடுகளைக்

படிப்பகம்

padippakam



களைந்து, ஒவ்வொரு சாதியையும் தனித்தனி பிரிவாக (Blocks) நிலைநிறுத்தி, சாதி சமத்துவத்தை கோருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நமக்குத் தேவை சாதிகளுக்கிடையில் சமத்துவமல்ல. சாதியப் பிரிவுகளையும், அடையாளங்களையும் இல்லா தொழிப்பதற்கான நடவடிக்கையாகும். இன்று சாதி அடையாளங்களை முன்நிறுத்தி கோரப்படும் ஒற்றுமை சாதிக்குள் வளர்ச்சியடைந்துள்ள புதிய வர்க்க முரண்பாடுகளை மூடி மறைப்பதை நோக்கமாகக் கொண்டே முன்வைக்கப்படுகிறது.

இந்தியாவில் ஆங்கிலேயர்களால் புகுத்தப்பட்ட முலாளித்துவ உறவுகளும், கருத்துக்களும் சுயசார்பு இந்தியக் கிராமங்களைப் பெருமளவு உடைத்துவிட்டது. என்றாலும் கிராமங்களைப் பொறுத்தவரை இந்த மாற்றம் மிக மெதுவாகவே நடந்தேறி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் பழைய கருத்தாக்கங்களும் இன்னும் உறுதியாகவே நீடிக்கின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல பொருளியல் அடிப்படைவில் மாற்றங்கள் மெதுவாக நிகழும்போது மேற்கட்டுமானங்கள் எப்போதும்வலுவானதாகவே இருக்கும். அது சுயேச்சையாக இயங்குவதுபோல்கூட தோன்றும். அதனால்தான் இந்தியா போன்ற பகுதிகளில் வலுவான மாற்றுக்காலச்சார இயக்கங்கள் தேவைப்படுகிறது. மேலும் இந்த உறவுகள் மக்களிடையே ஒற்றுமையுணர்வு வளர விடாமல் தடுப்பதற்கு திட்டமிட்டுப் பயன்படுத்தப்படுகிறது. முக்குலத்தோர் மத்தியிலும், வன்னியர்கள் மத்தியிலும் ஒரு கணிசமான சதவிகிதத்தினரின் வாழ்க்கை நிலைமைகள் தலித்துகளின் வாழ்க்கை நிலைமைக்கு ஒத்ததாக இருக்கிறது இருப்பினும், தாங்கள் உயர்ந்த சாதியினர் எனும் போலிப்பெருமைகள் தலித்துகளுடன் அவர்களை அடையாளப்படுத்திக்கொள்வதற்கு தடையாக இருக்கிறது. இந்த கருத்தாக்கம் இந்த சாதிகளின் ஆதிக்கவர்க்கங்களுக்கு வர்க்க ஒற்றுமைக்கெதிரான ஆயுதமாக பயன்படுகிறது.

இன்று சாதிய கட்டமைப்பின் பிரதான பணி வர்க்க உணர்வையும் போராட்டங்களையும் தடுப்பதாக மாறிவிட்டிருக்கிறது. தத்துவத் தளத்தில் இன்று முதலாளித்துவ சித்தாந்தமும், சாதிய சித்தாந்தமும் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொண்டுள்ளன.

'பணக்கார ஆதிக்கசாதியினர் தங்கள் சாதி ஏழைகள் அவர்களது வாழ்க்கை நிலைமைகளைவிட மேல்சாதிக்காரன் என்கிற அந்தஸ்துதான் பிரதானமானது என்று அவர்கள் உணர்ந்து

படிப்பகம்

padippakam



கொள்ளும்படி நடந்துகொள்கின்றனர். அதாவது, பிற சாதி ஏழைகளுடன் (தாழ்த்தப்பட்டோர்) சேருவதன் மூலம் கிடைக்கும் நலன்களை விட மேல்சாதி அந்தஸ்து உயர்வானது என்று வசதியானவர்கள் தங்கள் சாதி ஏழைகளுக்கு போதிக்கிறார்கள்.[2]

இது மேல்சாதி பிரச்சனை மட்டுமல்ல, அனைத்து சாதிகளின் இன்றைய நிலையும் இதுதான்.

'சடங்கு முறையில் காணக்கூடிய சமத்துவ உணர்வும் ஒற்றுமையும் சேரியின் கசப்பான நிலைக்கு எதிரானவை. எவ்வாறு ஹரிஜன சாதி, வர்க்கங்களாகப் பிரிந்து சடங்குகள் மூலம் ஒன்றுபட்டிருக்கிறது என்பதை முன்பு நாம் கவனித்திருக்கிறோம். உண்மையில் கவனித்தோமேயெனில் ஹரிஜனங்களுக்கிடையே வேற்றுமை தோன்றியிருப்பதை உணரலாம். ஒருவர் தம் ஜாதி சகோதரரின் உழைப்பையும், வியர்வையையும் வைத்து வாழ்கிறார். அவர்கள் ஒருவருக்கொருவர் கூட்டொற்றுமையுடன் வாழ்வதில்லை. ஒருவன் பட்டினியால் தவித்தாலும் அண்டை அயலார் கவனிப்பதில்லை. தெய்வத்திற்கு மட்டுமே அவர்கள் சகோதரர்களே தவிர நடைமுறை வாழ்க்கையில் அவர்கள் சகோதரர்கள் அல்லர்'.[3]

தலித்துகள் மத்தியிலும் எந்த அளவிற்கு முதலாளித்துவ கருத்துகள் ஊடுருவி இருக்கிறது என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று தேவை இல்லை. ஒரே சாதிக்காரர்கள் தங்களுக்குள் வட்டிக்குவிட்டு சுரண்டிக் கொள்கின்றனர். வன்னியர், நாடார் என்று எந்தச் சாதியை எடுத்துக்கொண்டாலும் வசதி படைத்தவர்கள் தங்கள் சாதி ஏழைகளைச் சுரண்டுவதைப் பார்க்க முடியும்.

முதலாளித்துவ பண்ட உற்பத்தி, சந்தை ஆகியவற்றின் வளர்ச்சி சாதிய நுகர்வுக் கட்டுப்பாடுகளை உடைத்து இன்று தனிநபர் நுகர்வு சுதந்திரத்தை வளர்த்திருக்கிறது. இது தலித்துகளில் ஒரு சிறுபிரிவினரை பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையச்செய்துள்ளது, இப்படி முன்னேறியவர்கள் தங்கள் சாதி ஏழைகளுடன் திருமண உறவு வைத்துக்கொள்ளாதது மட்டுமல்ல, மேல் சாதிக்காரர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று வசதியான வீடுகளை கட்டிக்கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால், சாதி

---

2. Joan P. Mencher; Group and Self identification
3. வறுமையின் பின்னணி; பக்கம் — 280—81.

படிப்பகம்

padippakam



அடிப்படையிலான இட ஒதுக்கீட்டைப் பெறுவதில் தயக்கம் காட்டுவதில்லை. மேலும், தங்கள் சாதி உறுப்பினர்களுக்கே வட்டிக்கு விட்டு, அவர்களையே வேலைக்கும், அமர்த்திக்கொள் வதன் நோக்கம் சுரண்டலை மூடிமறைத்து பிரச்சனைகள் எழுந் தால் சாதிப் பஞ்சாயத்து மூலம் கட்டுப்பட வைக்க முடியும் என்பதால்தான். சடங்குகள், ஆடிப்பெருக்கு போன்ற திருவிழாக் கள் சாதிக் கட்டுப்பாட்டையும் ஒரே சாதி என்கிற உணர்வை தக்க வைத்துக் கொள்ளவும் பயன்படுகிறது.

**தலித் ஒற்றுமை :**

'தலித் ஒற்றுமை'யை பொறுத்தவரை தலித் என்றால் யார் என்று முதலில் வரையறுக்க வேண்டியுள்ளது. சொந்த சாதி உறுப்பினர்களையே சுரண்டுகிறவர்களையும், ஆளும் வர்க்கங் களுடன் சேர்ந்துகொண்டு சொந்த சாதிப் பிரிவினருக்கே துரோகம் இழைக்கின்றவர்களையும் தலித் என்று கூறுவதா? அ. மா. கூறுகிறபடி சாதிய அடையாளங்களை முன்நிறுத்திய தலித் ஒற்றுமை என்றால் நிச்சயமாக இந்த ஒட்டுண்ணி வர்க் கத்தை சேர்த்துத்தான் ஆகவேண்டும். இன்று தலித் ஒற்றுமை பற்றி பேசுகின்ற அனைவரும் கவனிக்க வேண்டிய பிரச்சனை இது. இங்கேதான் சாதி அரசியலின் புதியமுகம் தென்படுகிறது. தலித் ஒற்றுமை என்பது இன்று சுரண்டலை மூடிமறைப்பதற் கான ஆயுதமாகவும் மேலும், இன்றைய சாதி அரசியல் நீடித் திருப்பதற்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளது இன்னொரு புறம், தலித் மக்களில் பெரும்பான்மையினரான உழைக்கும்

---

# வாழ்த்துகிறோம்

மனிதநேயமிக்க மக்கள் கவிஞர் இன்குலாப், கமருனிசா ஆகியோரின் புதல்வன் திரு. **செல்வம்** கீழக்கரை பக்கீர் முகைதின், சகிராபேகம் ஆகியோரின் திருநிறைச்செல்வி **ரஷ்மின்பானு** ஆகி யோரின் **வாழ்க்கை ஒப்பந்த விழா** 7-5-95 அன்று சிறப்புற நடை பெற்றது. வரவேற்பு நிகழ்ச்சியில் பொதுவுடைமை இயக்கத் தோழர்களும், தமிழக தமிழீழத் தேசிய இயக்கத் தோழர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். **மக்கள் தளமும்** மணமக்களை வாழ்த்துகிறது. நாட்டுப்புறவியல் கலைஞர் முனைவர் கே. ஏ. குணசேகரன் 'தன்னானே' கலைக் குழுவின ரோடு இசைவிருந்து அளித்தார்.

படிப்பகம்

padippakam



# கல் குப்பை

—கனல் மைந்தன்

இந்த நூற்றாண்டிலேனும்
தமிழனை வார்த்து விடலாமென
தமிழொரு கனாக் கண்டது
ஊக்கம் கொண்டன உளிகள்
கள்ளச் சுத்திகள் தயாராயின
பாறையாய்க் கிடந்த மேனி
பனிபோல் இடம் கொடுக்க,
உருவாகத் தொடங்கியது சிற்பம்
உதிரத் தொடங்கின பிசிறுகள்
உருகும் மெழுகுபோல்
கல்லும் கரையத் தொடங்கியது...
கடைசியில்...
பாறை இருந்த இடத்தில்
கல் குப்பை காலைக் கிழித்தது.

---

மக்கள் மத்தியில் சாதிய கட்டமைப்பு இன்னும் நீடிப்பதற்கான காரணம் பழைய சடங்காசாரங்களும் கட்டுப்பாடுகளும் மட்டு மேயல்ல. பொருளாதார பாதுகாப்பின்மையும் காரணமாக உள்ளது. இவர்கள் பகுதி ஆதிக்க சாதிகளை எதிர்த்து எப்போதும் மீறல்களை நடத்துகின்றனர் ஆனால், பொருளாதார நிர்ப்பந் தங்கள், அன்றாட வாழ்க்கைக்காக பகுதி ஆதிக்க சாதியைச் சார்ந்து இருக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள், அவர்களை சாதிய கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கும்படி நிர்ப்பந்திக்கின்றன.

தலித் உழைக்கும் மக்கள் சாதி அடையாளங்களை முன் வைத்து ஒன்று சேருவதன் மூலம் தலித் ஒட்டுண்ணி வர்க்கத்திற்கு சுரண்டலுக்கான அடிப்படையை தருவது மட்டுமல்லாமல் ஆதிக்க சாதிகளைப் பொறுத்தவரை இதைக் காட்டி தங்கள் சாதி உழைக்கும் மக்களை சாதிய கருத்தியலுக்குள் கட்டுப்படுத்தி வைப்பதற்கும் பயன்படுகிறது. இதனால் சாதிய உறவுகளை கட்டிக் காக்க விரும்புகின்ற வர்க்கங்களுக்கு மட்டுமே இது பயன் தரும். இதன் மூலம் உழைக்கும் மக்களின் ஒற்றுமையையும் வர்க்க அணி சேர்க்கையையும் தடைப்படுத்த முடியும்.

படிப்பகம்

padippakam



## சாதி ஒழிப்பு

நமக்கு இன்று தேவை சாதிய அடையாளங்களை முன் நிறுத்திய சாதிகளின் ஒற்றுமையல்ல. மாறாக, மாற்றுக் கலாச் சார அடையாளங்களை முன்நிறுத்திய உழைக்கும் மக்களின் ஐக்கியம்தான். பொருளாதாரப் போராட்டங்களை நடத்துவதன் மூலம் மட்டும் இந்த ஒற்றுமையை சாத்தியப்படுத்த முடியாது: அனைத்து சாதி உழைக்கும் மக்களையும் ஓரணியில் திரட்ட வேண்டுமென்றால் அதற்குச் சரியான செயல் தந்திரங்களை கையாள வேண்டியுள்ளது. இதற்கு மேல் சாதி உழைக்கும் மக்கள் தங்களை சனநாயகப்படுத்திக் கொள்வதும், சாதி ஆதிக்கத்திற் கெதிரான போராட்டங்களை நடத்துவதும் முதல் நிபந்தனை ஆகியது.

முதலில் பகுதி ஆதிக்க சாதியைச் சார்ந்த உழைக்கும் மக்களை சனநாயகப் படுத்த வேண்டுமென்றால் வர்க்க அணி சேர்க்கையை அவர்களிடமிருந்துதான் துவங்க வேண்டியுள்ளது. அது அவர்களது சொந்த சாதி நில உடமையாளர்களுக்கெதிரான பொருளாதாரப் போராட்டத்துடன்தான் துவங்க வேண்டும். இரண்டாவதாக தலித்துகளுக்கெதிர்ாக கட்டவிழ்த்து விடப்படும் தீண்டாமைக் கொடுமைகள், வன்முறைகள் அனைத்துக்கும் எதிராக பகுதி ஆதிக்க சாதி உழைக்கும மக்களை அணி திரட்ட வேண்டியுள்ளது. தங்கள் சாதி ஆதிக்க வெறியர்கள் தலித்துகளுக் கெதிராக ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும்போது அதை எதிர்ப்பதற்கும் தலித்களை ஆதரிப்பதற்கும் ஆதிக்க சாதி உழைக்கும் மக்களை பயிற்றுவிக்க வேண்டும்.

இதுபோன்ற நடவடிக்கைகள் மட்டுமே இரண்டு சாதி உழைக்கும் மக்களையும், தங்கள் இருவருக்கும் பொதுவான பொருளாதார ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்கும் கடைசியில் தங்களை ஓரே வர்க்கமாக இனம் காண்பதற்கும் இட்டுச் செல்லும்.

தலித்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் தனித்தனி இயக்கங்கள் வேண்டும் என்று கூறுவதில் எந்தவித நியாயமுமில்லை விவசாயத் தொழிலாளர்கள், நகர பாட்டாளி வர்க்கத்தினர், அவர்களின் வெகுசன இயக்கங்களில் உள்ளவர்கள் போன்றோர் எந்த அள விற்கு வர்க்க கட்டமைப்பை எதிர்க்கிறார்களோ அந்த அளவிற்கு சாதிய கட்டமைப்பையும் எதிர்ப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.[4]

padippakam



பிற்போக்கு வர்க்கங்கள் எப்போதும் உடைத்தெறியப்பட வேண்டிய உறவுகளை தக்கவைத்துக் கொள்வதில் அதிக அக்கறை செலுத்தும். அந்த உறவுகளை உடைத்தெறிய வேண்டும் என்று கூறுபவர்களின் பணி புதிய அடையாளங் களுக்காகப் போராடுவதாகும். இதற்கு மாறாக, தலித் ஒற்றுமை, தலித் தலைமை போன்றவற்றை முன் வைக்கின்ற அறிவாளிகள் அனைவரும் சாதியத்தை தக்க வைத்துக் கொண்டுள்ள இன்றைய முதலாளித்துவ சுரண்டல் முறைக்கும் அவர்களின் அரசியல் சூழ்ச்சிகளுக்கும் துணை போகின்றவர்களாகவே இருப்பர்.

□

# 2. தலித் ஒற்றுமை

—உஞ்சைராசன்

'தலித் ஒற்றுமை' என்பது இன்றைய அரசியல் பண்பாட்டுச் சூழலில் மீண்டும் கட்டமைக்கப்பட வேண்டிய அவசிய மேற் பட்டுள்ளது. அப்படியெனில் முன்பு கட்டமைக்கப்பட்ட ஒற்றுமை யில் தற்போது பங்கம் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி எழலாம். தாழ்த்தப்பட்டோரின் போராட்ட வரலாறென்பது ஒன்றிரண்டு பதிவுகளன்றி மற்றையவை செவிவழிச் செய்திகளாகவே நிலவு கிறது. அவைகளும் தலைமுறை இடைவெளி காரணமாக தானா கவே மறைந்துபோகிற போக்கே எஞ்சியுள்ளது. இப்போக்குகளி னூடே அட்டவணைப்படுத்தப்பட்டோரான தாழ்த்தப்பட்டு தீண்டாமைக்குட்பட்டவர்களின் போராட்டம் இந்தியம் தழுவிய தாகவோ அல்லது தமிழகம் தழுவியதாகவோ இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. தீண்டப்படாத மக்கள் மத்தியிலிருந்து ஒட்டுமொத்தமான போராட்டம் எழாமைக்குக் காரணம் மிகக் கொடூரமான ஒடுக்குமுறையே. இவ்வொடுக்கு முறை வட்டாரம் தழுவியதாக இருந்ததே காரணம். ஏனெனில் சாதிப் பிரச்சினை பொதுவான நிலப்பகுதியைக் கொண்டிருந்தாலும் சாதிக்குச்சாதி யான ஒடுக்குமுறையின் தன்மைகள் வட்டாரச் சூழலை மையப் படுத்தியிருக்கிறது. தீண்டாமைக்குட்பட்ட சாதியார்கள் பரவ

4. Sharad Patil: EPW Vol. XIV Dialects of Caste and Class Struggle.

படிப்பகம்

padippakam



லாக இப்பூகோளப் பரப்பை நிரப்பியிருந்தாலும் படிநிலைச் சாதிகளில் ஆதிக்க வேறுபாடுகள் கொண்டியங்கும் தன்மை காரணமாக ஆதிக்கம் அதிகமாக நிலவும் பகுதிகளில் ஒரு மாதிரியான எதிர்ப்புணர்வும், ஆதிக்கம் குறைந்த பகுதிகளில் ஒரு மாதிரியான எதிர்ப்புணர்வும் என எதிர்ப்புணர்வு தன்மைகளிலே கூட வேறுபாடுகள் இருந்து வருகின்றன. இதனால்தான் தாழ்த்தப்பட்டவர்களின் எதிர்ப்புணர்வு ஒருமைப்படவோ அதை நோக்கிய வலிமையான போக்கோ இருந்திடவில்லை. காரணம், ஆதிக்கம் இரண்டு வகையாகப் பிரயோகிக்கப்படுகிறது.

சாதியை வலுப்படுத்தி சாதிகளுக்கான குணங்களையும் வலுப்படுத்தி எல்லாமிலும், எல்லாவற்றுக்கும் தாங்களே மேலானவர்கள், மேலானது என்கிற சருத்தியலை, மனு அநீதிக் கோட்பாட்டை பார்ப்பனர்கள் தங்களின் சூழ்ச்சித்திறனால் நிலைநாட்டிக் கொண்டனர். மற்றொரு வகையில், சாதிப் படிநிலைகளில் கருத்தியலை திணித்த அதே வேளையில் படி நிலைப்படி ஆதிக்க முறைமைகளையும் வகுத்துக் கொடுத்து விட்டனர். ஒருவருக்கொருவர் ஒன்றுக்கொன்று மேல் என்ற எண்ணம் காரணமாக இவ்வெண்ணத்தை நிலை நிறுத்திக் கொள்ள சூழ்ச்சிக்காரர்களுடன் இணைந்துகொண்டு வன்முறை மூலமாக ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். இம்மாதிரியான கருத்தியல் ஆதிக்கமும் வன்முறை ஆதிக்கமும் ஒன்றுக்கொன்று பகையானதைப் போன்ற தோற்றங்கொண்டிருந்தாலும் தங்களை உயர்த்திக் கொள்வதில் உள்ளுக்குள் நட்புக் கொண்டிருக்கிறது. இப்பகைமையான தோற்றங்காரணமாக கருத்தியல், வன்முறை இரண்டும் ஒன்றையொன்று ஓர் நிலைப்படுத்திக்கொள்ளாதது போன்ற தோற்றம் கொண்டிருந்ததை பரவலான தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்திருக்க வில்லை. புறநிலையில் இப்போக்குகளை கூர்ந்து அறிந்து கொள்ளும் கல்வி அறிவு முற்றிலும் தடைசெய்யப்பட்டிருந்தது.

ஆங்கில அரசு தனது ஆதிபத்தியத்தை விரிவுபடுத்த எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக இங்கு நிலவிய உள் முரண்களை காரணமாக்கிக்கொண்டு தாழ்த்தப்பட்டவர்களில் ஒரு சிலருக்கு கல்வியறிவு வழங்கியது. இவ்வாறு பெற்ற கல்வியினால், தனது மேலாதிக்கத்தை நிறுவிக்கொண்ட இந்து, பார்ப்பனீயத்தின் கொடுந்தன்மையை உணரமுடிந்தது. அத்துடனில்லாது பார்ப்பனர்கள் சூழ்ச்சியுடன் தங்களுக்கு வேறு எந்த வகையிலும் இடையூறு வந்துவிடக்கூடாது என்று திட்டமிட்டு வளர்க்கப்பட்ட ஆதிக்க சாதி வன்முறை அமைப்பையும் அறிந்து கொள்ள முடிந்தது. இப்படி இருவகைப்பட்ட ஆதிக்கங்களை

படிப்பகம்

padippakam



யும் ஒருசேர அறிந்துகொண்டாலும் கருத்தியல் ரீதியிலான ஆதிக்கத்தை ஓரளவே எதிர்கொள்ள முடிந்தது. சாதியமைப்பை முற்றிலும் தகர்த்தெறியும் தத்துவ பலத்தை அம்பேத்கர் ஒருவரால் தான் தர முடிந்தது. என்றாலும் வன்முறை உள்ளடங்கிய ஆதிக் கத்தை எதிர்த்திடும் தாழ்த்தப்பட்ட மக்கள் திரளை முழுமையாக அவரால் கட்டமைக்க முடியவில்லை.

இந்த அனுபவ உண்மைகளுடன்தான் இன்றைய நிலை மையை பொருத்திப் பார்க்க வேண்டும். அம்பேத்கர் தாம் வாழ்ந் காலத்தில் எவ்வளவோ முயன்ற போதும் இருவகையான ஆதிக்கப் போக்குகளையும் ஒருசேர எதிர்த்திட முடியவில்லை. காரணம் சமூக, அரசியல், பொருளியல் சூழல் சரியான வாய்ப்பை உண்டாக்கித்தரவில்லை. ஆனால் இன்று... ஒப்பீட்ட ளவில் பல்வேறு துறைகளிலும் எவ்வளவு ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் உள்ளும் புறமுமாகப் போராடி அதிலும் மிளிற முடியும் என்பதை தாழ்த்தப்பட்டோர் நிரூபித் திருக்கின்றனர். மேலும் அவர்களுக்கு அம்பேத்கரின் தத்துவங் களை இன்று ஓரளவேனும் படித்துப் புரிந்து செயற்தளத்தில் இட்டுச் செல்லும் அரசியல் அனுபவங்களும் கிடைத்துள்ளன. இந்த விழிப்புணர்வை மேன்மேலும் வளர்ப்பதும் சாதியமைப்பின் மீது அவர்களது ஒருமுகப்பட்ட எதிர்ப்பைத் திருப்புவதும் மிகவும் அவசியமானதும் காலத்தின் கட்டாயமுமாகும்.

அம்பேத்கர் வாழ்ந்த அல்லது மறைந்த கால கட்டத்தி லேயே இந்தியாவிலும் தமிழகத்திலும் ஒருசேர வளர்ந்த முதலாளிய, நிலவுடைமை எதிர்ப்பு இங்கு மார்க்ஸியப் புரிதல் களையும் ஏற்படுத்தியது. இம் மார்க்ஸிய அரசியலறிவும் ஓரளவு தாழ்த்தப்பட்ட மக்களை விழிப்படையச் செய்தது. என்றாலும்

---

**மனுசங்க**—தலித் இலக்கிய இதழ்—ஆசிரியர் உஞ்சை ராசன்—மார்ச்சு—ஏப்ரல்—ரூ. 4-00. 38/4, எஸ். எஸ். பி. காலனி, மதுக்கூர்-614 903.

**புதிய நம்பிக்கை**—ஆசிரியர்—பொன்விஜயன் ரூ. 6/-50, வன்னியர் தெரு, சென்னை-94.

**தாராமதி**— ஆசிரியர்— குன்றம் மு. இராரத்நம் புலமைப் பண்ணை, கோவை-7.

**வதைபடும் வாழ்வு**— விழி.பா. இதயவேந்தன், ரூ. 18/- தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48, இராணி அண்ணா நகர், சென்னை-78.

படிப்பகம்

padippakam



அரசியல் தளத்தில் இம்மக்களை முதன்மைப்படுத்துவதை இன்று வரை கூட இதிலும் உட்புகுந்துகொண்ட பார்ப்பனீயச் சூழ்ச்சி தடைபோடுகிறது. இத்துடனில்லாது இந்தியச் சூழலை கவனத்தில் கொள்ளாமல் உலக முதலாளியச் சூழலை மட்டும் கவனப்படுத்திக் கொண்ட இந்திய மார்க்ஸியர்கள் அதே உலக முதலாளியம் இந்தியாவுக்குள் நுழையும்போது இங்குள்ள சாதி மாலையைக் கழுத்தில் அணிந்துகொண்டுதான் நுழைந்தது என்பதை உணரவில்லை. இதன் காரணமாக இந்தியச் சூழலில் முழுமையாகப் புரிந்துகொண்ட அம்பேத்கரியத்துடன் மார்க்ஸியத்தைப் பொருத்திப் பார்க்காத மாபெரும் தவறைச் செய்தனர். அம்பேத்கர் கூறியதைப் போன்று பார்ப்பனீயத்தையும் முதலாளித்துவத்தையும் ஒருசேர எதிர்க்க வேண்டிய அவசியத்தை உணராமல் பார்ப்பனீயத்தை விடுத்து முதலாளிய எதிர்ப்பை மட்டும் உயர்த்திப் பிடித்தனர். இதனால் இந்திய மார்க்சியம் பார்ப்பனீயமயப்பட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் பாமரத்தன்மை நிலை நிறுத்தப்பட்டது. மிக முக்கியமான இரண்டு தத்துவங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய இம்மக்கள் இரண்டுங்கெட்டான் நிலையை அடைந்தனர். இந்த நிலையை மிகவும் நன்கு பயன்படுத்திக் கொண்ட பார்ப்பனீயம் தன்னை புதிய உருவத்தில் மாற்றிக் கொண்டு காங்கிரசிற்குள் இழுத்துக் கொண்டது.

சாதியாதிக்க வன்முறையிலிருந்து கம்யூனிஸ்டுகள் கடந்த காலத்தில் ஓரளவு பாதுகாப்பளித்த போதிலும் இந்தியா முழுமையும் காங்கிரஸ் ஈர்த்துக்கொண்டதிலிருந்தோ தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் ஈர்த்துக்கொண்டதிலிருந்தோ தாழ்த்தப்பட்ட மக்களை விலக்கி அணிதிரட்ட முடியவில்லை. இந்தச் சூழலில் இன்று அம்பேத்கரின் நூற்றாண்டும் இந்தியா முழுமையும் இந்துத்துவத்தை மறு நிர்மாணம் செய்யப்புகுந்த பார்ப்பனியர்களின் பயங்கரமான போக்குகளும் தலித் மக்கள் மத்தியில் புதிய உணர்வுகளைத் தூண்டியுள்ளன. இவ்வுணர்வுகளின் அடிப்படையில் தலித் பார்வையில் இலக்கியம், பண்பாடு, அரசியல், தலைமை, தேசிய விடுதலை, மொழி இவைகளை விமர்சனம் செய்கின்றனர். கூடவே, பிற இயக்கங்களிலிருந்து வெளியேறுகிற மாற்றங்களும் நிகழ்கின்றன. இப்படியான சூழலில்தான் எதிர் முகாமிலிருக்கிற பார்ப்பனியர்களாலும், இதுவரை தலித்துகளை முன்னிறுத்தி அரசியல் செய்த கம்யூனிஸ்டுகளும், பகுத்தறிவாளர்களும் இன்னபிற தமிழ் தேச சிந்தனையாளர்களும் அவர்களிடம் எழுந்துள்ள புதிய சிந்தனை குறித்து தீவிர கருத்து செலுத்துகின்றனர். இவர்களிலும் சிலர் எதிர்நிலை எடுக்கவும் தயங்காதவர்

படிப்பகம்

padippakam



களாக இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில்தான் தலித்துகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. இந்த எச்சரிக்கை என்பது தலித்துகள் இன்னும் பன்முகப்பட்ட தன்மைகளுக்கு தம்மை உட்படுத்திக்கொண்டு முன்னேறுவதற்கான தாக்கிக் கொள்ள வேண்டியதாகும். தலித்துகள் முன்பிருந்ததை விட ஒத்த சிந்தனையுடையவர்களாக மாறியிருக்கின்றனர். இதை ஒற்றுமையின் தோற்றுவாயாகக் கருதலாம். என்றாலும் இப்படியொரு ஒத்த சிந்தனையடிப்படையில் கட்டப்படுகின்ற ஒற்றுமைக்கும் மத்தியில் இவர்களுக்குள்ளும் புகுந்துள்ள சாதிய மனோபாவம் அவ்வப்போது தோற்றாமலில்லை (ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சாதியானாக இருந்தாலும் இந்தியம் அனுமதிக்கும். காரணம் இதற்குப் பிறகு மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைக்கும் இம்முறை எவ்வளவு எளிதானதாக இருக்கிறதென்பதை இந்தியம் பேசும் இந்துத்துவமும் பார்ப்பனியமும் நன்குணர்ந்துள்ளது). இவ்வாறு இவர்களுக்குள்ளும் தோன்றுகின்ற இந்த மனோபாவத்தினால் எம்மாதிரியான ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகின்றனர் என்பதை யாரும் எண்ணிப்பார்ப்பதில்லை.

குறிப்பாக எழுபத்தாறு (1991 மக்கள் தொகை கணக்கெடுப்பு) உபசாதிகளைக் கொண்ட தாழ்த்தப்பட்டோரிலும், முப்பத்தாறு உபசாதிகளைக்கொண்ட பழங்குடியினரிலும் பொதுவாகக் பறையர், பள்ளர், சக்கிலியர், வள்ளுவர், ஆதி ஆந்திரர், ஆதி கர்நாடகர் என்ற பெரும்பான்மைச் சாதிகளைக் காணலாம். இவைகளிலும், கிராமப் புறங்களில் விவசாயம், மற்றும் அடிமை முறை வேலை செய்பவர்களாக பறையர், பள்ளர், சக்கிலியர்களைக் கூறலாம். (பிற வள்ளுவர், ஆதி ஆந்திரர், ஆதி கர்நாடகர் இவர்கள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர்.) கிராமப்புறங்களில் வாழ்கின்ற இந்த மூன்று பெரும் சாதியார்கள் மட்டுமே மிகவும் கேவலமாக தீண்டாமைக் குட்படுத்தப்பட்டு வருகிறார்கள். பூகோள ரீதியில் தமிழகத்தின் வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் பறையர்களும், தெற்கு மற்றும் தென் மேற்கில் பள்ளர்களும், மேற்கு மற்றும் வடமேற்கில் சக்கிலியர்களுமாக முக்கோண வடிவிலுள்ள தமிழகம் முழுதும் பரவிக்கிடக்கின்றனர்.

வேறு எந்தச் சாதியார்களுக்கும் இல்லாத புவிச்சூழல், எண்ணிக்கை பலம், அடிப்படை அரசியல் உணர்வு இவர்களிடமே உண்டு. அதாவது இந்தச் சமூக அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பது. எனவே மற்றெல்லா சாதியார்களையும் விட தலித்துகள் கூடுதலாய் அய்க்கியப்பட வேண்டும்

படிப்பகம்

padippakam



தலித்துகளைப் பிரித்து வைத்திருப்பது உட்சாதி உயர்வு தாழ்வுச் சிந்தனைதான். நாம் ஒரே குடும்பத்தினர் என்பதற்கும்... இல்லை இல்லை நாம் வேறு வேறு வகையினர்தான் என்பதற்கும் நிறையஆதாரங்களும் கதைகளும்உண்டு. மொத்தத்தில் இம்மாதிரியான சிந்தனைகள் தலித் மக்கள் ஒன்றுபட துணைபுரியவில்லை. பார்ப்பனீயச் சூழ்ச்சிகளாலும் நிலவியல் மற்றும் உழைப்புச் சூழலாலும் இவர்களுக்குள்ளும் நிலவுகிற வேறுபாடுகளை இத்தடைகளை மீறுவதிலிருந்தே உடைத்தெறிய வேண்டும். அதற்கான சூழல் உருவாகி வருகின்றபோது புதிய உணர்வுகளை வளர்த்துக்கொள்ள வேண்டியது கடமை. அதுவொன்றே தலித்துகளின் முதிர்ச்சியைக் காட்டும். ஏனெனில் பார்ப்பனீயம் கேள்விக்குள்ளாக்கப்படும்போது அது புதிய வடிவங்களை மேற்கொள்ளும் ஆயினும் புறநிலையில் நிலவும் நிலவியல் மற்றும் உழைப்புச் சூழல், அடிப்படை அறிவியல் மற்றும் பொருளியல் மாற்றங்களால் தாழ்த்தப்பட்டோர் ஒன்றிணையும் சாத்தியங்களை நெருக்கியுள்ளது. இந்த சாத்தியங்களுடன் முன் கூறியதுபோல ஒடுக்குமுறை வட்டார வகைப்பட்டதினின்று பொதுமைப்பட்டதாக மாறி வருகிறது. மேலாதிக்க மற்றும் ஆதிக்க சாதியினர் தங்களின் இருப்பை மறுகட்டமைப்புச் செய்து அரசதிகாரத்துடன் முன்னிலும் பலமானவர்களாக மாற்றி வருகின்றனர். இவ்வாறு தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறவர்கள் பண்பாட்டு ரீதியில் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ளவில்லை. இவ்வேறுபாடுகளினூடேதான் அவர்களின் அய்க்கியம் கட்டப்படுகிறது. இப்போக்குகளை தலித்துகள் அலட்சியம் செய்துவிட முடியாது. இவர்களுக்குள்ளும் வளர்ந்துள்ள நிலவுடைமை மற்றும் தனியுடைமைச் சிந்தனையிலிருந்து வலுவடைந்துள்ள சாதிச் சிந்தனைகள் தன் குடும்பம், தன் உறவினர், தன் சாதியார் என்ற வலைக்குள் சிக்க வைக்கிறது. இந்த வலை மிகவும் நுட்பமானது. எனவே இது பாதுகாப்பானது என்றுணர்கிற போக்கை எளிதில் அறுத்தெறிந்து விடமுடியும் என்று கூற முடியவில்லை. ஆனால் எவ்வளவு நுட்பமுடையதெனினும் இது அறுக்கப்பட வேண்டியதென்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த உட்சாதி மனோபாவம் தகர்த்தெறியப்பட்டு ஒத்த உணர்வு எப்போது வரும்?

அம்பேத்கர் அக மணம், புறமணம் குறித்து நிறைய விவாதித்த போதிலும் நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் சட்டத்தின் கடமை என்பதாகவே முடித்தார். உண்மைதான். ஆனால் இந்த சாதியச் சமூக அமைப்பை எவ்வகையிலும்

படிப்பகம்

padippakam



மாற்றிவிடக் கூடாது என்று சத்தியம் செய்துவிட்டு அரசதிகாரத்திலுள்ளவர்களும் இந்துத்துவ உள்ளடக்கம் கொண்ட இந்த அரசும் இதை சட்டமாக்கி நிறைவேற்றுமா? என்பது கேள்விக்குறியே. அம்பேத்கர் சொன்ன எத்தனையோ விசயங்கள் சட்டமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்த உறுதியளிக்கிற இந்த அரசு அகமணத்தடைச் சட்டத்தை அமுல்படுத்தி புறமணத்தை ஊக்குவிக்குமா? இது நமது எதிர்பார்ப்பு என்றாலும் அரசதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற அரசியல் சிந்தனையுடையவர்கள் அரசதிகாரம் பற்றிய ஆழ அகலங்களையும் நடைமுறையுத்திகளையும் நன்கு அறிந்திருப்பதும் நிலவும் அரசதிகார மையங்களுக்கு எதிரான அல்லது நிகரான நடைமுறையைக் கொண்டிருக்க வேண்டியதும் அவசியம். எனவே இந்த பண்பாட்டுக் கூட்டிலும் தலித்துகளே முன்னுதாரணமாக இருந்து காட்ட வேண்டும். இதை பண்பாட்டரங்கத்திலிருந்து மட்டும் தீர்த்துவிட முடியும் என்பதற்கு எந்த உதாரணங்களும் இல்லை. எனவே இதை இதற்கு இணையான, இதையும் தீர்மானிக்கிற அரசியல் அரங்கிலிருந்துதான் தீர்க்க முடியும் தலித்துகள் வெறுமனே அரசு சலுகைகளுக்காகவும் தமது சாதிகளை தக்க வைத்துக் கொள்வதற்கான போராட்டங்களை நடத்துபவர்களாக மட்டும் இருக்க முடியாது. மாறாக, வாழ்க்கையை மீட்பவர்களாகவும் இவ்வாழ்க்கை மீட்புப் போராட்டத்தின்போது நமது சாதியைத் தூக்கி எறிந்துவிட்டு சாதியற்ற முற்றிலும் புதியதான சமூகத்தைக் கட்டமைக்கப்போகும் மிகப் பெரிய அரசியல் கடமையைச் செய்யும் முன்னணிப் புரட்சியாளர்கள் என்பதை நிருபிக்க வேண்டும் சாதியை மட்டுமல்லாமல் இதை கட்டிக்காக்கும் இந்தியத் தன்மையானதெனினும் தமிழகத்தன்மையானதெனினும் முற்றாக துடைத்தெறியும் வகைப்பாடுகளும் அதில் அடங்கும். எனவே தலித்துகளின் அரசியல் கடமை என்பது தொலைநோக்குடையது. தொலை நோக்குடைய இத்திட்டத்தில் இதே தன்மையுடைய பண்பாட்டுப் பிரச்சினையை முன்நிபந்தனையாக்குவது தொலைநோக்குடைய அரசியலுக்கு குறுக்காகவே அமையும். ஆனால் இந்த அரசியல் கடமையினூடே இந்த பண்பாட்டு செயல்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி முடியும் என்பதற்கு சமீபத்திய உதாரணம் உள்ளது.

எனவே, தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை என்பதை அரசியல் அரங்கிலிருந்தே துவங்க வேண்டும். இதற்கான சாத்தியம் இன்று நிலவுகிறதா? நிச்சயமாக.

படிப்பகம்

padippakam



நீண்ட போராட்ட வரலாற்றைக் கொண்டிருக்கிற தலித்துகளிடம் தொடர்ச்சியான இயக்கப் போக்கு இல்லாமல் போனதும் அவ்வாறு இயக்க வளர்ச்சி ஏற்படும் போதெல்லாம் சூழ்ச்சிக்காரர்களின் சதிக்கு ஆளாகிப்போனதும் படிப்பினைகள். வலுவான ஒரு பரந்துபட்ட அமைப்பு இல்லாமல்போனது வருந்தக் கூடியதெனினும் காரணங்களும் உள்ளன. எனினும் இந்த போக்குகளை பின்னடையச் செய்ய வேண்டும். வட்டார மற்றும் உட்சாதி உள்ளடக்கத்துடனேயே இதுவரையிலான தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள் இருந்து வந்துள்ளன. நெடிய அனுபவங்களுள்ள இயக்கவாதிகள் கூட குறைந்த பட்சம் தமிழகம் முழுதுமான ஒரு மைய அமைப்பை அம்மக்கள் மத்தியில் கட்டவில்லை. இம்மாதிரியான பலவீனங்களை துல்லியமாக அறிந்த சூழ்ச்சிக்காரர்கள் (இதை அரசியல் சாணக்கியம் என்கிறார்கள்) அம்மக்களை நேற்றுவரை பயன்படுத்தியே வந்துள்ளனர். இதன் மிச்ச சொச்சங்களே இன்று பெரும் வீச்சாகத் தோற்றமளிக்கின்றன. எனினும் இன்றைய அரசியல் சூழலில் தலித்துகளிடையே எழுந்துள்ள விழிப்புணர்ச்சி இவைகளை நெட்டித்தள்ளி வருவதை அனுமானிக்க முடியும். அதே வேளையில் இவர்களுக்குள்ளும் நிலவுகிற உட்சாதி உயர்மனப்பான்மைகளையும் கிளப்பிவிடும் போக்கையும் அறியமுடிகிறது. அரசு தரும் சில சலுகைகளுக்காகவும் பரந்துபட்ட மக்களுக்கான நிரந்தர தீர்வாக அமையாத இட ஒதுக்கீட்டையும் பிரதானப்படுத்தி எழும் இந்த உட்போராட்டங்களில் புதையுண்டுபோவார்களேயானால் பரந்துபட்ட மக்களின் நிரந்தர தீர்வுக்கான சாதி ஒழிப்பு என்பதை பின்னுக்குத் தள்ளுபவர்களாகவும் அல்லது இதில் பங்கெடுக்காத வரலாற்றுத் தவறையும் செய்தவர்களாகவும் ஆவார்கள். எனவே, அரசு பிரதானப்படுத்தும் சலுகை நம்மை எந்த வகையிலும் முன்னேற்றாது என்பதை உணர்ந்து மிகவும் உயர்ந்த அரசியல் பணியில் தலித்துகள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் புரிதல்களுடன் இன்று இளந்தலைமுறையினர் ஒன்று கூடி சில இயக்க முயற்சிகளை எடுத்து வருவதை எதிர்கால நம்பிக்கை ஒளியாகக் கொள்ளமுடியும்.

ஒரு அமைப்பு என்பது உயர்ந்த பட்ச நோக்கத்தையும் அதை அடைய வேண்டிய அவசியத்தையும் அதற்கான வழிவகைகளையும் அதற்கான ஒரு சிறந்த முன்னணிப் படையையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு, இது நாள்வரை தலித் இயக்கங்கள் உறுதியான கட்டுமானமுடையவைகளாக இருந்தனவா... என்றால் கேள்விக் குறியே.



படிப்பகம்

padippakam



''தீண்டாமை சாதியிலும், சாதி இந்துமதத்திலும், இந்து மதம் பார்ப்பனீயத்திலும், பார்ப்பனீயம் அரசதிகாரத்திலும் வேரோடியிருப்பதை அம்பேத்கர் அவர்கள் துள்ளியப்படுத்தி கூறியதுடன் எதை எதை வீழ்த்த எதையெதை அழித்து எதை அடைய வேண்டும் என்பதையும் கூறியுள்ளார். அரசதிகாரத்தின் வழியே ஒவ்வொன்றையும் நிலைபெறச் செய்து தனது இருப்பைப் பாதுகாத்துவரும் பார்ப்பனீயத்தை வெல்வதென்பது அரசதிகார மையங்களை கைப்பற்றுவதன் மூலமே முடியும். எனவே அம்பேத்கர் கூறியதைப் போன்று தலித்துகளின் இறுதி இலக்கு அரசு அதிகாரமே.

எனவே, நிறுவனமயப்படுத்தப்பட்டிருக்கிற வன்முறை அமைப்புகளான இந்துத்துவ பார்ப்பனீயத்தை எதிர்கொள்வதென்பது கட்டமைக்கப்பட்ட வலுவான அமைப்பில்லாமல் முடியாது. ஆக ஒரு முன்னணிப் படையை அணிதிரட்ட புரட்சிகர உள்ளடக்கங்கொண்ட அமைப்பு வேண்டும். அப்படியொரு அமைப்பில் அணிதிரள்வதே தலித்துகள் தமது அரசியல் கடமையைச் செய்வதற்கான வழியாகும்.

இப்போதும் பகுதிவாரியாகவே புரட்சிகரமான உள்ளடக்கங்கொண்ட சில அமைப்புகள் தோன்றிவருகின்றன. ஆயினும் இவைகளும் தங்களுக்குள் உள்ள ஒத்த தன்மைகளை முதன்மைப்படுத்தி அய்க்கியத்தை தட்டியெழுப்பி வருகின்றன. குறிப்பாக பறையர், பள்ளர், சக்கிலியர், (பிற ஒடுக்கப்பட்ட மொழிச் சிறுபான்மையினரிடத்திலும்) இவர்களிடத்தில் இவ்வியக்கங்களின் செல்வாக்கு வளர்ந்து வருகிறது. காரணம் இவைகள் முன்மொழியும் சாதியொழிப்புக்கான அறைகூவலும் சமரசமற்ற போராட்டமுமே. அதே சமயம் பார்ப்பனீயத்தை எதிர்கொண்டு அரசதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் எந்தெந்த சக்திகளை துணையாகக் கொள்ள வேண்டும் என்பதிலும் இவ்வமைப்புகள் மிகவும் தெளிவாகவே உள்ளன. எனவேதான் அரசியல் அழுத்தத்துடன் உட்சாதிச் சிந்தனைகளை உதறியெறியும் வகையில் தங்களை அரசியல் முன்னணிப் படையினராகப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் ''தலித்'' என்று தங்களை அறிவித்துக் கொள்ள வேண்டிய அவசியமும் அரசியல் முதிர்ச்சியும் வெளிப்படுகிறது. 'தலித்' என்று தங்களை அறிவித்துக் கொள்வதன் மூலம் பார்ப்பனீயத்துக்கு எதிரான ''தலித்தியத்தை'' உயர்த்திப் பிடிக்க முடிகிறது. இவ்வாறு அரசியலுக்காக அணிதிரள்வதிலிருந்தே தலித் ஒற்றுமையையும், வளர்ச்சிப் போக்கில் பண்பாட்டு ஒற்றுமையையும் நிலைநாட்ட அம்மக்களால் முடியும். □

படிப்பகம்

padippakam

சிறுகதை

# ரத்தக் கடன்

— பொன்னையன்

[ இலங்கைச் சூழலில் தெறித்த இக்கதை இம்மண்ணின் பேச்சுக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளது. ]

அவன் தலைமறைவாகி ஒரு மாதம்! போலீசார் அவனைக் கைது செய்ய இராப்பகலாக அலைந்து திரிகிறார்கள். அவன் அந்தக் கிராமத்தில்தான் இருக்கிறான். சின்னையாவை போலீசா ரால் கைது செய்ய முடியவில்லை. ஏன்? தண்ணீருக்கும் மீனுக்கும் உள்ள உறவைப் போல் அவன் அந்த கிராமத்து மக்களோடு இணைந்திருக்கிறான்.

சின்னையாவைக் கைது செய்து சிறையில் தள்ளிவிட்டால், அப்பகுதியில் உள்ள போராட்டம் நின்றுவிடும் என்பது ஜாதி வெறியர்களின் எண்ணம்.

அவனைப் போல் நூற்றுக்கணக்கானவர் அங்கு இருக்கி றார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

சின்னையா மிகவும் ஜாக்கிரதையாக, ஆனால் துணிவோடு நடந்து கொள்கிறான்.

மார்கழி மாதத்துப் பின்னிரவுப் பனிக்காற்று அவனது உடலைச் சிலிர்க்க வைத்து எலும்புக் குருத்துகளைத் தாக்கு கிறது.

இரவு முழுவதும் தூக்கமில்லாததால் அவனது கண்கள் சிவந்து கரிக்கிறது. வயல்வெளியைத் தாண்டி வரும் வரை தோழர்கள் அவனுக்குத் துணையாக வந்தார்கள்.

சின்னையாவை இனிமேல் எப்படிப்பட்ட எதிரியாலும் தொட முடியாது. "பனங் கூடலின்" வழியாக வளைந்து நெளிந்து போகிற அந்த ஒத்தையடிப் பாதை "நிற்சாமத்திற்கு" கொண்டு போய் விடுகிறது.

நிற்சாமத்தின் பெயரைக் கேட்டாலே எதிரிகளுக்குத் தொடை நடுக்கம். "அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேயைப் போல" எதைப் பார்த்தாலும் அவர்களுக்குக் குலை நடுக்கம் ஏற் பட்டது இப்போதெல்லாம்.

படிப்பகம்

padippakam



அங்கு வாழும் மக்கள் தங்கள் கைகளையே நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கு இழப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர்கள் அந்த மண்ணில் தமது கால்களை நன்றாக ஊன்றி நிற்கிறார்கள். அந்த மண் அவர்களுக்குச் சொந்தமில்லாவிட்டாலும் அந்த நிலத்தில் நிற்கும் உணர்ச்சி மட்டும் என்றைக்கும் அவர்களை விட்டு நீங்குவதில்லை. அவர்கள் உழைப்பினால் இந்த பூமித் தாயை தொட்டு உணர்கிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் உழைத்தாலும் காலங் காலமாக உரிமைகள் மறுக்கப்பட்ட அடிமைகளாகத்தான் வாழ்ந்தார்கள்.

ஆனால் இப்போதோ?

சின்னையா நிற்சாமத்தை நோக்கி நடந்துகொண்டிருக்கிறான்.

விடி நிலவொளியில் பனித் திரையினால் போர்த்தப்பட்டிருக்கிற குடிசைகள் அவனுடைய கண்களுக்கு மங்கலாகத் தெரிகிறது.

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கின்ற குடிசையில் பகலெல்லாம் கடுமையாக உழைத்துக் களைத்து அலுப்படைந்த மக்கள் பயமற்று நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பாதுகாப்பாக அக்கிராம இளைஞர்கள் அப்பகுதியில் எதிரி நுழைந்து விடாமல் இருக்க முழுவதும் காவல் காத்து நிற்கின்றனர். கணேசனின் குடிசைக்கருகில் வந்த சின்னையாவின் கால்கள் அவனையறியாமலேயே தயங்கி நிற்கிறது.

ஒரு நெடுமூச்சு...

பின் அவன் கால்கள் அசைகிறது.

''போன வருசம் யிந்த மாசத்திலெதான் டீக்கடைங்களெ யெங்களுக்கு தொறந்துவுடணுன்னு நாங்க போராட ஆரம்பிச்சோம். அதுலெ கணேசண்ணன் முன்னுக்கு நின்னு யெப்படியெல்லாம் பேசனாரு. ஒரு வாரத்திலெல்லாம் அவரெ அவுங்க கிட்டயிருந்து சுட்டுட்டாங்களே...''

''தம்பி சின்னையா நா செத்துப் போனாலும் நீங்க இந்தப் போராட்டத்தெ கைவுடக்கூடாது. நம்ப உரிமைகளெ எடுக்கற மட்டும் நீங்க போராடணும். நா உயிர் பொழச்சி வந்தா அவுங்களுக்கு இந்தக் கடனெ தீக்காம வுடமாட்டேன்...'' என்று அவர், யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் சாவதற்கு முதல் நாள் கூறியது சின்னையாவின் நினைவில் அலை மோதியது.

படிப்பகம்

padippakam



''கணேசண்ணன் மட்டுமா யென்ன...?''

''நம்ம வேலுப்பிள்ளெ, பாலு, சரவணை அண்ணன், இன்னும் எத்தனை பேரெ அவங்க சுட்டுக் கொன்னாங்க; எத்தனை பேரே அடிச்சு முறிச்சாங்க, எத்தென வீடுகளுக்கு நெருப்பு வைச்சாங்க? நம்ம தோட்டந் துரவுகளெ...?'' மேல் ஜாதிக்காரர்களின் கொடுமைகள் அவன் நினைவில் நிழலாடியது.

ஆத்திரத்தில் சின்னையா பல்லைக் கடித்தான்.

''இவ்வளவுக்கும் போலீசு என்ன செய்தது?''

''பேருக்கு நாலஞ்சு பேரெ புடிச்சு ரெண்டு மூணு நாள் அடைச்சி வச்சுட்டு அப்பொறம் வெளியலெ வுட்டுடுச்சி''

''ஆனா நாங்க தற்காப்புக்காகத் திருப்பித் தாக்கினா, எங்களெ உடனே புடிச்சி போலீசு ஸ்டேஷன்ல அடைச்சு வைச்சு எங்க எலும்புல்லாம் நொறுக்கனாங்களே...''

''போலீசும் அவுங்க பக்கம் தான்னு இப்ப எங்கெல்லாருக்கும் நல்லா தெரிஞ்சு போச்சி...''

''யேன்னா அவுங்க பணம் படைச்சவங்க... நாங்க உழைக்கறவங்க... நாங்க யெழுந்திருச்சா ஜாதி கீதின்னுல்லாம் பாராம ஒண்ணா சேந்துட்டு எங்களெ அடிக்க வந்துடறாங்க அவுங்க...''

''யிப்போ... போலீசுக்கு பயந்த காலமெல்லாம் போயிடுச்சி...''

''யிப்ப வேனா அவுங்க யெங்களெ அசைக்கட்டும் பாப்போம்.''

சின்னையா தனது குடிசையை நெருங்கினான்.

''அக்கா...''

அரைகுறைத் தூக்கத்தில் கிடந்த செல்லம்மா திடுக்கிட்டு எழுகிறாள். ''ஆரது...?''

''நான்தான் அக்கா.''

கண்ணைத் துடைத்துக் கொண்டு அரிக்கன் விளக்கை எடுத்துப் பெரிதாக்கிவிட்டு, கதவைத் திறந்தாள்.

''யேண்டாமவனெ, யிவ்வளவு நேரம் யென்னாசெஞ்சே?''

''யிப்பதான் கூட்டம் முடிஞ்சுது. கந்தையாங்க இங்க வந்தாங்களா?''

''யில்லையே... யேன்?...''

படிப்பகம்

padippakam



"அவுங்க கார் கொண்டாறன்னாங்க... விடியறதுக்குள்ள நாங்க கிளம்பி, சில ஊருகளுக்கு போகவேணும்."

"யேன்?"

"அந்த இடங்கள்ளியும் போராட்டம் துவங்கிடிச்சி. அங்கயிருக்கிற ஆள்ங்களோடேயும் நாங்க தொடர்பு வைச்சி..."

"யெந்த யெந்த ஊருங்கடா தம்பி?" செல்லம்மா ஆவலுடன் கேட்டாள்.

"கொடிகாமம், அச்சுவேலி, மந்துவில் இன்னும் வேற சில..."

செல்லம்மாவிற்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

அவளுடைய பெரிய கண்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.

"சரி... சரி... நான் யெல்லாருக்கும் டீ தண்ணி வைக்கறன்... அவுங்களும் வரட்டும். யெல்லாரும் டீ தண்ணியெ குடிச்சிட்டுப் போங்க. சும்மா போனா வவுறு எரியும், அந்த சின்னாச்சி கிட்ட நாலு மரவள்ளிக் கிழங்கு வாங்கியாந்து அவிச்சுத் தாறேன்."

"அதொண்ணும் வேண்டாம்மா... நேரம் போவுது... தண்ணியெவை... அதுவே போதும்."

செந்தீ நாக்குகள் சுழன்றெரிந்தது அங்கே.

"யினி எங்களுக்கென்ன? யிங்கய போல வேற ஊருங்கள்ளியும் போராட்டம் துவங்கிட்டுது."

"விடியப் போவுது, இவங்கள் இன்னும் காணலையே" செல்லம்மாவின் சிந்தனை தடைப்பட்டது.

"என்ன? ஓ... அவங்களா... வருவாங்கள்ள யேன் அவசரப் படறே."

"வர்ற வயியிலே ஏதாவது நடந்திருக்குமோ?" மனப் பதட்டத்துடன் கேட்டான் சின்னையா.

"அப்படி ஒண்ணும் நடந்துடாது... நீ ஒண்ணுக்கும் கவலப்படாத..." ஆறுதல் கூறினாள் செல்லம்மா.

அக்கிராமத்தில் சூழ்ந்திருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்த காரின் இரைச்சல் அவர்களின் காதில் வந்து ஒலித்தது.

படிப்பகம்

padippakam



''கந்தையா வரக் கார்தானா? நீ பாரக்கா?'' பரபரப்புடன் அவன் கூறினான். செல்லம்மா குடிசைக்கு வெளியில் வந்தாள்.

காரின் வெளிச்சம் கிராமத்தின் எல்லையில் தெரிந்தது.

''கார் போலத் தெரியலையே தம்பி?'' செல்லம்மா சந்தேகத்துடன் கூறினாள். சின்னையா வெளியில் வந்தான்.

கிழக்கு வானத்தின் அடிவயிற்றில் வெண்மை தட்டுகிறது.

''சத்தமும் ஒரு மாதிரியாத்தான் இருக்கு.'' அவன் மனதிலும் சந்தேகம் இழையோடியது.

''வேறெ யாரிப்போ வரப் போறாங்க?...?'' அவன் யோசனையோடு கேட்டாள்

''ஒருவேளை போலீசா... இருக்குமா?...''

காவல் காத்து நின்ற வாலிபர்களின் விசில்சத்தம் காற்றைக் கிழித்துக் கொண்டு வந்தது. நாய்கள் குரைத்தன. சின்னையா விழிப்படைந்தான். காரின் வெளிச்சம் அவர்களின் குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

''போலீஸு ஜீப்பு...'' அவன் திகைப்புடன் மெல்லக் கத்தினான். அவளுக்கும் சிறு பதட்டம்.

''யிப்பயென்ன செய்யறது??' அவனுடைய கேள்வியில் நிதான நிலைக்கு வந்தாள் செல்லம்மா.

''வர்றது வரட்டும், நான் பாத்துக்குறேன் எல்லாத்தையும். நீ போய் உள்ளாற இரு...'' உறுதியுடன் கூறினாள் செல்லம்மாள். தயங்கினான் அவன்.

''போ உள்ளேன்னா...சீக்கிரமா போ...'' கதவைச் சாத்திவிட்டு முற்றத்தில் வந்து நின்றாள். படலுக்குப் பக்கத்தில் வந்து ஜீப் நின்றது.

அதிலிருந்து குதித்த போலீஸ்காரர்கள் துப்பாக்கிகளுடன் ஓடி வந்து வீட்டை வளைத்து நின்றனர். செல்லம்மா வீட்டு வாசலில் கம்பீரமாக நின்றாள். அவளது கண்களில் அசைவற்ற ஒளி நிறைந்திருந்தது. கிராமத்து இளைஞர்கள் சத்தமிட்டபடியே ஓடி வந்தார்கள்.

கிராமம் விழித்தது.

பல திக்குகளிலிருந்து மக்கள் சின்னையாவினுடைய வீட்டை நோக்கி விரைந்தனர்.

படிப்பகம்

padippakam



போலீஸ் அதிகாரி செல்லம்மாவை நோக்கி வேகமாக வந்தான். அவனுடைய நடையில் அதிகாரத் திமிர்!

அவள் தனது பெரிய ஆழ்ந்த கண்களால் எதையோ கேட்பது போல் போலீஸ் அதிகாரியைப் பார்த்துக் கொண்டு நின்றாள். போலீசாரின் கடந்தகால அட்டகாசங்கள், கொடுமைகள் அவளுடைய மனத்திரையில் தோன்றியது.

'சந்தைமேட்டு டீக்கடைக்குப் போய் நம்ப சின்னப் பசங்க டீத் தண்ணி கேக்க, கடைக்காரன் இரண்டு மூணு சோடா பாட்டில்களை உடைச்சுப் போட்டு, கடையில வந்து கலாட்டா செய்தாங்கண்ணு போலீசுலே பொய்யா போய் சொன்னான். உடனே இந்த போலீசுகாரங்க நம்ம பசங்களெ புடிச்சி அடைச்சி வைச்சி, அடிச்சி அவுங்க எலும்பெல்லாம் நொறுக்கினாங்க. அந்த காயமெல்லாம் ஆறதுக்கு யெத்தனெ மாசம் ஆனது?'

'அப்படியென்னாதான் இந்த பசங்க செஞ்சிபுட்டாங்க? ரொம்ப நாளா யெங்க ஜாதின்னா இழுக்கு பேசினாங்க... டீக் கடைக்குப் போனா தனியா ஒக்காரவைக்கிறது... கொட்டாங் கச்சில தான் டீ கொடுப்பா அவன்... யிங்கலீசு படிச்ச பசங்க அதை கேக்காம இருப்பாங்களா... கேட்டாங்க. அதுக்கு யிப்படி...'

'வேணும்னே யிதப்போல சாதிச் சண்டெய, யெதாவது ஒரு பேரு சொல்லி கிளப்பறாங்க... இதுக்குள்ளாம் பின்னாடி அந்த பண்ணை யாரு வேறெ...'

'எங்களுக்காக ஞாயம் பேசின முருகேசங்க வீட்டை அவுங்க சொந்தக்கார சாதி வெறி புடிச்சவங்களே அடிச்சு வுடைச்சாங்க... அவுங்களெல்லாம் இந்த போலீஸ்காரங்க ஒண்ணும் செய்யறதில்லே... ஆனா கலகம் மூட்டண்ணு இவங்க, முருகேசுவை போலீஸ் ஸ்டேஷன்லெ வைச்சு அடிச்சு, அவரோட, வவுத்துலேயும் பூட்சு காலாலெ ஏறி மிதிச்சது... அப்பப்பா...'

'சாதி வெறிக் கெதிராய் சுன்னாகத்திலேருந்து ஊர்வலம் நடத்தின ஆளுங்களெ இவங்க துப்பாக்கிக் கட்டெயாலெயும், இடுப்பு பெல்டாலெயும் அடிச்சு, பூட்சு காலால உதைச்சதை பாத்தா...'

''சின்னையனை வரச்சொல்லு...'' போலீஸ் அதிகாரியினுடைய முரட்டுக்குரல் செல்லம்மாவின் சிந்தனையைக் கலைத்தது.

படிப்பகம்

padippakam



''அவன் யிங்கே யில்லே...'' உணர்ச்சி கொந்தளிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிதானமாகக் கூறினாள் செல்லம்மா.

''அப்ப, அவன் எங்கே?''

''அவன் ரொம்ப நாளா இங்கே வர்றதேயில்லே... அவன் எங்கேண்ணு எனக்குத் தெரியாது...''

''பொய் சொல்லாதே. அவனைக் கூப்புடு, இல்லாட்டி...'' மிரட்டல்!

''யெனக்குத் தெரியாதுன்னா அப்புறமென்னா? அவனுடைய கண்களை அசையாமல் பார்த்துக் கொண்டே கூறினாள். அவளுடைய முகத்தில் வைராக்கியம்.

''பொய் சொன்னா வோம் எலும்பெல்லாத்தையும் நொறுக்கிப் போடுவேண்டி...'' உறுமினான் அவன்.

''அவனெப் பத்தி யெனக்கொன்னும் தெரியாது. நீ செய்யறதைச் யெய்...'' ஆக்ரோஷத்துடன் சொன்னாள் அவள்.

''என்னாடி சும்மா பேசிகிட்டே போற... உதைப்பேன்... வாய மூடடி...'' கையை ஓங்கிக்கொண்டு போலீஸ் அதிகாரி வந்தான்.

''இப்பென்ன செய்யப் போறே?'' கோபாவேசத்துடன் செல்லம்மா கேட்டாள்.

''பொறடி செஞ்சு காட்றேன். ஏய் சண்முகம், வீட்டை சோதனைப் போடு... அவன் உள்ள இருந்தா வெளியில இழுத்துக் கிட்டுவா...''

''வீடு சோதிக்கணும்னா கோர்ட்டு கடுதாசியோட தான் வந்து சோதிக்கணும்...'' செல்லம்மாவின் பேச்சில் உறுதி தொனித்தது.

சண்முகம் தயங்கி நின்றான்.

''ஏன் நிக்கற சண்முகம்? வேணும்னா இன்னும் ரெண்டு பேரோட போ...''

''வீட்டுல ஒருத்தரும் போகக் கூடாது...''

சண்முகத்தினுடைய கண்களைப் பார்த்துக் கொண்டு உறுதியாகச் சொன்னாள் அவள். சண்முகம் அதைச் சட்டை செய்யாமல் முன் சென்றான்.

அவனை இருபோலீசார் பின் தொடர்ந்தனர்.

படிப்பகம்

padippakam



எட்டு திசைகளிலிருந்தும் மக்கள் உணர்ச்சி மயமான கொதிப்படைந்து, கொந்தளிக்கும் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டு வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய உள்ளங்களில் இவ்வளவு காலமும் பதுங்கிக் கிடந்த, அவர்கள் அனுபவித்த சுரண்டும் வர்க்கத்தினதும், சாதி வெறியர்களதும் அடக்கு முறையினாலும் கொடுமைகளாலும் எழுந்த வெறுப்புணர்ச்சி உயிர் பெற்று எழுந்து பொங்கிக் குமுறி, போக்கிடம் தேடி,முட்டி மோதி சாடிக் கொண்டிருந்தது அந்த உணர்ச்சியினால் அவர்களுடைய உள்ளத்தில் ரத்தக்கடன் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஜுவாலை விட்டுக் கனன்று கொண்டிருக்கிறது.

வீட்டைச் சுற்றி நின்ற போலீசார் ஒரே இடத்தில் வந்து குவிந்தனர்.

செல்லம்மா மக்கள் திரளை ஒருமுறை பார்த்தாள்.

ஒன்றுபட்ட உணர்ச்சிப் பெருக்கோடு இரைந்து கொண்டு வருகின்றது அந்த பெரும் ஜனக் கூட்டம்.

செல்லம்மாவிற்கு புதுத் தெம்பு பிறக்கிறது, சண்முகம் முன்னேறி வருகிறான்.

"கிட்ட வராத... வந்தா..."

செல்லம்மா எச்சரிக்கிறாள்.

அவன் அசட்டு தைரியத்துடன் வந்துகொண்டிருக்கிறான். கையில் துப்பாக்கி இருக்கிறதென்ற துணிவு அவனுக்கு. அவன் அவளை நெருங்கினான்.

"...வீட்டுல கால்வைச்சே..."

அவளுடைய வார்த்தைகள் தீப் பிழம்பு போலச் சுழல் கின்றது. சண்முகம் தன் கையிலிருந்த துப்பாக்கியால் செல்லம் மாவை ஒரு புறம் தள்ளி விட்டு வீட்டு வாயிற் படிக்குள் காலை எடுத்து வைக்கிறான்.

செல்லம்மாவின் கைகள் காற்றில் உயர்கின்றன. ஒரே பாய்ச்சல்.

சண்முகத்தின் நெஞ்சில் ஒரு அடி!

அடுத்த கணம்—

படிப்பகம்

padippakam



அந்த போலீஸ்காரனுடைய கையிலிருந்த துப்பாக்கி செல்லம்மாவின் கையில்!

போலீஸ்காரர்களைத் திடீரெனச் சுற்றி வளைக்கிறார்கள் போராட்ட உணர்வு நிறைந்த மக்கள். உத்வேக உணர்ச்சியினால் ரத்தம் பாய்ந்து சிவப்பேறிய அவர்களது கண்களில் வெஞ் சினத் தீ.

ஒரு போலீஸ்காரன் ஆகாயத்தில் சுடுகிறான்.

போலீஸ்காரர்களை அசைய விடாது அவர்களைக் கையை உயர்த்தாதபடி மக்கள் திரள் சுற்றி வளைத்து நெருக்குகிறது.

போலீஸ் அதிகாரி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாலு புறமும் பார்த்து விட்டு மெல்ல நழுவிச் சென்று ஜீப்பில் ஏறுகிறான்.

பாய்ந்து சென்ற மக்கள் ஜீப் வண்டியையும் சுற்றி வளைக்கின்றனர்.

கிழக்கு சிவப்பு மயமாகிக் கொண்டிருக்கிறது...... ○

நன்றி: **மனிதன்**

---

# இதுதாண்டா எம். எல். ஏ.

அவிழ்த்து வீச இலகுவாய்
அரையில் வேட்டி
சரளமாய்ப் பேசுதற்கு
சரமாய்ப் பொய்கள்
உரையாடல் இடையிடையே
'ங்கோத்தா ங்கொம்மா'
செல்லமாய் திட்டுவது
'தெவ்ழயாப் பையா'
கால் செருப்பை கைக்கொண்டு
இன்னொன்றில் மைக் துண்டு
வாக்களிக்கக் காத்திருக்கும்
மூடச் சனங்கள்
வாரிச் செலவழிக்க
கறுப்பில் பணங்கள்
அட...
இதுதாண்டா எம். எல். ஏ...

—அன்பாதவன்

படிப்பகம்

padippakam

## ▢ நூல் அறிமுகம் ▢

**சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும்**
—முனைவர் கோ. கேசவன். பக். 272. விலை ரூ. 38/-
**வெளியீடு :** சரவணபாலு பதிப்பகம்,
4/117-அ, இந்திராநகர், கீழ்பெரும்பாக்கம்,
விழுப்புரம்-605 602.

'சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும்' என்ற நூல் தலித் மக்களின் விடுதலை பற்றிப் பேசுகிறது. பெயரிடலும் அரசியலும், தாழ்த்தப்பட்டோர் வாழ்வியல், தாழ்த்தப்பட்டோரும் அரசியல் இயக்கங்களும், தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள்,மதஅமைப்புகளும் தாழ்த்தப்பட்டோரும், தமிழகத்தில் சாதிய மோதல்கள் சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் எனப் பல்வேறு கோணங்களில் தலித் மக்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்கிறது.

தலித் விடுதலையை தனி ஒரு நிகழ்வாகப் பார்க்கும் போக்கு நிலவி வருகின்ற இன்றையச் சூழலில் தலித் விடுதலையைச் சமூக விடுதலையுடன் இணைத்துப் பார்க்கிறது இந்நூல். அதனை அரசியல், பொருளாதார பண்பாட்டு காரணிகளுடன் விளக்குகிறது; தலித் விடுதலையையும் சமூக விடுதலையையும் பிரிக்க முடியாது என நிறுவுகிறது. இந்த வகையில் இந்நூல் முக்கிய கவனத்தைப் பெறுகிறது.

தாழ்த்தப்பட்டோருக்குப் பெயரிடல் எனக் கூறும்பொழுது தமிழகச் சூழலில் 'தலித்' என்பதற்குப் பதிலாக தாழ்த்தப்பட்டோர் என்றே குறிப்பிடலாம் என்கிறார் ஆசிரியர். ஆனால் 'தலித்' என்பதன் பொருள் இன்று விரிவடைந்து தாழ்த்தப்பட்டோர், உழைக்கும் மக்கள், வறிய விவசாயிகள், பெண்கள், அரசியலாலும், பொருளாதாரத்திலும், சமயத்தின் பெயராலும் சுரண்டப்படுபவர்களை குறிக்கும் வகையில் பொருள் கொள்ளப் படுகிறது என்றும் கூறுகிறார். இந்த நிலையில் "தாழ்த்தப் பட்டோர்" எனப் பெயரிடல் "தலித்" என்பதன் பொருள் செறிவைத் தரத் தவறிவிடுகிறது எனக் கூறலாம் எனவே தலித் என்பதற்கு 'தாழ்த்தப்பட்டோர்' எனப் பெயரிடுவது தமிழகச் சூழலில் பொருத்தமானதுதானா என்பது விவாதத்துக்குரியது.

பல கட்டுரைகளின் கீழ் சில கருத்துக்கள் திரும்பத் திரும்பக் கூறப்படுவதும், நடையும் இந்நூலின் வாசிப்புத் தன்மையைக் குறைக்கச் செய்கிறது இருப்பினும் இன்றைய சூழலில் உள்ள முக்கியமான பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களை விரிவாகவும், ஆழமாகவும் இந்நூல் முன் வைக்கிறது. தோழர் கோ. கேசவனின் கடும் உழைப்பில் உருவாகியுள்ள இந்நூல் சமூக விடுதலையில் அக்கறையுள்ள அனைவரின் கவனத்துக்கும் உரியது.

**—வசந்தகுமார்**

படிப்பகம்

padippakam

# கிழக்கு மரத்தின் சிவப்புப் பழங்கள்

—பழமலய்

வாழ்வின் நோக்கம் என்னவாக இருக்கும்?
எதில் அது, உள்ளபடி உள்ளது?
எவ்வாறு வாழ்வை, வாழ்வாக வாழ்வது?

நாட்டை விடுவிக்கக் காட்டில் கிடப்பதா?
காக்கை குருவி போல் சுடப்பட்டு விழ்வதா?
சைனைடு தின்பதா?

விடுதலை என்பது, மனிதர்கள் படைப்பது.
படைப்பு என்பது, கூட்டு உழைப்பு.
மனித சமூக சாரம்,
போராளிகளால் பொருள்படுவது.
இடைப்படும் சாவு—
எதை விடவும் உயர்வானது!

கிழக்கு மரத்தின் சிவப்புப் பழங்களைத்
தடுக்க முடியாது.
ஒளிரும் அழகுடன் தினமும் கனிபவை.
கனிந்தவை. கனிபவை.

ஈடன் தோட்டத்தில்,
கற்பித்துக் கொண்ட கடவுளும் கூட
மறுப்பதாய்த்தான் சொன்னார்கள்.
விலக்கப்பட்டிருந்தது விடுதலைக்கனி

எந்தப் பறவையும் தொடவில்லை.
ஏவாள் தொட்டாள்.
ஒரு அணில் தீண்டவில்லை.
ஆதாம் தீண்டினான்.

தங்களுக்குள்ளும்,
போராடுவதும், விடுதலை பெறுவதும்,
மானுட வர்க்கத்தின் பரிணாம வளர்ச்சி.

மேலும்.
போராடுவதால்தான், நாம் மனிதர்கள்!

படிப்பகம்

padippakam

# இறால் மனிதனுக்கு உணவு
# இறால் பண்ணைகளுக்கு மனிதனே உணவு

**—பாலன்**

---

இந்த ஆண்டு மே தினத்தை இறால் பண்ணை அழிப்புப் போராட்டமாக **தமிழ்நாடு மக்கள் கலை இலக்கியக் கழகமும்** அதன் தோழமைப் பிரிவுகளும் அறிவித்துள்ளன. தமிழகம் எங்கும் பெரிய சுவரெழுத்துகள், வீதிக் கூட்டங்கள் என பல நடத்திக் கொண்டு எல்லோரையும் பார்க்கவும் பேசவும் வைத்துள்ளன. ஏற்கெனவே அந்தந்தப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள் ஆகியோர் தம் எதிர்ப்புகளை ஊர்வலங்கள், பேரணி, ஆர்ப்பாட்டம் என வெளிப்படுத்தியுள்ளனர். **தமிழ்நாடு சர்வோதய இயக்கம்** அதன் தலைவர் திரு. செகன்னாதன் தலைமையில் பற்பல கிராமங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளை— குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதிகளின் கூலி விவசாயிகளைத் திரட்டியது. **இந்தியப் பொதுவுடைமைக் கட்சி** இது தொடர்பாக திருத்துறைப்பூண்டி, சீர்காழி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பேரணி ஊர்வலங்கள் ஆகியனவற்றை நடத்தியது. **மார்க்சியப் பொதுவுடைமைக்கட்சி** கடலூர் மாநாட்டில் இறால் பண்ணை எதிர்ப்புத் தீர்மானம் இயற்றி அதற்கு இயக்கம் நடத்துவதென முடிவெடுத்துள்ளது. இது ஒருபுறம் இருக்க, நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் அய்யர், தஞ்சை மாவட்டக் காங்கிரசு தலைவர் வாண்டையார் ஆகியோர் தலைமையில் ''இறால் பண்ணை பாதுகாப்புக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது. நிலைமைகளை உணர்ந்த தமிழக அரசு இந்த சட்டசபைக்கூட்டத் தொடரிலேயே இறால் பண்ணை தொடர்பாக ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது.

பூவார் சோலை மயில்ஆலப்
புரிந்து குயில்கள் இசைபாட
காமர் மாலை அருகுஅசைய
கண் விழித்து ஒல்கி நடந்தாய்
வாழி காவேரி

என இளங்கோ பாடிய காவிரி நதிதீரமும் கடலோரமும் சேறும் சோறும் மணந்தன— அன்று. ஆனால் புலவு நாறும் இறால்

படிப்பகம்

padippakam



பண்ணைகள் மணக்க காவிரியும் கடலும் இன்று. தஞ்சை மாவட்டம் காவிரிப் பகுதி மட்டுமல்ல. கடலோரப் பகுதியும் கூட, மொத்தம் 1000 கிலோ மீட்டர் நீளம் கடலோரம் தமிழகத்தில் உள்ளது. சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள கடலோர விளைநிலங்களில் இறால் பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி, தஞ்சை ஆகிய பகுதிகளில் இறால் பண்ணைகள் எத்தகைய விளைவை ஏற்படுத்தியுள்ளன எனக் காண ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சில :—

இறால்பண்ணை அருகில் உள்ள நீரூற்றுகள், நீர்நிலைகள் உப்புத் தன்மையுடையனவாக மாறிவிடுகின்றன. குடிநீருக்குப் பஞ்சம் வரும். இல்லையேல் உப்புநீரைக் குடிக்க வேண்டும்.

நிலத்தின் தன்மை உப்புச்சத்தோடு கூடிவிடுவதால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் இறால்பண்ணை அமைக்கப்பட்ட நிலம் எந்தவித விளைச்சலுக்கும் பயன்படாது. வீடுகட்டக் கூட அந்த நிலம் பயன்படாது.

இறால் பண்ணையின் இரசாயனக் கழிவுப் பொருள்கள் கடலில் கலக்கப்படுவதால் கடலோர மீன்வளம் முற்றாக அற்றுப் போகிறது. கட்டுமர மீனவர்களின் தொழில் நசிந்துவிட்டது.

இறால் பண்ணைகள் அருகில் அமைந்த குடியிருப்புப் பகுதியில் பல வீடுகள் அரித்து உடைந்து போயின, இது மட்டுமின்றி, பனைமரங்கள், தென்னை மரங்கள், ஆலமரங்கள் ஆகியவை உப்பரித்துப் பட்டுப் போய் கவைக்குதவாதவையாகிவிட்டன.

இவையெல்லாம் பல்வேறு அமைப்புகளின் கள ஆய்வு முடிவுகள். விவசாய உற்பத்தி பாதிக்கப்படல், கடலோர மீன் வளம் அற்றுப்போதல், இறால்பண்ணைப் பகுதிகளில் குடிநீர்ப் பஞ்சம், குடியிருக்க இயலாத சுற்றுச் சூழல் என இப்படி விவசாயிகளையும் மீனவர்களையும் ஏனைய பகுதி மக்களையும் முற்றாகப் பாதிக்கக்கூடிய தொழிலியல்— சூழலியல் என வாழ்வின் பல பரிமாணங்களைத் தாக்குகின்றது. இங்கு சிக்கல்கள் இதோடு முடிந்து விடுகின்றனவா எனில் இல்லை.

படிப்பகம்

padippakam



சிறுவிவசாயிகள் தம் நிலத்தை இரண்டு மூன்று மடங்கு விலைக்கு விற்கும் ஆசையில் விற்று விடுவதனால், தம் பாரம்பரியத் தொழிலை இழப்பதோடு, கிடைக்கும் தொகையை முற்றாக முதலீடாகப் பயன்படுத்தும் அளவுக்கு சிறுதொழில் கட்டமைப்பு இல்லாததால வறியராகும் வாய்ப்பு உள்ளது.

குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள் மிகவும் திண்டாட்ட நிலையில் உள்ளனர். இறால் பண்ணை தொழிற்சாலை சட்டத்துக்குள் வருவதால் நிலம் விற்கப்படும் பொழுது அவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு இல்லை. மேலும் அமைக்கப்படும் இறால் பண்ணையில் இவர்களை உள்இழுக்கும் அளவிற்கு வேலை வாய்ப்புகள் அமையாததால் அமைப்பற்ற தொழில்களை நாடுவதும் நகரங்களை நோக்கித் தாறுமாறாக ஓடுவதும் தவிர்க்கவியலாதவை.

இவை மட்டுமல்ல. குடியிருப்புக்கு உகந்த பிரதேசமாக் அமைய இயலாத சூழல் உருவாகிவிடுவதால் மக்கள் தம் பாரம்பரிய வாழுமிடங்களிலிருந்து அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது.

இவையெல்லாம் அந்தப் பகுதிகளை மட்டுமே சார்ந்தவையாக உள்ளன. ஆனால் பாரதூரமான விளைவு என்னவெனில் இரண்டாயிரம் ஆண்டுகால பாரம்பரிய விளை நிலங்கள் வற்றடிக்கப்படுகின்றன என்பதும் இதனால் ஏற்படவிருக்கும் தொடர் நிகழ்வுகள் என்ன என்பதும் முக்கியமானவை.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் எல்லாவற்றையும் இறால் பண்ணை நிலமாக மாற்றும் முயற்சி இல்லை. புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் விளைநிலம் அதிகம் இல்லை. இங்கு இறால் பண்ணை அமைப்பு முயற்சி இல்லை. ஆனால் விளைநிலங்கள் வளமையாகவுள்ள நெல்லை மற்றும் தஞ்சை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளே இறால் பண்ணைகள் அமைப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இது கவனமான தேர்வு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. தமிழக நெல் பாசனப் பரப்பில் காவிரி பாயும் பகுதி குறிப்பிடத்தக்கது. 25 ஆண்டு காலமாக இழுபறியாக காவிரி நீர் சிக்கல் இருப்பதால் நெல் சாகுபடி பரப்பளவு பாதியாகவே குறைந்துவிட்டது. யானை படுத்தாலும் குதிரை மட்டம் என்பார்கள். அதுபோல இப்பொழுதும் தஞ்சையில் மட்டும் காவிரிப் பரப்பில் 3 லட்சத்து 60 ஆயிரம் ஹெக்டேரில்

படிப்பகம்

padippakam



நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தின் தன்னிறைவுத் தன்மையை காவிரிப் பரப்பே உருவாக்கி வைக்கிறது. இத்தகைய விளைநிலங்களே இன்றைக்குக் கவனமாக இறால் பண்ணைகள் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நீர்வரத்தில் ஏற்பட்ட இழுபறி, விவசாயப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் ஆகியவை சிறுவிவசாயிகளை சோர்வடைய வைத்துவிட்டன. நல்ல விலை என்ற ஆசைத் தூண்டிலுக்கு அவர்கள் இரையாகி விடுகின்றனர். காவிரி, தாமிரபரணி நதிகள் பாயும் பாசன நிலங்கள் இறால் பண்ணைகளாக மாறி எவ்வித விளைச்சலுக்கும் அற்றதாக மாறும் சூழல் உள்ளது. தமிழகத்தின் பாரம்பரிய உணவுப் பொருளான அரிசி பற்றாக்குறையும், அதையொட்டிய அரிசி விலையேற்றமும் அரிசி இறக்குமதியும் ஏற்படும். அது சாத்தியமாகவில்லையெனில் வேறு உணவுப் பொருளுக்கு மக்கள் மாறிச் செல்ல வேண்டியிருக்கும்.

சரி, இங்குள்ள பண்ணைகளின் இறால்களையாவது நாம் சாப்பிடலாமா? ஹூம் அது கூடவே கூடாது. ஏனாம்? அது விலை அதிகம் மட்டுமல்ல. அது முழுவதும் ஏற்றுமதிக்கான தாகும். இங்கிருந்து இறால்கள் குளிர்சாதனப் பெட்டிகளில் பதனப்படுத்தப்பட்டு அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. நமக்கு ரொம்ப அன்னியச் செலாவணி கிடைக்கிற தாம்! அரிசி விளையும் நிலத்தில் இறால் பண்ணை வைத்து இறாலை ஏற்றுமதி செய்து அரிசியை இறக்குமதி செய்து கொள்ளலாம். இறக்குமதி அரிசியை விலைகொடுத்து வாங்க முடிந்தவர்கள் வாங்கலாம். அதற்குச் சுதந்திரம் உண்டு. வாங்கிச் சோறாக்கிச் சாப்பிடுவதற்கும் சுதந்திரம் உண்டு. இறாலை ஏற்றுமதி செய்வோம்; அரிசியை இறக்குமதி செய்வோம். இதுவே அரசின் புதிய உணவுப்பொருள் கொள்கை.

இறால் பண்ணை முதலாளிகள் உலக வங்கி மற்றும் அயல் நாட்டு இந்திய முதலாளிகள் உதவியுடன் இயங்கும் இந்திய முதலாளிகளே. தூத்துக்குடி பகுதியில் 10 சிறிய பண்ணைகளும் 11 பெரிய பண்ணைகளும் (180 ஹெக்டேர் வரை) உள்ளன. இவை பெரும் பகுதி எம். ஏ. சிதம்பரம் செட்டியார் (MAC மேக்) பார்னராஸ், எம்.எஸ்.பி. நாடார், பேபிஜான் ஆகியோரிடம் உள்ளன. தஞ்சைப் பகுதியில் பெரும் பண்ணைகளே அதிகம். எம்.ஏ. சிதம்பரம் செட்டியார். வைஜெயந்திமாலா(பாலி புட்ஸ்), சசிகலா, டி. ஆர். பாலு என பலர் வைத்துள்ளனர். இவர்களுள்



படிப்பகம்

padippakam



இந்தியன் புகையிலை நிறுவனம் (IIC) குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இவை பல துணை நிறுவனங்களையும் கொண்டு உள்ளன. குஞ்சு பொறிப்பகம், இறால் மீன் உணவு தயாரிப்பகம், குளிர்சாதனப் பெட்டிகளில் பதனப்படுத்தல் நிறுவனம் என்பனவற்றை மேக், IIC, ஜான் நிறுவனம் ஆகியன நடத்துகின்றன. இவர்கள் எல்லோரையும் பெரிய தரகு முதலாளிகள் எனவும் அடையாளப்படுத்திவிட இயலாது. எனினும் ஏகாதிபத்திய வலைப்பின்னலுக்குள் இத்தொழில் இயங்குகிறது.

□□

ஒரு ஹெக்டேர் நிலத்தில் இறால் பண்ணை மூலம் ஆண்டுக்கு 50 லட்ச ரூபாய் வருமானம் கிடைக்குமாம். இதற்காக விளைச்சல் நிலங்களில் அரை உப்பு நீரை தேக்கி இறால் பண்ணை அமைக்கின்றனர். இது **தீவிர இறால் வளர்ப்புத் திட்டத்தின்படி** செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்படி இறால் குஞ்சுகளை வளர்க்கத் தனி குட்டைகளை உருவாக்குகிறார்கள். அதில் இரசாயனங்கள் இடுகின்றனர். பிறகு அந்தக் கழிவுநீரை பாசன வாய்க்கால்களில் திருப்பிவிடுகின்றனர். இதனால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இந்நீரை கடலுக்கு திருப்பிவிட்டால் நீருக்குள் வசிக்கும் நுண்ணுயிர்களை அது அழித்துவிடும். இதனால் கடல் மீன்களும் நாசமாகும். இது மீனவர்களை மிகவும் பாதிக்கும். இத்திட்டம் துவங்கி 7 அல்லது 8 ஆண்டுகளுக்கெல்லாம் நிலங்கள் எதற்கும் பயன் அற்றதாகிவிடும்.

இத்திட்டத்தை ஏற்கெனவே அமல்படுத்திய தைவான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கம்போடியா ஆகிய நாடுகளில் விளைநிலங்களும் சதுப்பு நிலக்காடுகளும் நிலத்தடி நீரும் முற்றிலுமாக மாசுபட்டுவிட்டன.

□□

இது நிலம் என்ற உற்பத்தி சாதனத்தின் பயன்பாட்டை மாற்றியமைக்கிறது. அந்த உற்பத்தி சாதனத்தின் தொடர் உற்பத்தித் திறனை வற்றடிக்கிறது. பாரம்பரிய உற்பத்தி சாதனத்தின் மீதான மனிதர்களின் உழைப்பை முற்றிலும் நிராகரித்து ஒதுக்குகிறது. உற்பத்திப் பொருளின் வினியோகத்தையும் நுகர்வையும் உற்பத்தி இடத்திலிருந்து அந்நியமாக்கு

படிப்பகம்

padippakam



கிறது. சுய தேவைக்கான உற்பத்தி என்பது முற்றாக முறிந்து போய் ஏற்றுமதிக்கான உற்பத்தியாக மாற்றி விடுகிறது. இது இங்குள்ள உற்பத்தி முறையின் மீதான வலுவான குறுக்கீடாகும். அரை நிலவுடைமை உற்பத்தி உறவுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு முதலாளிய அராஜக நெறியிலான ஒப்பந்தக் கூலி உறவு முறை கொண்டு வரப்படுகிறது. இது அரை நிலவுடைமை உற்பத்தி உறவுகளோடு ஒப்பிடும்பொழுது மிகவும் பின்னடைந்ததாக உள்ளது. பலரை உற்பத்திக் கட்டமைப்பிலிருந்து வெளியேற்றி விடுகிறது. உள்ளிழுக்கும் மிகச் சிலரையும் நிரந்தரமற்ற தன்மையில் ஒப்பந்தக் கூலிகளாக்கி விடுகிறது. கூலிச் சந்தையில் கோடிக் கணக்கில் மக்கள் குவிந்திருக்க யாரையும் குறைந்த கூலிக்கு ஒப்பந்தம் செய்யும் வாய்ப்பு முதலாளிகளுக்கு ஏற்பட்டுவிடுகிறது. இது அரசியல், பொருளியல், சூழலியல், வாழ்வியலில் பாரதூரமான மாறறங்களை ஏற்படுத்தும் தன்மையில் உள்ளது. இதில் தான் ஏகாதிபத்திய வலைப்பின்னல் உள்ளது.

1950-60களில் பசுமைப் புரட்சி என்ற பெயரில் டிராக்டர், இரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்து, வீரிய விதை என்றெல்லாம் அறிமுகப்படுத்தத் துணை செய்த அதே ஏகாதிபத்திய உலகமும் அதன் சார்பு நாடான இந்திய அரசாங்கமும் 'இப்பொழுது இவையெல்லாம் கிடக்கட்டும், இறால் பண்ணைகளை அமையுங்கள்... இறக்குமதி செய்யுங்கள் உணவுப் பொருளை'— எனக் குறிப்பிடுகின்றன. இறால் பண்ணைகளுக்குள் இறால்கள் மட்டுமல்ல, ஏகாதிபத்திய ஊடுருவலும் நெளிந்து கொண்டிருக்கின்றது.

இறால் பண்ணை எதிர்ப்பு என்பது அதன் புறநிலை அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பை உள்ளார்ந்த விதத்தில் கொண்டுள்ளது மெய்மையே. ஆனால் அது எப்படிப் பருண்மையான வடிவங்களில் வெளிப்படுத்தி மக்களை அரசியல்மயமாக்குவதிலும், அணி திரட்டலிலும் பயன்படப் போகின்றது என்பது கவனத்திற் கொள்ள வேண்டியதாகும். வெறும் ஊர்வலங்கள், பேரணிகள், கூட்டங்கள் என்பவை தொடக்ககால அணிதிரட்டல்களாக மட்டுமே உள்ளன. வட்டாட்சியரிடம் மனு கொடுப்பதோடுகூட சில போராட்டங்கள் முடிந்து போகின்றன. இறால் பண்ணைகளைக் குண்டுகள் வைத்துத் தகர்ப்பதனால் மட்டுமே இவற்றை ஒழித்துவிட இயலாது. இறால் பண்ணைகளில் பழைய சிறு விவசாயிகளுக்கும் கூலி விவசாயிகளுக்கும் பங்குகள் (Shares) வழங்குவதன் மூலமும் அவற்றின் நிர்வாகத்தில் இவர்களுக்கும் பங்கு (Worker's Management) அளிப்பதன் மூலமும் இந்தச்

படிப்பகம்

padippakam



சிக்கலைத் தீர்த்துவிடலாம் என சி.பி.எம். உட்பட எந்தக் கட்சி நினைத்தாலும் அது கொள்ளிக்கட்டையை எடுத்து மொட்டைத் தலையைச் சொரிந்து கொள்வதற்கு ஒப்பானதுதான். வலுமிக்க எதிர்ப்பு வடிவங்கள் தொடர்ந்து தேவை. இது ஒருநாள் கூத்து அல்ல. ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்தைப் பல இடங்களில் பிரச்சாரம் செய்தல் மேலானது. ஓர் இடத்தில் காலூன்றி அதன் பருண்மையான தன்மைகளுக்கு ஏற்ப பருண்மையான எதிர்ப்பு வடிவங்களைக் கண்டறிந்து செயலாக்கமான கிளர்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல் அதனினும் மேலானது. அதுவே மாதிரிகளை உருவாக்கும். □

---


## சரவணபாலு பதிப்பக வெளியீடுகள்

1. இது வாழ்க்கையில்லை—அஸ்வகோஷ், பாவண்ணன் ரு 14.00
2. பொதுவுடைமை இயக்கமும் சிங்கார வேலரும் —கோ. கேசவன் 28.00
3. சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும் ,, 30.00
4. சனநாயகப்புரட்சியும் அம்பேத்கரும் ,, 15.00
5. ரசிய புரட்சி ஒரு மாயையா? ,, 4.00
6. சோசலிசமும் முதலாளிய மீட்சியும் ,, 12.00
7. புராணச் சார்பு கதைப் பாடல்களில் ஆண் பெண் உறவு நிலை ,, 7.00
8. இட ஒதுக்கீடு ,, 5 00
9. சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் ,, 38 00
10. களத்தில் நின்ற காவலர்கள் ,, 25.00

தொடர்புக்கு :

**சரவணபாலு பதிப்பகம்**

4/117-அ. இந்திராநகர் கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் 605 602

□

- அம்பேத்கரிசம்; ஆளும்வர்க்கச் சித்தாந்தமா?
- கோயில் நுழைவு—பண்பாட்டுப் போராட்டங்கள்
- சாதியம்

முனைவர் கோ. கேசவனின் இம்மூன்று நூல்களும் விரைவில் வெளிவரவுள்ளன.


---

படிப்பகம்

padippakam

# ஊழல் அம்பலமும் தொடர்பு சாதனங்களும்: பார்வையாளராகவே மக்கள்

— பாலபாண்டியன்

ஊழல் இப்போது ஊதிப்புடைத்துப் பெருத்து வீங்கி விட்டது. தொட்ட இடமெல்லாம் ஊழல். தொடுவதற்கும் கூட ஊழல். இன்று சதவீத சாம்ராஜ்யம். தேனைத் தொட்டவன் நக்காமல் இருப்பானா என அன்று இது நியாயப்படுத்தப் பட்டது. இது சர்வீஸ் சார்ஜ் என இன்றைய நியாயம் சொல் கிறது. இந்த ஊழல், தொடர்பு சாதனங்களில் எப்படி அம்பலப் படுத்தப்படுகின்றது? அத்தகைய அம்பலப்படுத்தல்கள் நிகழும் பொழுது மக்கள் எந்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்?

ஊழலில் அதிகாரிகளும் சம்பந்தப்படுகிறார்கள். விஸ்கி பாட்டிலுக்கு இராணுவ ரகசியங்களைப் பகிர்ந்து கொண்ட அதிகாரிகள் குடியரசுத் தலைவர் மாளிகையிலே இருந்தனர். பெண்ணுக்காகவும், பணத்துக்காகவும் ராக்கெட் நுட்பத்தைக் கொடுத்த விஞ்ஞானிகள் உள்ளனர். அரசு அலுவலகங்கள் இன்னின்ன பதவிகளுக்கு இன்னின்ன ஊதிய விகிதங்கள் என (Pays Scales) இருப்பது போல ஊழல் விகிதங்கள் (corruption scales) உண்டு. இதே போல் அரசியல்வாதிகள் இலஞ்ச ஊழலில் திளைப்பதுண்டு. ஊழல் செய்தால் தான் அரசியல் வாதியாக இருக்க முடியும் என்ற நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. முந்திரா ஊழல் தொடங்கி இன்றைய டான்சி நில ஊழல் வரை பார்க்க முடிகிறது. பிரதமர் ராவுக்கு ஒரு கோடி இலஞ்சம் கொடுத் தேன் என பத்திரிகையாளர் கூட்டத்தில் சொன்ன பங்குத் தரகர் அர்சத் மேத்தா மீது மான நஷ்ட வழக்குக் கூடப் போட முடிய வில்லை. அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் கொடுக்கும் இலஞ்சப் புகார்கள் வெளிவருகின்றன. இவற்றில் பயனடைகிற பெரு முதலாளிகள், வணிகர்கள், ஒப்பந்தக்காரர் ஆகியோர் அம்பலப்படுவது இல்லை. அப்படியே அவர்கள் அம்பலப்பட்டு ஏதாவது ஒரு விசாரணைக்குழு முன் சாட்சியம் சொன்னாலும் இலஞ்சம் கொடுத்ததாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய இயலாது. அதுமட்டுமின்றி, இதுவரை விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு, எவரது இலஞ்ச சொத்தும் கைப்பற்றப்பட வில்லை. அதற்கு சட்டத்தில் வகை இருப்பினும் அது நிறை வேற்றப்படுவது இல்லை.

படிப்பகம்

padippakam



இலஞ்ச ஊழலை எதிர்த்து மக்கள் திரட்டப்படுகின்றனரா என்பது முக்கியமானதாகும். 1967 வரை நாட்டில் (கேரளாவில் இரண்டு ஆண்டுகள் தவிர) மத்தியிலும், மாநிலங்களிலும் காங்கிரசுக் கட்சியே ஆண்டது. காங்கிரசின் ஊழல்களை—முந்திரா ஊழல், பஞ்சாப் கெய்ரோன் ஊழல் போன்றவற்றை—எல்லா எதிர்க்கட்சிகளும் குறிப்பிட்டு ஓரளவு மக்களைத் திரட்டின. ஆனால் 1967-க்குப்பின் பல மாநிலங்களிலும் 19ˉ7க் குப்பின் மத்தியிலும் எதிர்க்கட்சிகள் ஆண்டன ஆண்டு கொண்டு வருகின்றன இதன் பின் எல்லாக் கட்சிகளின் ஊழல்களும் அம்பலமாயின. இப்போது இலக்கணம் மாறியது. இன்றைய எதிர்க் கட்சி, நாளைய ஆளும்கட்சி. எனவே ஆளும் கட்சிகளின் இலஞ்ச ஊழலை அம்பலப்படுத்தினாலும் அடக்கியே வாசித்தன. மக்கள் மத்தியில் அதை ஒரு பிரச்சனைக்குரியதாக மாற்றவில்லை மாற்ற விரும்பவில்லை. ஒரே இடத்திலேயே ஒரே காரியத்துக் காக அதிகமான தொகையை ஆளும் கட்சியும் குறைவான தொகையை எதிர்க்கட்சிகளும் வாங்க ஆரம்பித்தன.

எம் ஜி ஆரின் பல்கேரியக் கப்பல் பேர ஊழலைப் பற்றிக் கருணாநிதி பேசினால், கருணாநிதியின் சர்க்காரியா விசாரணைக் குழு விசாரித்த ஊழல்களைப் பற்றி எம்.ஜி.ஆர் பேசிவிடுவார். ஆனால் எம்.ஜி ஆரின் நீண்ட ஆட்சிக்காலத்தில் சர்க்காரியா விசாரணைக்குழு அறிக்கையை வைத்து கருணாநிதி மீது வழக்குப் போட முயற்சிக்கவே இல்லை. ஊழல் எதிர்ப்பு என்பதெல்லாம் ஆட்சிக்கு வரும் வரை என்பது தான். அதாவது ஆளும் கட்சியின் ஊழல் எதிர்க்கப்படுகிறதே தவிர; ஊழல் எதிர்க்கப்படுவது இல்லை.

இதற்கு ஏற்பவே தொடர்பு சாதனங்களில் தகவல்கள் திரட்டிக் கொடுக்கப்படுகின்றன. மக்கள் காலையில் பத்திரிகை படிக்கிறார்கள்; அல்லது, படிக்கப் பக்கம் நின்று கேட்கிறார்கள். முன்பு வானொலியில் செய்தி கேட்டார்கள். இப்போது தொலைக் காட்சியில் செய்தியைப் பார்த்துக் கேட்கிறார்கள். தினப்பத்திரிகைகள் பெரும்பாலும் அரசியல்வாதிகளின் அறிக்கை களைப் பிரிசுரித்தாலும் அவற்றைத் தம் நோக்கு நிலைகளிலேயே பிரிசுரிக்கின்றன. ஊழல் குறித்த வெளிப்படையான கருத்துகள் இல்லை. தினமணியைத் தவிர எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் தலையங்கம் எழுதுவதும் இல்லை.

ஜெயலலிதா மீது சுப்பிரமணிய சுவாமி ஊழல் புகார் என்ற தலைப்புச் செய்தியை கொட்டை எழுத்துகளில் பார்த்த

padippakam



கேட்டவுடன் அதைப்படிப்பதில்/கேட்பதில் ஒரு குஷி பிறந்து விடுகிறது. செய்தி உண்மையா பொய்யா, உண்மையாக இருப்பின் அதை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்த கவனங்களெல்லாம் திசைதிருப்பப்பட்டு விடுகின்றன. வாரப்பத்திரிகைகளோ இருவாரப் பத்திரிகைகளோ இதே செய்தியை இன்னும் கொஞ்சம் கூடுதலான விவரத்துடன் ராஜேஸ்குமார் துப்பறியும் கதை ஸ்டைலில் ரொம்பவும் சுவாரசியத்துடன் வருணித்துக் கொண்டே இருக்கும். அதைப் படிக்கும் பொழுது ஏதோ அந்தச் செய்தியை நம்மிடம் நேரே சொல்வது போன்ற உணர்வை ஊட்டுவது மட்டுமின்றி இத்தகைய ஏக ஜாலக் கில்லாடி வேலை செய்யும் பேர்வழிகள் மீது நமக்கு ஒருவித பிரமிப்பு ஏற்படுவதாகவும் அமைந்துவிடுகிறது. இதைப்படித்தவுடன் நமக்கு ஊழல் செய்த அரசியல்வாதி அதிகாரியின் அயோக்கியத்தனம் குறித்து எவ்விதக் கோபமும் ஏற்பட்டுவிடுவது இல்லை. ஏறத்தாழ நம்மை ஒரு பார்வையாளர் நிலையில் வைத்து நமது வரிப்பணமும் பொதுச்சொத்தும் கொள்ளை போவதை மூன்றாவது தரப்புக்குச் சொல்வது போல சொல்லப்படும்.

ஒரு அதிர்ச்சி யூட்டக் கூடிய புலனாய்வுக் கதையைப் படித்த நிறைவு ஏற்படுமே தவிர, நமது சொந்த வாழ்வின் சோக நிகழ்வுகளுக்கான காரணகர்த்தாக்களின் கடைந்தெடுத்த அயோக்கியத்தனத்தைப் படித்த உணர்வு ஏற்படாது.

இத்தகைய சமூக உளவியலை பத்திரிகை சாதனம் உருவாக்க முனைகிறது. இப்போது கட்சிகளுக்கென (கம்யூனிஸ்ட் கட்சி தவிர) பத்திரிகை கிடையாது. தமிழ்நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். தி.மு க வுக்கு முரசொலி இருக்கிறது, அதுவும் இப்போது சுருங்கிவிட்டது. மதுரைப்பதிப்பு இப்போது இல்லை. பிற கட்சிகளுக்கு எதுவும் இல்லை. தேவை ஏற்படவில்லை. ஏனைய செய்தித்தாள்களை அவ்வப்பொழுது பயன்படுத்திக் கொள்கின்றன. அவைகளும் மக்களைப் பார்வையாளர் நிலையில் வைத்து விடுகின்றன. அதுதான் அரசியல்வாதிகளின் விருப்பமும் கூட.

ஊழலை இன்றைக்கு எந்தக் கட்சியும் மக்கள் மன்றத்தின் முன் கொண்டு வர முனைவது இல்லை; மக்களின் செயலூக்க மிக்க எதிர்ப்புகளைக் கட்டவிழ்த்துவிட்டு ஊழல் எதிர்ப்பு இயக்கம் நடத்த முன்வருவது இல்லை. எந்தக் கட்சியும் முன் வர இயலாது என்பதே இன்றைய வரலாறு. பாராளுமன்றவாதக் கட்சிகள் எல்லாம் அதனதன் தன்மைகளுக்கேற்ப ஊழல்கள் செய்துள்ளன ஆனால் மக்களிடத்தில் உள்ள ஊழல் எதிர்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள நினைக்கின்றனர். அப்பொழுது கூட இந்த எதிர்ப்பைக் கொண்டு அணிதிரட்டுவது இல்லை. ஆளுநரிடம் புகார் மனுகொடுப்பது தொடங்கி பத்திரிகைகளுக்கு செய்தி கிடைத்து விடுகிறது. ஆளுநரிடம் கொடுத்ததில் என்ன உள்ளது, ஆளுநர் அனுமதி கொடுப்பாரா இல்லையா, இதற்கு மத்திய அரசைக் கேட்பாரா இல்லையா, மத்திய அரசு அனுமதிக்குமா இல்லையா என்பது தொடங்கி பல

படிப்பகம்

padippakam



ஊகங்கள்... புலனாய்வுகள்... சுவாரசியமான பேட்டிகள்... திடுக்கிடும் சம்பங்கள்— ஸ்கூப் செய்திகள்... ராத்திரி ரவுண்ட் அப்... என இத்தியாதி... இதிலும் மக்கள் பார்வையாளர்கள்/ படிக்கப் பக்கம் நின்று கேட்பவர்கள் அவ்வளவே... ஆளுநர் அனுமதி தரவில்லையென்றால் அனுமதி தரச் சொல்லி நீதி மன்றத்தில் வழக்குதாக்கல்...வழக்கு அனுமதிக்கப்படுமா படாதா, இடைக்காலத் தடை கிடைக்குமா கிடைக்காதா என்று பல ஊஞ்சலாடும் ஊகங்கள்... ஆளுநர் அனுமதி கொடுத்தாலும் அனுமதி தரக்கூடாது என்று வழக்கு தாக்கல்... பல சுவாரசியங்கள்... மர்ம முடிச்சுகளை அவிழ்த்தல்... என இப்படி தொடர்பு சாதனங்கள் மக்களை ஒரு நிலையில் வைத்துக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அரசியல் கட்சிகள் ஊழலைக் குறித்துக் கொண்டுள்ள நிலைபாட்டையே தொடர்பு சாதனங்கள் வெளிப் படுத்திக் கொண்டிருக்கின்றன மக்கள் இவற்றில் பார்வையாளர்கள். தங்களை யார் ஏறி மேய்வது என்பதைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை மட்டுமே படைத்தவர்கள். இப்படித்தான் அரசியல் வாதிகள் மக்களைக் பழக்கப்படுத்திக்கொண்டு இருக்கின்றனர்.

இது மக்களின் ஒருபக்கம். மக்களுக்கு இன்னொரு பக்கமும் உண்டு மக்கள் ஊழல் பேர்வழிகளை உதைத்து விரட்டி அனுப்பி இருக்கின்றனர். ஸ்பெயினிலும் பிலிப்பைன்சிலும் இது நடந்தது இந்தியாவிலும் இது நடக்குமா? நிச்சயம் நடக்கும் அதுவரை நாம்... □

---

## புன்னகை

*ஒரு புன்னகை...*
*அது—*
இதயத்தை நெருடும்
கண்ணீர் ஓடையைப்
பெருக்கெடுத்து ஓடச் செய்யும்,
ஒரு போராளியின் முகத்தில்
பூவாக மலரும்,
*எண்ணியதே இல்லை!*

*அந்த புன்னகை—*
*கத்தியை விடக் கூர்மையானது...*
*ரத்தத்தை விடப் பிரகாசமானது...*

*அந்த புன்னகை—*
ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.
*ரத்த காட்சியின் உதடுகளில்!*

## அம்மா

*அம்மா!*
ஏன் அழுகின்றாய்
இந்த கல்லறைக்கு
அருகில் நின்று
ஏனம்மா துக்கப் படுகின்றாய்?

உன் மகன் இங்கே இல்லை...
இதோ பார்......

அவன்
மக்களில் ஒருவனாகிவிட்டான்!

*(ஆந்திரப் புரட்சிக்கவிஞன் சிவசாகருடைய இரு கவிதைகள்.)*

படிப்பகம்

padippakam

**கோபன்ஹேகன் :**

# புதிய காலனிய சுரண்டலுக்கு தலைமையேற்கும் ஐக்கிய நாடுகள் சபை

**— மதன்**

சென்ற மார்ச் மாதம் கோபன்ஹேகனில் சமூக வளர்ச்சிக்கான உச்சி மாநாட்டை ஐ. நா. சபை முன்னின்று நடத்தியது. வறுமை, வேலையில்லா திண்டாட்டம், சுற்றுப்புற சீர்கேடு சமூகச் சீரழிவு ஆகிய அனைத்துவிதமான கொடுமைகளையும் ஒழிக்கப் போவதாக சர்வ தேச தலைவர்களும் அறிவித்தனர். ஆனால் யாருக்காக இந்த மாநாடு நடத்தப்பட்டதாக கூறப்பட்டதோ உலக சனத்தொகையில் பெருவாரியான அம்மக்களுக்கு இப்படி ஒரு மாநாடு நடப்பதே தெரியாது. இது வாடிக்கைதான். வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களுக்கும் வறுமை ஒழிப்புக்கான திட்டம் தீட்டுபவர்களுக்கும் என்றைக்குமே தொடர்பு இருந்ததில்லை. வருடத்திற்கு ஒரு முறை இவர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கு. ஆனால் சென்ற மார்ச் மாதம் 6—12 வரை கோபன்ஹேகனில் நடைபெற்ற சமூக வளர்ச்சி மாநாடு ஏற்கெனவே ஐ நா. வால் கூட்டப்பட்ட மாநாடுகளிலிருந்து மாறுபட்டது

பொதுவாக ஐ. நா. முன்னின்று நடத்துகின்ற மாநாடுகள் அனைத்தும் அதற்கு முந்தைய மாநாட்டு தீர்மானங்களின் தொடர்ச்சியாக விளக்கப்படுவது வழக்கம். ஆனால், இந்த மாநாட்டு தீர்மானம் முந்தைய மாநாட்டு தீர்மானங்களைப் பற்றி மௌனம் சாதிக்கிறது மட்டுமல்லாமல் வெளிப்படையாக புதிய காலனிய சுரண்டலின் ஊதுகுழலாகவும் மாறியுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கூட்டப்பட்ட ஐக்கிய நாட்டு சபை தனது உறுப்பு நாடுகளின் கடமைகளாக (i) இறையாண்மை, பிரதேச ஒற்றுமை, அரசியல் சுதந்திரம் (ii) சமத்துவமான இறையாண்மை (iii) ஒருவருக்கொருவர் தாக்குதல் நடத்தாமல் இருப்பது (iv) உள் நாட்டு விவகாரங்களில் தலையிடாமை v) சமாதான சகவாழ்வு (vi) ஆதிக்கத்திற்கு முயற்சிக்காமலும், பிரதேச ஆளுமை செலுத்தாமலும்

படிப்பகம்

padippakam



இருத்தல் (vii) வளர்ச்சிக்கு சர்வதேச ஒத்துழைப்பு ஆகிய வற்றை அறிவித்தன. இது எந்த அளவிற்கு சாத்தியப்படுத்தப் பட்டுள்ளது என்பது வேறு பிரச்சினை என்றாலும் மேற்சொன்ன கொள்கைகளுக்குட்பட்டு அனைத்து உறுப்பு நாடுகளும் நடந்து கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து ஐ. நா தீர்மானங்கள் வலியுறுத்தி வந்தன ஆனால், கோபன்ஹேகன் மாநாட்டுடன் ஐ. நா. வின உண்மை முகம் வெளிப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இயற்றப்பட்ட தீர்மானங்களுக்கு விரோதமாக இத்தீர்மானம் சர்வதேச சுரண்டலுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளித்து அதை பாதுகாப்பதை தனது கொள்கையாக அறிவித்துள்ளது.

உறுப்பு நாடுகளின் கடமைகளும், பொருளாதார உரிமை களும் என்ற ஐ. நா. தீர்மானத்தின் (1974) முதல் பாராவில்;

"ஒவ்வொரு நாட்டுக்கும் எந்த வடிவிலான வெளியார் தலையீடோ, அச்சுறுத்தலோ இல்லாமல், தனது நாட்டு மக்களின் விருப்பத்திற்கிணங்க அரசியல், பொருளாதார, சமூக கலாச்சார வடிவங்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான மறுக்க முடியாத உரிமையும், இறையாண்மையும் உள்ளது" என்று கூறுகிறது.

ஆனால் கோபன்ஹேகனில் இயற்றப்பட்டிருக்கும் தீர்மான மானது மனித இனத்துக்கு சாத்தியமான ஒரே பொருளாதார வடிவமாக 'சுதந்திர சந்தை' பொருளாதாரத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கிறது. ஆகையால், அனைவரும், குறிப்பாக ஏழைகளும் மிகவும் பின்தங்கியவர்களும் பங்கெடுக் கின்ற வகையில் தனது சந்தைகளை கட்டற்ற போட்டிக்கு திறந்து விடுமாறு அனைத்து நாடுகளையும் இத்தீர்மானம் கோருகிறது.

மேலும், இத்தீர்மானம் 'நல்ல ஆட்சிமுறைக்கும்' (Impor -tance of good governance) முக்கியத்துவம் அளிக்கிறது இது அரசியல், பொருளாதார வேறுபாடின்றி அனைத்து நாடுகளும் சமம், பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது போன்ற ஐ. நா கொள்கைகளை கேலிக்குரியதாக்குகிறது நல்ல ஆட்சி எது என்பதற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறையே கிடையாது. இப்படி ஒரு அம்சத்தை தீர்மானத்தில் சேர்த்திருப்பது மேலும் அபாயகரமான விளைவுகளை ஏற் படுத்தும். அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் தருகின்ற வரையறைகள் தான் கடைசியில் நல்ல அரசு எது என்று தீர்மானிக்கிற அளவுகோலாக மாறிவிடும்.

படிப்பகம்

padippakam



மேலே குறிப்பிட்ட இரண்டு அம்சங்களும் ஐ. நா. சபைக்கு அனைத்து நாடுகளின் உரிமையை பாதுகாக்கின்ற பொது சபை என்ற நிலையிலிருந்து ஒரு சில ஏகாதிபத்திய நாடுகளின் 'புதிய உலக ஒழுங்கை' பாதுகாக்கின்ற பொறுப்பை வழங்குகிறது. ஒவ்வொரு நாடும் தனது விருப்பத்திற்கிணங்க அரசியல், பொருளாதரர வடிவங்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை பறிக்கப்படுகிறது. அதை மறுக்கும் நாடுகள 'மோசமான ஆட்சி' எனும் பெயரில் சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு பணிய வைக்கப்படும். அமெரிக்கா எதேச்சாதிகாரமாக மேற்கொண்டு வந்த இராணு, பொருளாதார முற்றுகைகள் அனைத்தையும் இனி ஐ நா. வே முன்னின்று நடத்தும்.

இத்தீர்மானம் முதல் பகுதியில் சில புள்ளி விவரங்களைத் தருகிறது:

'முன்னெப்போதையும் விட அதிகமான வளர்ச்சியை நாம் பார்க்கின்ற அதே நேரத்தில் சொல்லொண்ணாத் துயரமும் அதிகமாகி வருகிறது. உலகத்தில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாழ்கின்றனர்; அதில் பாதிக்கும் அதிகமான வர்கள் தினமும் பட்டினி கிடப்பவர்கள் உலகம் பூராவும் சுமார் 120 மில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். ஏராள மான மக்கள், குறிப்பாக பெண்கள், சீரழிவிற்கும், தனிமைப்படு தலுக்கும், விளிம்பு நிலையிலும், வன்முறைக்கும், பாதுகாப்பின் மைக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

இப்புள்ளி விவரங்கள் முழுவதும் சரியல்ல என்றாலும் இச்சீரழிவுகள் இருப்பதாக ஒப்புக்கொள்கின்ற தீர்மானம் இதற் கான காரணங்களை எங்குமே குறிப்பிடவில்லை. ஆனால், சுதந்திர சந்தைப் பொருளாதாரம் சர்வதேசமயமாதலின் மூலம் இவைகள் தீர்க்கப்படும் என்று தீர்மானம் தெளிவாகக் கூறுகிறது. ஏற்கெனவே சுதந்திர வர்த்தகத்தை முழுமையாகக் கடைபிடித்து வரும் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 35 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வேலையில்லாமல் தவிக் கின்றனர். நியூயார்க்கில் செயல்படும் சமூக சேவை சங்கத்தின் கூற்றுப்படி நியூயார்க் நகாத்தில் மட்டும் ஆறில் ஒருவர் வறுமை யில் வாழ்கின்றனர். அதில் ஒரு லட்சத்திற்கு அதிகமானோர் குடி இருக்க இட மில்லாமல் நடைபாதையில் தஞ்சம் புகுந்துள்ளனர். நடைபாதையில் வாழும் உரிமை கூட தற்போது பறிக்கப்பட்டு வருகிறது.

சுதந்திர வர்த்தகம் அதன் தாய் நாட்டிலேயே ஆறில் ஒருவரை விளிம்பு நிலைக்கு தள்ளியுள்ள நிலையில் ஏழை நாடுகள்

படிப்பகம்

padippakam



சுதந்திர வர்த்தகத்திற்குள் நுழைவது அச்சமூகங்களில் எந்த அளவு மோசமான எதிர் விளைவுகளை ஏற்படுத்துமென்று நாம் கற்பனை செய்ய முடியாது.

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஆலைகளில் இருந்து வெளியேற்றப்பட்டு வேலையில்லா பட்டாளத்துடன் சேர்க்கப் பட்டுள்ளதும்; தொழிற்சாலைகள் மூடப்படுவதும்; விளை நிலங் கள் பழத்தோட்டங்களாகவும், இறால் பண்ணைகளாகவும் மாற்றப்பட்டுள்ளதும்; கல்வி லாப நோக்கத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளதும்; சிறுவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு வேலைச்சுமை யிலும், விபச்சாரங்களிலும் ஈடுபடுத்தப்படுவதும்; நகரங்கள் பலூன்போல பெரிசாவதும் கிராமங்கள் விவசாயத்திற்கு பாது காப்பில்லாமல் தேய்வதும்; இவைகள் தான் சமீபகாலமாக நமது நாட்டில் வளர்ந்து வருகின்ற பிரச்சனை. அரிசி ஏற்றுமதி செய்து கொண்டிருந்த தென் கொரியா அரிசி பற்றாக்குறையால் தவிக் கிறது சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்ட அனைத்து நாடுகளும் இறையாண்மை இழந்து, மேற்கத்திய நாடு களிடம் கையேந்தி நிற்கின்றன.

இப்படி சுதந்திர வர்த்தகத்தால் சமூக வளர்ச்சி குன்றி வரும் நாடுகளை மேலும் தீவிரமாக சுதந்திர வர்த்தகத்தில் ஈடு பட ஐ.நா. தீர்மானம் அறிவுரை கூறுகிறது. மெக்சிக்கோவின் அனுபவங்கள் மறைக்கப்படுகிறது. ஒவ்வாமைக்கு ஒவ்வாத பொருளையே சாப்பிடச் சொல்லுகிறது இந்த புதிய மருத்துவம். மேலும், 'சர்வதேசமயமாதலை' தகவல் தொடர்பு வளர்ச்சியின் விளைவு என்று இத்தீர்மானம் கூறுகிறது. 'இரும்புக் கோட்டை களின்' வீழ்ச்சி சுதந்திர வர்த்தகத்தின் பயன்களை அனைவரும் தெரிந்து கொள்ள வாய்ப்பளித்திருக்கிறது என்று கூறுகிறது.

மேலும், சர்வதேசமயமாதலால் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வு, நாடுகளுக்கிடையிலும், உள்ளேயும் ஏற்பட்டுள்ள அன்னியமாதல் ஆகியவற்றை குறிப்பிட்டு இவைகளுக்கு தீர்வாக மாரக்கேஷ் ஒப்பந்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்து மாறு தீர்மானம் கூறுகிறது. ஆனால், வறுமை ஒழிப்பு, வேலை யில்லாமையை குறைத்தல், மூன்றாம் உலகநாடுகளின் சமூகச் சிதறல்களை தடுத்தல் ஆகிய நடவடிக்கைக்கும் மாரக்கேஷ் ஒப்பந்தத்திற்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லை? இந்தியா வந்திருந்த அமெரிக்க வர்த்தகச் செயலர் டோனிப்ரவுன் உண்மையைச் சொன்னார். அமெரிக்க ஏற்றுமதி அதிகரித்தால் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். அதனால் தான்

படிப்பகம்

padippakam



சமூக வளர்ச்சி ஒப்பந்தத்தில் உருகுவே சுற்று மற்றும் மாரக்கேஷ் ஒப்பந்தங்களை அமல்படுத்த வற்புறுத்தப்படுகிறது.

IMF மற்றும் IBRD-யால் முன்மொழியப்பட்ட SAP (structural adjustment programme) மற்றும் GATT அமைப்புகள் ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார தேக்க நிலையை உடைப்பதற்கு திட்டமிட்டு மூன்றாம் உலக நாடுகள் மீது திணித்தவைகளாகும். சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சி இதை இன்று மேலும் தீவிரப் படுத்தியுள்ளது. SAP என்பது எழுபதுகளின் கடைசியில் நிதி நிறுவனங்களான IMF மற்றும் IBRD ஆகியவற்றால் உருவாக்கப் பட்டது. இது மூன்றாம் உலக நாடுகளை ஏகாதிபத்திய பொருளாதார வலைக்குள் வீழவைப்பதற்கான தந்திரம். SAP வேலையின்மை ஒழிப்பையும், சமூக முன்னேற்ற நோக்கத்தையும் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. SAP அறிமுகப்படுத்தப் பட்ட 70 நாடுகளில் ஏற்பட்டுள்ள சீரழிவுகளைப்பற்றி இத்தீர் மானம் மௌனம் சாதிக்கிறது. மேலும் ஒட்டுமொத்த உலக வர்த்தகத்தைவிட 30%அதிகம் விற்பனை செய்கின்ற ஐந்து நாடுகளைச் சார்ந்த 172 TNC-க்கள் பற்றியும் இத்தீர்மானம் மௌனம் சாதிக்கிறது.

உலகப் பொருளாதாரத்தை தன் பிடிக்குள் வைத்திருக்கும் இந்நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானம் எந்த வழி முறையையும் சொல்லவில்லை. ஆனால், ஏழைகளும், பின் தங்கிய வர்களும் சமமாக சுதந்திர வர்த்தகத்தில் பங்கு கொள்ள வேண்டு மென்று கூறுகிறது. இது பூனையையும், எலியையும் போட்டி யிடச் சொல்வதற்கு ஒப்பானதாகும்.

சமூக வளர்ச்சிக்கு திட்டமிடுவது இத்தீர்மானத்தின் நோக்கமல்ல. இந்த மாநாட்டை முன்னின்று நடத்தியவர்களின் ஆதிக்க மனப்பான்மைதான் இதில் வெளிப்படுகிறது. GNP-யில் 0.7% வளர்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் 20 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இன்னொருபுறம் ஆண்டுதோறும் இராணுவச் செலவுகள் அதிகரிக்கப்படுகின்றன. இந்நிலையில் இனிமேல் எந்த நாடும் தனது விருப்பத்திற்கேற்ப பொருளாதார திட்டங்களை திட்ட வும், சமூக வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தவும் உரிமை மறுக்கப்படுகிறது. சமூக வளர்ச்சிக்கான உச்சி மாநாடு என்கிற பெயரில் சமூக வளர்ச்சியை தடைப்படுத்துகின்ற புதிய காலனிய சுரண்டலை தீவிரமாக்குகின்ற நடைமுறைக்கு இம்மாநாடு மூலம் ஐ.நா.சபை தலைமை பாத்திரம் ஏற்றுள்ளது. □

படிப்பகம்

padippakam

# 'செவாலியே' சிவாஜி

பிரஞ்சு மொழியில் ''செவாலியே'' என்பதற்கு ''மாவீரன்'' என்று பொருள். பிரான்சை ஆண்ட மாவீரன் நெப்போலியனால் 1802ம் ஆண்டு இவ்விருது ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பலவகைகளில் அபார சாதனைகள் புரிந்த இராணுவ வீரர்கள் மட்டுமே இவ் விருதைப் பெற்றுவந்தனர். 1957-ம் ஆண்டு முதல் கல்வி, கலை இலக்கியம் போன்ற பிரிவுகளில் சாதனை படைத்த வர்களுக்கும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு இவ்விருது இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது. 'செவாலியே' விருது பெறும் முதல் ஆசிய நடிகர் சிவாஜிகணேசன்தான்.

ஓட்டு அரசியலில் பிரகாசிக்க முடியவில்லை எனி னும், நடிப்புத்துறையில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர். இவர் ஏற்று நடித்துள்ள பாத்திரங்கள் வெவ்வேறானவை. ஆரம்பக் காலங்களில் மிகையாக நடிக்கின்றார் என்ற குற்றச்சாட்டும் எழுந்த துண்டு. 'தெய்வமகன்' திரைப்படத்தைப் பார்த்த விருது குழுவினர் அப்படத்தில் அவர் நடித்த மூன்று விதமான பாத்திரங்களை ஒருவரே ஏற்று நடிக்க வில்லையென்றும், வேறு வேறு நபர்கள்தான் நடித்தனர் என்றும் நம்பின ராம். பின் உண்மையை உணர்ந்து பாராட்டினராம். இத்தகைய ஒரு தமிழ் நடிகருக்கு தமிழக அரசும், மைய அரசும் இதுவரை சிறந்த நடிகருக்கான பரிசை வழங்கி கௌரவிக்கவில்லை என்பது வருத்தத்துக்குரியதே.

இனியாவது மைய மாநில அரசுகள் கண் விழிக்குமா?

□□

கொச்சைத்தனம் மிக்க வர்த்தக சூதாடிகளின் கரங்களில் சினிமாக்கலை சிக்கியிருக்கும் வரை நன்மை யைக் காட்டிலும் தீமையே அதிகம்.

—லெனின்

படிப்பகம்

padippakam

# பாழும் நினைவுகள் பாறையாக...

செயலலிதா திரைப்படங்களில் இரண்டு வேடங்களுக்கு மேல் போட்டதில்லை. இப்போது ஒரே நேரத்தில் நிறைய வேடங்கள் போடும் நிலைமை ஆகிவிட்டது. அண்மைக்காலத்தில் ஆதி திராவிட சாதி மக்களைக் காப்பதாக ஒரு வேடம். நம்மை அறியாமலே செயலலிதா ஆட்சிக் காலத்தில் நடந்தவை எல்லாம் நினைவுக்கு வந்து தொலைக்கின்றன.

- சிதம்பரம் பத்மினி போலீஸ் நிலையத்திலேயே கணவன் முன்னரே கற்பழிக்கப்பட்டார். இவர் தாழ்த்தப்பட்ட சமூகத்துப் பெண்.

- அந்தியூர் விசயா போலீஸ் வெறியர்களால் கற்பழிக்கப் பட்டார். இவர் பழங்குடி சமூகப் பெண்.

- திருவரங்கம் கோயில் கருவறைக்குள் தாழ்த்தப்பட்டோர் உட்பட சில தோழர் நுழைய முயற்சிக்கும் பொழுது கொலை வெறியோடு அவர்களைத் தாக்கிய பார்ப்பனப் பூசாரிகளுக்கு நட்ட ஈடு; தாக்கப்பட்ட தோழர்கள் மீது கொலை வழக்கு.

- ஆர். எஸ். எஸ். கட்டிடம் வெடிகுண்டு வெடித்ததனால் மரணமடைந்த ஆர். எஸ். எஸ். சேவகருக்கு இழப்பீடு ரூ. 1 இலட்சம்.

  டேங்கர் லாரி விபத்தில் மரண மடைந்த தாழ்த்தப்பட்டோருக்கு இழப்பீடு ரூ 25 ஆயிரம் மட்டுமே!

- அருணாசலம் என்ற கோடீசுவரர், தாழ்த்தப்பட்ட சாதியினர். இன்றைக்கு மத்திய மந்திரி, கோடீசுவரர் என்றெல்லாம் செயலலிதா கவனிக்கவில்லை. தன் தனி விமானத்தில் இந்தாளு வருவதா... என இறக்கி விட்டார்.

- காரணை பஞ்சமி நிலப் போராட்டத்தில் அம்பேத்கர் சிலை வைக்கவிடாமல் போலீஸ் தடுக்க முயன்றதைக் கண்டித்த எதிர்ப்பில் துப்பாக்கி சூடு. தாழ்த்தப்பட்டோர் இருவர் சாவு.

படிப்பகம்

padippakam



- இளையபெருமாளின் மனித உரிமைக் கட்சியோடு செயலலிதா கூட்டு சேர்ந்தார். இளைய பெருமாள் கட்சியில் 2 பேர் எம்.எல்.ஏ.க்கள் ஆனார்கள். இப்போது அவர் களைத் தம் கட்சிக்குள் செயலலிதா இழுத்துக் கொண்டார்.

- பசும்பொன் மாவட்டம், தேவகோட்டை, திருவாடனைப் பகுதிகளில் கோயிலுக்குள் நுழைய முயன்றதனால் பள்ளர் கள் மீது தாக்குதல் தொடுத்த உயர்சாதி ஆதிக்கவாதிகளுக் குப் பாதுகாப்பு கொடுத்தது செயலலிதா அரசு; பள்ளர் களின் உரிமைக்காகப் போராடிய தோழர் சுப்பு வெட்டிக் கொல்லப்பட்டார். இவர் தாழ்ந்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர்.

- இன்றைக்கும் உசிலம்பட்டி, திட்டக்குடி, பெண்ணாகரம் இலால்குடி போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்டோர் மீது, கொலை வெறித்தாக்குதல்கள் நடந்து கொண்டுதான் இருக் கின்றன.

- பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தீண்டாமைத் தடுப்பு வழக்கு கள் இங்கு பதிவாகியுள்ளன. அவைகள் தீர்ப்புக்காக காத்திருக்கின்றன.

இவ்வளவு கொடுமைகள் நிறைந்த சூழலில் சுப்பிரமணிய சாமி 3 மாதங்களுக்கு முன்பு கொடுத்த ஒரு பேட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரை சர்வதேசப் பறையர் எனச் சொன்னமைக்கு 'திருடன் நுழைந்த ஏழு நாள் கழிச்சு நாய் குலைச்சது போல' இப்போது வழக்குப் பதிவு. பின் சாமி மன்னிப்புக் கேட்டதால் வழக்கு தள்ளுபடியாம். தாழ்த்தப் பட்டோரின் நலன்கள் காக்கும் அன்னை அரசாங்கம் அல்லவா?

வீரமணி இப்போதும் தயாராக இருக்கிறார்: தாழ்த்தப் பட்டோர் மானம் காத்த தங்கமே எனப் பட்டம் கொடுப்பதற்கு. அமைச்சர் பெருமக்கள் ஏற்கெனவே எழுதிய துதிகளில் இதையும் சேர்த்துக்கொள்வார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் இன்ன மும் நாய் பேய் பன்றி என்ற அபச் சொல்லைக் கேட்டுக் கொண் டிருக்க வேண்டியது அவர்களது தலைவிதியா? இல்லை என்பதே இன்றைய வரலாறாக இருக்கட்டும்! □

படிப்பகம்

padippakam

நம்பிக் கையை ஊட்டுகின்றன.

இந்தியா ஆழமான நெடுக்கடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. புதிய பொருளாதாரக் கொள்கை பெரும் பான்மை மக்களை நசுக்குகிறது. எல்லாக் கட்சிகளுமே கோடிக்கணக்கில் சுருட்டிய லஞ்சப் பணத்தை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு ஏழை மக்களின்வாக்குகளை கபளீகரம் செய்ய துடித்துக் கொண்டிருக்கின்றன. மதவெறியை கிளப்பினால் இப்போது வெற்றி கிடைக்குமா எனத் தயக்கம் இருந்தாலும் பாரதிய சனதா அதைக் கையில் வைத்துக் கொண்டுள்ளது. சேதப்பட்டுள்ள தேசிய முன்னணியைத் தூக்கி நிறுத்தவும் அதற்கு பாராளுமன்றக் கம்யூனிஸ்டுகள் முட்டுக் கொடுக்கவும் தயாராகவுள்ளன. இந்தக் கட்சிக்கு மாற்று அந்தக் கட்சியென ஓட்டு போட்டு அலுத்துபோய்விட்டனர் மக்கள். நமக்கு நிறைய அனுபவம் கிடைத்து இருக்கிறது. ஐம்பது ஆண்டுகால சுதந்திர அனுபவம்....அடிமை அனுபவம்தானே.

தமிழகத்தில் சனநாயக வாதிகள், ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினர் புரட்சி யாளர் ஆகியோரை தடா வழக்குகளில் மீண்டும் மீணடும் சிக்கவைத்துக் கொண்டிருக் கிறது ஜெயலலிதா அரசு. யாரும் சிந்திக்கக் கூடாது என்பதுதான் இவர் அரசின் சித்தாந்தம்.

வேலைக்குப் போ
சாப்பிடு
மலங்கழி
தூங்கு

என ஓர் கவிதையில் ஆத்மாநாம் குறிப்பிட்டார். மக்களுக்காக சிந்திக்கும் சிந்தனையாளர்களின் கைகளை கட்டுப் போடுகிறது பாசிச அரசாங்கம். துதிபாடிகள் குழவும், ஜால்ராக்கள் சப்தமிடவும் இங்கே ஒரு காட்டாட்சி நடக்கிறது. அதிகாரிக ளுக்கும் அமைச்சர்களுக்கும் முதுகு கூனிப் போய்விட்டது. தமிழகத்தில் ஓர் அவ மரியாதைக் கலாச்சாரம் அரியணையேறியுள்ளது. தி.மு.க நம்மோடு வருமா என காங்கிரசும், காங்கிரசு நம்மோடு சேருமா என தி.மு.க.வும் அலைகின்றன. அ.தி.மு.கவோ தேசிய முன்னணியில் இணையத் துடிக்கிறது. பதவியும் பணமும் அரசியல் வாதிகளிடம், அதிகாரமும் லஞ்சமும் அதிகாரிகளிடம். மக்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், நிம்மதியான வாழ்க்கை, சிந்தனை சுதந்திரம்... இவைகள் மக்களாட்சி என்ற பெயரில் மக்களுக்கு மறுக்கப்படுகின்றன.

தமிழக அரசியலில் திடுக்கிடும் சம்பங்கள்... ஜெயலலிதா மீது வழக்குத் தொடர சு.சாமிக்கு அனுமதி - ஆளுநர் மீது தாக்குதல் - உயர் நீதிமன்ற வளாகத்தில் நிர்வான நடனங்கள். சாமி மீது தாக்குதல் - வீரப்பன் வேட்டைப் புகழ் தேவாரம் சாமியைக் கைது செய்ய முயற்சி, சாமி தப்பியோடல் - உச்ச நீதி மன்றம் ஆளுநர் அனுமதிக்கு இடைக் கால தடை விதிப்பு.. வெறும் பார்வையாளர்களாக மட்டும் மக்கள். ஊழலே உருவான அதிகாரவர்க்க அரசு யந்திரத்தின் பிரதிநிதிகளான சு.சாமியோ, சேஷனோ, கைர்னரோ மக்களுக்கு நியாயத்தை வழங்கி விட முடியாது.

பாசிச ஜெயலலிதாவிற்கு பதில் கருணாநிதியோ, கோபால்சாமியோ யார் தான் வந் தாலும் இந்த அதிகார வர்க்க அரசு யந்திரம் நீடிக்கிற வரை மக்கள் நிம்மதியாக வாழ முடியாது. ஒட்டுமொத்தமாக இந்த அரசு யந்திரத்தையே வீழ்த்தி அதனிடத்தில் மக்கள் தங்களுக்கான சனநாயக அரசை தாங்களே நிறுவிக்கொள்ளும்போது மட்டுமே விடுதலை கிடைக்கும்.

படிப்பகம்

padippakam

MAKKAL THALAM R. No. TN TAM 3291/94.

# ஒரே கூரையின் கீழே....

ஒரே கூரையின் கீழே
நீயும் நானும்.

ஒரே தொழுவத்தில் தான்
உன் குடலும்
என் குடலும்
கட்டப்பட்டிருக்கின்றன.

உனக்கென்றோர் இடமும்
எனக்கென்றோர் இடமும்

உனக்குக் கீழே நானும்
எனக்குக் கீழே பலரும்
படிப்படியாக

என் கன்னத்தில் அறைய
உனக்கும்
இன்னொருவன் கன்னத்தில்
அறைய எனக்கும்
உரிமையுண்டு.
உயர்பு, தாழ்வுகள்
நமக்குள் ஆயிரம்

என் முகத்தில்
எட்டியுதைக்கும்
என் நண்பனே.

உன்னையும்
என்னையும்
சேர்த்து மிதிக்கும்
ரட்சசப் பாதங்களை
என்ன செய்யப் போகிறாய்?

உன்னைச் சுற்றிலும்
என்னைச் சுற்றிலும்
நாற்றத்தை
விஷத்தை
விதைத்த கரங்களை
என்ன செய்யப் போகிறாய்?

உனக்கும் எனக்கும்
நல்ல காற்றைக் கூட
மறுக்கும்
நாய்களை என்ன
செய்யப் போகிறாய்?

என் முகத்தில்
நீ காறியுமிழ்ந்தால்
உன் முகத்தை
யார் துடைப்பது?

எனக்கு விழிகள்
இல்லையென்றால்
உனக்கேது ஒளி?

நமது கரங்கள்
உயரட்டும் ஒன்றாக!
நமது குரல்கள்
ஒலிக்கட்டும் ஒன்றாக!!

நம்மைப் பிரித்த
சுவர்களை
உடைத்தெறிவோம்

புதிய தென்றல்
பூபாளம் இசைக்கும்

- புதிய ஜீவா

படிப்பகம்